
www.tamilarangam.net
சூரியப்புதல்வர்கள்
நவம்பர் 27
மாவீரர்நாள் '95

www.tamilarangam.net



இதயத்தில் -
இனத்தின் விடுதலை
கரத்தில் -
ஒரு தேசத்தின் வரலாறு
சுதந்திர வாசல்வரை
இவன்
சுவடுகள் ஓயாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாவீரர் நாள்

கருமேகம் கூடக் கசிந்து, விழிசிந்தும்
நள்ளிரவுப் போதில் நாதமணிச் சத்தம்.
கல்லறைக்கு முன்பாக நெய்விளக்குப் பந்தம்
நெஞ்சத்துணர்வினிலே.... நெக்குருகி,
கண்களிலே எங்கும் நீர்க்கோலம்.
"மாவீரர்நாள்"
எம் மண்
திரும்பத் திரும்பத் தீக்குளிக்கும் தினம்.
"பிடரியில், தட்டி விரட்டி அடிக்கலாம்
தராசுத் தட்டில் நிறுத்தும் வாங்கலாம்"
இப்படி மாற்றான் எண்ணிய தமிழனை
புலியென நினைத்து கிலிகொள வைத்த
"பிள்ளைகள்" நினைவில் உருகிடும் நாளிது.
கல்லறை தழுவும் காற்றே வருக!
காவியநாயகர் மூச்சைத் தருக!



www.tamilarangam.net

# சருகாக நெரிபட்ட தமிழனை மலையாக நிமிரச் செய்தவர்கள் மாவீரர்கள்



எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்றைய நாள் மாவீரர் நாள். இன்றைய நாளை நாம் எமது தியாகிகளின் திருநாளாக, எமது தேசத்தின் பெருநாளாக, எமது போராட்டத்தின் எழுச்சி நாளாகக் கொண்டாடுகிறோம்.

எமது தேசம் விடுதலைபெற வேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, தன்னாட்சி உரிமைபெற்று தன்மானத்துடன் வாழவேண்டும் என்ற உயரிய இலட்சியத்திற்காகத் தமது இன்னுயிரை ஈகம் செய்த எம்முயிர்ப் போராளிகளை, நாம் எமது இதயக் கோவிலில் பூசிக்கும் புனித நாள் இன்று.

உலக வரலாற்றில் எங்குமே, எப்பொழுதுமே நிகழ்ந்திராத அற்புதமான தியாகங்கள் இந்த மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன. மனித ஈகத்தின் உச்சங்களை எமது போராட்ட வரலாறு தொட்டு நிற்கிறது. இந்த மகோன்னதமான தியாக வரலாற்றைப் படைத்தவர்கள் எமது மாவீரர்கள்.

விடுதலை என்பது ஒரு அக்னிப் பிரவேசம்; நெருப்பு நதிகளை நீந்திக் கடக்கும் நீண்ட பயணம்; தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம். இந்த விடுதலை வேள்விக்கு தமது உயிரை ஈகம் செய்தவர்கள் மாவீரர்கள்.

தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டு போன வீர மரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது; அடிமைத்தனத்தின் அமைதியைக் குலைத்துக் கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந்தான்; அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுங்காலமாகத் தூங்கிக்கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக் கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்.

எமது விடுதலைக் காப்பியத்தின் ஒவ்வொரு அத்தியாயத்திலும், ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு பந்தியிலும் எமது மாவீரர்களின் தியாக வரலாறு நெருப்பு வரிகளால் எழுதப்பட்டிருக்கிறது.

விடுதலைக்காக, எமது தேசம் மதிப்பிடமுடியாத பெரு விலையைக் கொடுத்திருக்கிறது; விடுதலைக்காக, இந்த மண்ணில் இரத்த ஆறு ஓடியிருக்கிறது; விடுதலைக்காக, இந்தப் பூமி ரணகளமாக மாறியிருக்கிறது; விடுதலைக்காக, எமது வீரர்கள் இன்றும் செத்துக் கொண்டே இருக்கிறார்கள். இந்த நிலத்தில் புதையுண்டிருக்கும் ஆயிரமாயிரம் சமாதிக் கற்களும் விடுதலையையே குறியீடு செய்து நிற்கின்றன. வீதிகளில், சந்துகளில், சுவர்களில் நாம் சந்திக்கும் மாவீரர்களது திருவுருவங்களும் விடுதலையின் சாட்சிகளாகவே எமக்குக் காட்சி தருகின்றன.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின், 1994-ம் ஆண்டு மாவீரர் நாள் செய்தியிலிருந்து.

www.tamilarangam.net

# மாவீரர் புரியும் சத்திய யுத்தம்



மாவீரர் காண்பது கனவு அல்ல; அவரது பெருமன விரிவு; ஆன்ம விசாலம்; யதார்த்தத்தின் அகாலிப்பு; காலம் கடந்து நிற்கும் உண்மையின் விஸ்வரூபம். கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும், பழமையையும், புதுமையையும் இணைத்து நிற்கும் மனப் பாலம். தமிழ்த் தேசியம் என்ற வரையறையான, எல்லைக் கோட்டை நாம் வரைந்த போதிலும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்த நாகரிகத் தளத்தில் எழுந்தது அவர்களின் எண்ணம். இதனைத்தான் விடுதலை என்போம்.

காலம், இடம் கடந்து நிற்கும் மாவீரரது மன எல்லைப் பரப்பின் காரணமாக அவர்கள் வாழும் போது தன்னலப் பற்றற்று, சுயத்தை வென்று வாழமுடிகிறது; போராட முடிகிறது. மரணமும் அவர்களுக்கு இன்னொரு வாழ்வாக இருக்கிறது. அவர்களது வாழ்வும், மரணமும் காலப் பெருவெளியில் நிதர்சன நிகழ்வுகளாகவே நிலை பெறுகின்றன. எனவேதான் அவர்கள் சிரித்துக்கொண்டு தீக்குளிக் கிறார்கள். மரணம் அவர்களைத் தீண்டுவதில்லை.

மக்கள் அவர்களைப்பற்றி பல்வேறு விதமாகப் பேசுவார்கள். காவல் தெய்வம் என்று வணங்குவார்கள். தம் முற்றத்தில் பூக்கும் மலர்களென இயற்கை வழிபாடு செய்வார்கள். சூரியனென்றும், சந்திரனென்றும், விடிவெள்ளி என்றும் பிரபஞ்ச முழுமைக்குள் வைத்துப் பார்ப்பார்கள். தம் மண்ணின் அனைத்துப் பொருள்களிலும் அவர்கள் நிறைந்திருப்பதாக நினைத்துக் கொள்வார்கள். மாவீரரை நிலையான, அருவ, ரூப வடிவங்களில் பரவிப் போற்றுவார்கள். மாவீரர் நினைவு, உறுதியையும், சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி முன்னேறிச் செல்வதற்கான உத்வேகத்தையும் தருவதால், மனங் களில் ஒளியாக ஏற்றி வைத்திருப்பார்கள். தங்கள் சந்ததிகளும் சிறப்புடன் வாழ மாவீரர் உரம் தருவர் என்ற நம்பிக்கையில், அவர்தம் நினைவைத் தொடர்ந்து வரும் பரம்பரைகளுக்கும் மனவழி மாற்றுவார்கள். எனவே மாவீரர் நினைவு, சத்தியத்தின் இருப்பாக நிலைத்து விடுகிறது.

தமிழீழத் தேசியக் களரியில் இது நடைபெற்ற போதும், விடுதலை என்ற நிலையான உண்மையை அடைவதற்கான மாவீரரது தர்ம யுத்தமாக இப் போராட்டம் அமைகிறது. எனவே எமது விடுதலைப் போராட்டத்துக்குத் தோல்வி என்பதே இல்லை. இதில் ஈடுபடும் எமக்கும் வெற்றியே தவிர வேறில்லை.

- திலகர்

www.tamilarangam.net

# தீயினில் எரியாத தீபங்கள்

"தீயினில் எரியாத தீபங்களே - எங்கள்
தேசத்தில் நிலையான வேதங்களே
மண்ணினில் விதையான முத்துக்களே - நாங்கள்
மாதவம் செய்து பெற்ற சொத்துக்களே."

எமது தாயகத்தை நோக்கிய பாதையும், பயணமும் தமிழீழம் எமக்கிட்ட கட்டளையாகும். கால்நூற்றாண்டு காலமாக நமது அறவழி சார்ந்த போக்கும், போராட்டமும் எதிரியின் உள்ளங்களை ஊடுருவிச் சென்று உறைக்கவில்லை. அவனால் தருமத்தின் குரலான எங்களின் குரல்களை உணர முடியவில்லை. மாறி மாறி வந்த சிறீலங்கா அரசின், ஆட்சியாளர்களின் இனவாதப் போக்கினால் எமது போராட்டம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாறாகத் தமிழினத்தையும், தமிழர் தாயகத்தையும் முற்றாக அழித்து விடுவதிலேயே அவர்கள் முனைப்புக் கொண்டிருந்தனர். இந்த வேளையில் 'ஆயுதமேந்திய போராட்டத்தைத் தவிர வேறு மார்க்கம் கிடையாது' என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள், எதிரி எந்த ஆயுதங்களை ஏதுமறியாத தமிழர்கள் மீது ஏவி விட்டானோ அதே ஆயுதங்களின் முனைகளை அவனுக்கு எதிராகத் திருப்பினர்.

அன்றிலிருந்து எமது மண் விடுதலைக்காக குருதியால் குளிப்பாட்டப்படுகின்றது. சமரென்று வந்தாலே சாவு சாத்தியமாகின்றது. தீச்சுடரில் விட்டில் பூச்சிகள் தீய்ந்து போவது போன்றதல்ல எமது போராட்டம். வெறும் காற்றிலே கைகள் வீசி நடப்பது போன்றதல்ல எங்கள் வழித்தடம். எமது இனத்தின் விடிவுக்காக, வெளிச்சத்துக்காக உயிரிலிருந்து எதையும் இழக்கும் உணர்வு இருக்கிறதே, அந்தத் தற்கொடையே உலகத்தை, தமிழீழத்தை உற்றுப்பார்க்க வைத்தது.


எமது மாவீரர்களின் விதம் விதமான வீரச்சாவுகள் இருக்கிறதே அது வரிகளால் எழுத முடியாத வரலாறு. உடனே உலர்ந்து போகும் மையினால் உணரவைக்க முடியாத உணர்வுகள்.

விடுதலைக்காக விழி மூடிப் போகும் வீரர்களை நாம் 'மாவீரர்கள்' என்று அழைக்கின்றோம். அவர்கள் நித்திய உறக்கத்திலிருக்கும் இடங்களை 'மாவீரர் துயிலும் இல்லங்கள்' என்று புனிதப்படுத்துகிறோம்.

நள்ளிரவில் நாதமணி ஒலியெழுப்புவதும், நினைவுச் சுடர்களை ஏற்றுவதும், கல்லறைகளுக்கு முன்னால் நின்று கண்ணீர் சிந்துவதும், அஞ்சலிக்காகக் குனிந்துகொண்ட தலைகளை மீண்டும் நிமிர்த்திக் கொள்வதும் வெறும் சடங்காகவோ, சம்பிரதாயமாகவோ செய்வதல்ல; 'உங்கள் பாதையில் நாங்கள் தொடருகின்றோம்' என்ற உறுதியை எமக்குள்ளே எடுத்துக் கொள்வதற்கும், எங்கள் தலைவனின் கரங்களை இன்னும் இறுக்கமாகப் பற்றிக் கொண்டு, அந்தத் தலைவனுடன் எங்கள் பாதை பிசகாத பயணத்தில் தொடர்ந்தும் முன்னேறுவோம் என்று முரசு அறைவதற்குமாகவே.

ஒரு விதை, ஒன்று பத்தாவது போல வீரச்சாவடைந்த ஒவ்வொரு மாவீரனும் பத்துப் போராளிகளை உருவாக்குகின்றான் என்பதை உலகுக்கு உணர்த்துகின்றோம். அதனால்தான் மாவீரர்கள் புதைக்கப்படுவதாக நாம் புலம்புவதில்லை. அவர்கள் விதைக்கப்படுகிறார்கள் என்று வீரம் கொள்கின்றோம்.

எல்லோரும் வாருங்கள். இன்னும் இன்னும் எத்தனை விலை கொடுத்தாலும் விடுதலையை வென்றெடுப்போம்.



## உறுதியின் உறைவிடத்தில்

உங்கள் கால்கள் தேடிய
'எல்லையை' அடையும் வரை
உங்கள் கரங்கள் ஏந்திய
துப்பாக்கி பார்த்த குறியை நோக்கி
உங்கள் இதயம் சுமந்த
'இலட்சிய தாகத்தை' சுமந்த
உங்கள் உதடுகள் சொல்லத் துடித்த
தேசிய கீதத்தை சொல்வதற்காய்,
நீங்கள் சுவாசிக்க நினைத்த
'சுதந்திரக் காற்றைத்' தேடிக்கொண்டு
உங்கள் கண்கள் கண்ட
'கனவு'களை நனவாக்க
உங்கள் காதுகள் கேட்ட
அதே, அதே.... 'கட்டளை'யின் கீழ்
நாங்களும் உங்களை நோக்கித்தான்!
உங்களுக்காக
நாங்கள் சமர்ப்பிக்கத் துடிப்பது
'வீரவணக்கங்களை' மட்டுமல்ல
தமிழீழத்தின்
'விடுதலை'யையும் சேர்த்துத்தான்

www.tamilarangam.net



# ஜனனமும் மரணமும் விடுதலைக்காக!

நவம்பர் 27

மாவீரர் நாள்

எம் மண்ணுக்கு வீரம் விளைந்து விட்டது என்பதை உரத்த குரலெடுத்து உலகுக்குச் சொல்லிய நாள்.

அடக்கி வைத்து, எம்மை இனியும் ஆள முடியாதென்று அந்நியருக்கு அறைகூவல் விடுத்த நாள்.

உயிர் கொடுத்தே உரிமையைப் பெறமுடியும் என்பதை முதற் சாவு மூலம் முரசறைந்த நாள்.

ஆம்! மாவீரர் நாள்

தமிழீழத்தின் தேசிய நாள்.

சத்தியநாதன் என்ற லெப். சங்கர், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் போராட்ட வரலாற்றில் முதற் சாவை இன்றுதான் சந்தித்தான்.

ஒரு காலத்தில் எதிரி எட்டி எட்டி உதைக்கவும், காலுக்கு முத்தமிட்டுக் கிடந்தது எங்கள் இனம்.

காலிமுகத் திடலிலும், கச்சேரி வாசலிலும் ஆயுதமற்று அறப் போர் செய்த எங்கள் இனத்தை குண்டாந் தடியாலும், துப்பாக்கிப் பிடியாலும் தாக்கித் தூக்கியெறிந்தது சிங்களப் பேரினவாதம்.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு பஸ்ஸில் புறப்பட்டால் பத்து இடத்திலாவது தமிழரை இறக்கி 'நீங்கள் யார்?' என்று கேட்பது போல அடையாள அட்டை பார்ப்பார்கள். வரிசையில் நிற்கவைத்து கேள்விகள் கேட்பார்கள். எங்கள் தங்கைகளைத் தடுத்து வைத்து, 'குண்டு கொண்டு போகின்றாயா?' என்று இரட்டை அர்த்தத்தில் பரிகசிப்பார்கள்.

இத்தனையையும் கூனிக்குறுகிப் பொறுத்துக் கொண்டு என்ன செய்வது என்று வழி தெரியாது இருளில் கிடந்தது எங்கள் இனம்.

நவம்பர் 26-ம் நாள் இவற்றையெல்லாம் இல்லாமல் செய்யும் வழி காட்டவென்று வல்வைக் கடற்கரையில் ஒரு பிள்ளை விழி திறந்தது.

நவம்பர் 27-ம் நாள் இவற்றையெல்லாம் இல்லாமற் செய்ய இரத்தம் சிந்தாமல், உயிரை விலைகொடுக்காமல் விடிவில்லை என்பதைக்கூறி ஒரு பிள்ளை விழி மூடியது.

இங்கு ஜனனமும், மரணமும் விடுதலைக்கான விளைபொருட்களாயின.

இன்று பல்லாயிரக்கணக்கான மாவீரர்கள், தமிழீழ விடுதலையென்னும் தங்கள் கனவுகள் நனவாகும் என்ற நம்பிக்கையில், சுதந்திரம் பெறும் நாளில் எங்கள் தலைவன் ஏற்றப் போகும் தேசியக் கொடி காற்றில் அசையும் காட்சியைக் காண்பதற்காக கல்லறைக்குள்ளே கண்மூடிக் காத்திருக்கின்றார்கள்.

ஒவ்வொரு மாவீரர் நாட்களிலும் நள்ளிரவில் கேட்கும் நாதமணிச் சத்தம், 'விடுதலை பெற்றது தமிழீழம்' என்பதை தங்களுக்கு வந்து சொல்லுமென்று எதிர்பார்த்துக் கொண்டும், தங்கள் கல்லறையில் நாங்கள் ஏற்றும் நெய்விளக்குச் சுடரில் தமிழீழத்தின் வரைபடத்தையே கண்டு களிப்படைந்து கொண்டுமிருக்கின்றனர்.

மாவீரர் துயிலும் இல்லங்கள், மாவீரர்கள் புதைத்த இடங்களாக நாம் எண்ணக்கூடாது. தமிழீழம் என்று கிடைக்குமென்று ஏங்குபவர்கள் தூங்குமிடங்களாகக் கொள்ளுவோம்.

அந்தப் புனித இடத்தில் பூக்களை வைப்பது மட்டுமல்ல எங்கள் கடமை. கூப்பிய கரங்களுடன், விழி சொரிவது மட்டும்தான் எங்கள் பணியாகக் கொள்ளல் ஆகாது.

தமிழீழத்தைப் பெற்று, மாவீரர்களின் தாளடியில் வைப்பதே நாங்கள் அவர்களுக்குச் செய்யும் வரலாற்றுக் கடமையாகும்.

அலங்கார வளைவுகள், அர்த்த ராத்திரியில் நெய்விளக்குகள், கண்ணீர் மாலைகள் எல்லாம் சம்பிரதாயச் சடங்குகளாக மாறக் கூடாது.

அடுத்த மாவீரர்நாள் விடுதலை பெற்ற மண்ணில் என்று நாங்கள் ஒவ்வொருவரும் சபதமேற்றுக் கொள்ளவேண்டும். இதையே இலக்காகக் கொண்டு நாங்கள் நகரத் தொடங்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திரும்பிப் பார்க்கிறோம்



சுதந்திரத்தின் சிகரத்தை நோக்கிய எங்கள் நெடும் பயணம், கண்ணுக்குள் விரிகிறது. அந்த நெடுவழிப்பாதை எழ எழ விழுந்து, விழ விழ எழுந்து... எத்தனை இன்னல்கள், எத்தனை சவால்கள், எத்தனை அழுத்தங்கள், எத்தனை குழிபறிப்புக்கள்.. எல்லாவற்றையுமே எகிறிக் கடந்து எழ எழ விழுந்து விழ விழ எழுந்து...

திரும்பிப் பார்க்கின்றோம்.

இரத்தத்தையும், சாம்பர் மேடுகளையும், சவப்பெட்டிகளையும் தமிழனுக்குத் தந்தவர்களின் தலைவாசல்களுக்கு கண்ணீரையும், கதறலையும், துன்பப்படுவதென்றால் எப்படி இருக்குமென்பதையும் தமிழன் திரும்பவும் பரிசளித்து...

திரும்பிப் பார்கின்றோம்.

தேடிப் போய் கையேந்தி நின்ற தமிழனை அடித்து விரட்டியவர்களை, தேடி வந்து கையேந்தி நின்று தமிழனிடம் "அடிக்காதீர்கள்" என இரக்க வைத்து..

திரும்பிப் பார்க்கின்றோம்.

ஆகா..! என்ன ஒரு ஆச்சரியம்..! எங்களையே அசத்திவிட்ட அதிசயம்..! நம்பமுடியாமலல்லவா இருக்கின்றது... எப்படி இது நிகழ்ந்தது..? பிரமிக்க வைக்கின்றதே! நினைக்கையில் உயிர் சில்லிடுகின்றது.. நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க எங்கள் கண்களுக்கு முன்னாலேயே.... இது காலமாற்றமா? இல்லை.

இது மாற்றப்பட்ட காலம்!

திரும்பிப் பார்க்கின்றோம்.

இந்தப் புதுயுகத்தின் பிரசவத்திற்காக எங்கள் தேசம் செலுத்திய விலை மதிப்பற்ற பெறுமதி..

ஒன்றா... இரண்டா...

அத்திவாரக் கற்களாக, தாங்கும் தூண்களாக, உச்சியின் முகடுகளாக, முகடுகளின் கிரீடமாக, கிரீடத்தில் பதித்த முத்துக்களாக.. தேசத்தின் நிர்மாணிப்பிற்காக நாங்கள் இழந்த இரத்தக் கனிகள்.. எத்தனை... எத்தனை....

சாதாரண சுக வாழ்வின் பற்றுதல்களை உதறியவர்கள்; தனிப்பட்ட சுய வாழ்வின் இலட்சியங்களைத் துறந்தவர்கள்; இனிய இளமை வாழ்வின் கனவுகளை மறந்தவர்கள்; தங்கள் அறிவு, ஆற்றல்கள், திறமைகள் அனைத்தையும் தாயக மண்ணுக்காய்த் தந்தவர்கள்; மக்களின் விமோசனத்திற்காக மரணத்திற்குள் வாழ்ந்தவர்கள்.

போர்முனையிலும் அவற்றுக்கு அப்பாலும் நாங்கள் சாதித்த ஒவ்வொரு மகத்தான வெற்றிக்காகவும், உயிர்த்துடிப்போடு உழைத்து விழிமூடிய எங்கள் நெஞ்சினிய நண்பர்கள்.

தமிழீழத்தை - தமிழனுக்கென்றோர் தனியரசை - தமிழினத்தின் தன்னாட்சியை - மட்டுமே ஆத்மார்த்தமான தாகமாகத் தங்களது ஆன்மாவில் சுமந்தவர்கள்; அதற்காகவே வாழ்ந்தவர்கள் - போராடினார்கள்; வீழ்ந்தார்கள்.

45 ஆண்டுகளாக இறுமாந்துகொண்டிருந்த சிங்கள தேசத்தின் பேரினவாதச் சிந்தனைக்கு தாயக மண்ணில் புலிகள் பலத்த அடிகளைக் கொடுத்தார்கள்.

களத்தில் வீழ்ந்து, அந்தக் களங்களிற்காகவும் வீழ்ந்து, தாயக வெற்றிக்கு மகுடம் சூட்டினார்கள் எங்கள் நெருப்புக் குழந்தைகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உன் பூமி அழைக்கின்றது

- சாந்தினி சந்திரன்

'அன்பு நண்பா,
அதிகாலை கனவுகளுடன் - நீ
அழகு பார்த்த நிலத்தை,
தன் அகோரப்பசிக்கு இரையாக்கி...
யார் அங்கே அசைந்தவன்
அன்னிய அரக்கன்?

காற்றுடன் கதைபேசி - நீ
கைவீசி நடந்த போது
காலை வணக்கம் சொன்ன உன்
சோலை மரங்களை அழித்து
சுடுகாடாக்கி...
யார் அவன் போனவன்
பொல்லாத விரோதி?

சந்தோஷக் கனவுகளுடன் - எம்
சந்ததி வாழ்ந்த
சந்து பொந்தெல்லாம்
இரத்தமும் சகதியும் இறைத்தது யார்?
ஓ நண்பா....
எப்போதாவது கற்களில் முட்டிக் கொண்டு
கதறிய காலங்களை தவிர - நாம்
காயங்களை காணாதவர்கள்
ஆனால் கண்டோம்
பீறிடும் இரத்தங்களை
பீரங்கி வேட்டுக்கள்
சீறிடும் போது கண்டோம்!
எரிகுண்டு வீச்சில்
எம் மக்கள்
கரியுண்ட காட்சியை - எம்
இருகண்ணால் கண்டோம்!!
ஆம்,
பொன் மாலை நேரங்களில்
கண்பார்த்த கருஞ்சிவப்பை - எம்
மண் மீது ஊர்மக்கள்
உடல் சிதறிய போது
இரத்தச் சிவப்பாய் கண்டோம்!!

இப்படித்தான் ஒருநாளில்
இடிவிழுந்த போது - ஓர்
அழகான தேசத்தை விட்டு
அகதியான என் நண்பனே
தோற்றுப்போனது நீயும் நானும் தான்
நமது தேசமல்ல



நாம் அகரத்தை ஆரம்பித்த
அழகான மண்ணை - அந்த
அன்னிய அரக்கன்
அழிக்கவிடுவதோ?...
அங்கே பார்
மண்ணுக்காய் உயிர்கொடுக்கும்
நம் மகாத்மாக்களை
மக்களுக்காக தம் உடல் சிதறும்
மகத்தானவரை
மண் விடிவிற்காய் விதையான
மாவீரர்களை பார்!...

எம் பூமிக்கு விடிவு தரும்
புதிய சூரியர்களை பார் நண்பா!

யார் அங்கே!
மேற்கின் எல்லையை
மெதுவாய் இழுத்து மூடுங்கள்
இவர்கள் மாலையில் மறையும்
வேளைச் சூரியரல்ல - எம்
மண்ணுக்காய் வாழும்
காலச்சூரியர்!!

மண்ணின் விடுதலைக்கு - இந்த
மறவர் ஈவது
விஞ்ஞான யுகத்தில்
தொட்டதும் படபடக்கும்
வெடியாயுதமல்ல நண்பா
விந்தையோ என
இவ்வுலகே வியக்கும்
விலைமதிப்பில்லா
உயிர் ஆயுதம்!
இந்த உன்னத கொடையினால்
உடல் சிலிர்த்து - உன்
இனிய நிலம் மெல்ல உயிர்க்கிறது.

மரணத்தை உயிர்ப்பித்த
மாவீர மறவரினால்
நோவினை மறந்து பூமி
மெல்ல நிமிர்கிறது.

www.tamilarangam.net

வரண்ட வயல்வெளிகள்
திரண்டு பூக்க
பட்டுப்போனவை அனைத்தும்
மொட்டு விட
எங்கள் நிலம் விடிகிறது!!
ஓ நண்பா,
பூக்களையே கனவுகாணும் - அந்த
புதியயுகம் பிறக்கின்றது.

எங்கள் தேசத்தெருக்களில் எல்லாம்
தேசியகீதம் ஒலிக்கிறது
அந்த சுதந்திர இசையில்
இன்ப சுகம் பிறக்கிறது
தமிழீழப் பிரகடனம் உன்
தாய் மண்ணில் நடக்கிறது!!

விடுதலை கவி ஓங்கி ஒலிக்கிறது
அந்த விண்ணுக்கே காதுகள் சிலிர்க்கிறது
அதோ
வீரதாகத்துடன்
மார்பை நிமிர்த்தி எங்கள்
புலிக்கொடி பறக்கிறது
நண்பா உன்னை அகதி என்றவன்
காது அலற
உன் முகவரியை முழக்கமிடு!
ஓடி வா நண்பனே
உற்றமும் சுற்றமும் நீ
ஓடி விளையாடிய
முற்றமும்
நலமா என்று
சுகம் கேட்கலாம்
உன் வெந்த இதயத்தின்
வேதனைக் கதை கேட்ட
வெள்ளை நண்பனுக்கு - உன்
சொந்த முகவரியைத் தந்து
புறப்படு நண்பா
உன்
பூமி அழைக்கின்றது.

# கடலுக்கு அணை போட்டு கண்களை மூடியவர்

எமது மண்ணை மீட்டெடுக்க தங்கள் உயிரை தாரைவார்த்தவர்கள் தான் மாவீரர்.

தமிழினத்தின் கருவையே இலங்கைத் தீவில் இருந்து கிள்ளி எறிந்துவிட வேண்டும் என்ற இனவெறிக் கொள்கையோடு, இன்று நேற்றல்ல, புலிகள் பிறக்கு முன்னரே சிங்கள அரசியல் பிறந்து விட்டது.

கொதிக்கும் தார்ப்பீப்பாவுக்குள் துடிக்கத் துடிக்க தமிழ் குழந்தையை போட்டுக் கொன்றார்கள். சிங்கள இனவெறி அன்றே நடைமுறைக்கு வந்து விட்டது.

இணைப்பு என்பது சிங்கள இனவாத அரசியல் அகராதியில் தமிழின அழிப்பு என்று அமைந்துள்ளதை உணர்ந்து தமிழன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எழுந்த போது பிறந்ததே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு.

நீதியும் நேர்மையும் மனித நெறிகளும் கூறும் நியாயத்தின் தேடுதலே எமது போராட்டம்.

இந்த வகையில் அத்துமீறிய சிங்கள ஆக்கிரமிப்புக் கால்களை வெட்டிவீழ்த்தி மண்ணைப்பாதுகாக்கும் எமது வழி உலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வழியே.

உலகத்தின் பார்வையிலும் சரி நீதியின் பார்வையிலும் சரி நாம் தூக்கியுள்ள ஆயுதம் நீதியை நிலைநிறுத்த எழுந்துள்ள தூண்.

உலகத்தை ஈழத்தின் பால் திருப்ப ஈழப் பிரச்சினையாக, நீதியின் அறைகூவலாக எதிரொலிக்கச் செய்ய எத்தனை ஆயிரம் உயிர்கள் ஆகுதி செய்யப்பட்டுள்ளன.

இனவாத அரசின் சூழ்ச்சிகளுக்குப் பலியாகாமல், விவேகமாக திட்டமிட்டு சரியான வழியில் எம்மை அழைத்துச் செல்லும் எமது தலைவரின் வழி நடத்தலும், தலைவர் காட்டிய வழியில் துணிவோடு செயற்பட்டு மாவீரரான மகத்தான ஆன்மாக்களும்தான் இன்று உலகத்தை ஈழத்தின் பால் திருப்பியுள்ளன.

அன்று, இலங்கைத் தீவில் எல்லா மூலையிலும் தமிழன் சிங்கள இனவாத சக்தியால் அடித்து நொறுக்கப்பட்டவனே. இன்று, இலங்கைத் தீவின் சந்து பொந்திலும் கூட தமிழன் வெடித்து நின்று மானம் காக்கிறான்.

கடல் அலைபோல் இனவாத இராணுவம் படையெடுத்தாலும் அணைபோட்டு விலையாக உயிர் நீப்போம் என்று தூய்மையே உருவாக தமிழ் நிலம் காத்து - தங்களையே தந்து எதிரியை வென்ற மாவீரரை எண்ணுகின்ற நாள் இது.

புலிகள் இயக்கம் என்பது தமிழீழ தேசிய படை என்ற உன்னத நிலைக்கு இன்று உயர்ந்துள்ளது.

புலிகள், உயிரினும் மேலாக தமிழீழ மக்களை நேசிக்கிறார்கள் என்பதற்கு இரத்த சாட்சியானவர் நமது மாவீரர்.

இந்த நாளில் நமது தேசத்தின் அடிமை விலங்குடைக்க உயிர் கொடுத்த மாவீரரை அஞ்சலிப்போம்.

இரண்டு நாடுகளின் இராணுவக் கடல் எமது விடுதலை உணர்வை மூழ்கடிக்க இரைந்து வந்துள்ளன.

அந்த கடல்களுக்கு அணைபோட்டு கண்களை மூடிக் காற்றாகி எங்கள் சுவாசத்தில் கரைந்து இரத்தமாகி உயிரோட்டம் தரும் உன்னத ஆன்மாக்களை அஞ்சலித்து நிமிர்வோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**
**ஜேர்மன் பணிமனை**

www.tamilarangam.net

# போகும் இடம் தெரியும்

**வீ. மணிவண்ணன்**



அவன் மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடிக்கொண்டிருந்தான். இயற்கையாகவே நல்ல ஓட்டக்காரன். ஆனால் இன்று ஓடும் ஓட்டம் எந்தவொரு ஓட்டப் போட்டியிலுமே அவன் ஓடாதது. ரவுண்சுகளும் ஷெல்களும் பின்னால் கலைத்துக் கொண்டு வர ஓடுவது இதுதான் முதல் தடவை.

'என்ர கடவுளே! எப்படியாவது தப்ப வேணும்' இதுதான் அவனது மனதுக்குள் ஒலித்தது. ஒரு ஒழுங்கையைக் கடந்து தென்னந் தோட்டமொன்றினூடாக வேகமாக ஓடினான். அவனுக்கு முன்னே பின்னே என்று எல்லா இடங்களிலும் எறிகணைகள் வீழ்ந்து கொண்டிருந்தன. எங்கே போகிறேன் என்பது நிச்சயமாக அவனுக்குத் தெரியாது.

அடிக்கிற ரவுண்சுகளும் எறிகணைகளும் அவனை நோக்கியே வீசப்பட்டன போலிருந்தது. "ஏன் எனக்குப் போய் இப்படி அடிக்கிறாங்கள்" என்று மனதிலொரு வினா எழும் பினாலும் "ஆமிக்காரன் என்றால் இப்படித்தான்" என்று மனமே பதில் சொல்ல, அவன் ஓட்டத்தை நிறுத்தவில்லை.

தென்னந்தோட்டத்தின் முடிவில் முட்கம்பி வேலி போன்று காணப்பட்டது. "ஏன் தான் இப்படி வேலியளை அடைக்கிறான்களோ" என்று காணிக்காரன் மீது கோபப்பட்டான். ஆடு, மாடுகள் பூக்கன்றை மேயாமல் இருக்க வென்று கிளுவந்தடி கொண்டு தான் வேலி அடைத்ததும் இன்று காலை அதனைப் பாய அவன்பட்ட கஸ்ரத்தையும் நினைக்க அவனுக்கு தன்மீதே வெறுப்பு ஏற்பட்டது.

காலையில் கிளுவந்தடி கீறிக் கிழித்த போது அவன் அதனைக் கவனிக்கவில்லை. இப்போது முள்ளுக்கம்பி அவனைக் கொழுவியிழுத்துக் கீறியபோது கூட அவன் பொருட்படுத்தவில்லை. தப்பி ஓட வேண்டும் என்பதைத் தவிர மனதில் வேறு ஏதும் நிற்கவில்லை. முள்ளுக்கம்பி வேலியைத் தாண்டியவுடன் வயல் வெளியொன்று முன்னே தெரிந்தது.

"எங்கையண்ணை இப்படி ஓடுறியள்..?" அவன் திடுக்கிட்டுப் போனான். கை, கால் எல்லாம் பதற முன்னுக்கு உற்றுப் பார்த்தான். வயல்வெளியின் முடிவையண்டிய தோட்டக்கரையில் நிலையெடுத்த வண்ணம் பல பெண் போராளிகள் இருந்தனர். அவன் ஓடிய ஓட்டத்தில் அவர்களைக் கவனியாது அவர்களின் முன்பகுதிக் காவலரணையும் தாண்டி வந்திருந்தான். பல்வேறு வயது எல்லைகளைக் கொண்ட பெண்போராளிகள் அவனை அனுதாபத்துடனும் சிரிப்புடனும் பார்த்தார்கள்.

அவனுக்கோ என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. "ஆ.. ஆ.. ஆமி!" என்றான்.

வாய் குழறியது. அவர்கள் சிரித்தார்கள். அவனுக்கு மனதுக்குள் கோபம் வந்தது. "நான் பட்டபாடு இவர்களுக்கு என்ன தெரியும்?" மனதை அடக்கிக் கொண்டு மீண்டும் மெதுவாக ஓட முற்பட்டான்.

"எவ்வளவு காலத்துக்கு இப்படி ஓடப் போறீங்கள்..?"

மென்மையான குரலொன்று இவனைப் பார்த்துக் கேட்டது. அவனுக்கு அவமானமாகவும் வெட்கமாகவும் இருந்தது.

"ஓடாமல் என்ன செய்யிறது?" நிச்சயமாக அது ஒரு நல்ல பதில் இல்லை என்பதை அவன் உணர்ந்திருந்தான்.

ஆனாலும் இந்த இடத்தைவிட்டு அகல வேண்டும் என்பதற்காகச் சொன்னான்.

ஓட்டமும் நடையுமாக அவன் விரைந்து கொண்டிருந்தான். "இந்தப் பிள்ளையள் தன்னைப் பார்த்து என்ன கேள்வி கேட்டு விட்டார்கள்" என்று மனதுக்குள் பொருமினான். கடைசியாக கதைத்த அந்தப் பெண் போராளியின் குரல் எங்கேயோ கேட்ட மாதிரிக் கிடந்தது என்று யோசித்தான். அந்த முகத்தை நினைவுபடுத்த முயன்றான்.

"அட சுமங்கலா" இப்போது அவனுக்கு நினைவுக்கு வந்து விட்டது. இவனுடன் தான் அவள் ஒன்றாகப் படித்தவள்.

சுமங்கலா சென்ற வருடம் திடீரென ஒரு நாள் காணாமல் போய் விட்டாள். தாய், தகப்பன் எல்லோரும் ஓடித்திரிந்த பின்னர் தான் அவள் இயக்கத்திற்கு போய் விட்டாள் என்பது தெரியும். முதலில் அவனுக்கு இந்தச் செய்தி அதிர்ச்சியாக இருந்தது.. 'முட்டாள் பெட்டை' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

ஆனால் இன்றோ சுமங்கலாவை அடையாளம் காணாமல் அவளுக்கு முன்னாலே ஓடி வந்ததை நினைக்க வெட்கமாக இருந்தது. அவள் தன்னைப் பற்றி என்ன நினைத்

www.tamilarangam.net

திருப்பாள்? பாடசாலையைப் பொறுத்த வரையில் விளையாட்டுக்களில் அவன் சிறந்த வீரனாக இருந்தான். ஓட்டம், உயரம் பாய்தல், நீளம்பாய்தல் எல்லாம் அவனது பிரதான களங்களாக இருந்தன. சென்ற வருடம் மாவட்ட மட்டத்திலே முதல் மூன்று இடங்களிற்கு வந்திருந்தான். இதுகால வரையிலும் பாடசாலை, ரியூசன் வட்டங்களில் அவன் ஒரு வீரனாகவே கருதப்பட்டான். ஆனால் இன்று சுமங்கலாவிற்கு முன்னால் கோழை போல ஓடி வந்ததை நினைக்க வெட்கமாகவும் அவமானமாகவும் இருந்தது. உடலெல்லாம் கூனிக்குறுகியது.

ஆனால் "ஓடாமல் வேறு என்ன செய்வது..?" என்று மனம் சமாதானப்படுத்தியது. கடவுளே! இன்று காலையில் நடந்ததை நினைத்தால்.. திடீரென அம்மாவும், தங்கச்சியும், தம்பியும் நினைவுக்கு வந்தார்கள். மனம் பகீரென்றது. "என்ன காரியம் செய்துவிட்டேன்...." அவர்கள் என்ன ஆனார்கள் என்பதைப் பற்றி எதனையும் கவனிக்காமல் ஓடி வந்திருக்கிறான். நெஞ்சுக்கூட்டிலிருந்து ஏதோ கழன்று விழுவது போல கடும் வேதனையாக இருந்தது. தலை சுற்றியது. அப்படியே நிலத்தில் சரிந்தான்.

★★★

சண்டிலிப்பாய்தான் அவனது சொந்த இடம். சண்டிலிப்பாய்ச் சந்திக்கும் தொட்டிலடிச் சந்திக்கும் இடையிலுள்ள ஒரு பகுதியில் அவனது வீடு அமைந்திருந்தது. பிரதான சாலையிலிருந்து நூறு மீற்றர் தள்ளி ஒரு ஒழுங்கையினூடாகச் சென்றால் அவனது வீடு வரும். இங்குதான் அவனது அப்பா சிவப்பிரகாசமும், அம்மா கமலாதேவியும் குடியிருந்தனர். மூத்த ஆண்பிள்ளை என்றபடியால் அவனுக்குச் செல்லமாக செல்வராஜா என்று பெயர் வைத்தார்கள். அவனை வீட்டில் "ராஜா" என்றும் நண்பர்கள் "செல்வா" என்றும் செல்லமாக அழைப்பார்கள். செல்வராஜாவுக்குத் தம்பியும் ஒரு

# எங்களின் சூரியர்

**- விவேக்**

காலத்தால் செதுக்கப்பட்ட
சிலைகளல்ல இவர்கள்
ஒரு காலத்தைச் செதுக்கிய
சிற்பிகள்!
காற்றுக்கும் திசையினை
கற்றுக் கொடுப்பவர்கள்.
கனவுகள் இவர்களுக்கில்லை
இவர்கள் எதிரியின் கனவுகள்.

சூரியன் வந்து சுடுவதில்லை
வெப்பம் இவர்கள்
விழிகளின் உருவாக்கம்

காட்டு மரங்களே கூரை
மண்மேடுகள்
மலரணைகள்.


பனியில் குளிரெடுத்தால்
பகைவனின் பீரங்கிகளை எரித்தே
குளிர் காய்வர்.

எதிரியின் எல்லைகள்
இவர்களின்
விளையாட்டுத் திடல்கள்.

எதிர்கொள்ளும் இரவுகள்
திருவிழாக்கள்
போரிடும் இரவெல்லாம்
தீபாவளிகள்.

மரணம் இவர்களை
தொடுவதற்கு அஞ்சும்
கால்களில் விழுந்து
மண்டியிடும்

கைகளில் கிடப்பது
துப்பாக்கிகள் அல்ல;
வரலாற்றின் நெம்புகோல்கள்.



www.tamilarangam.net

மாறுடைக் கூட்டத்தின்
மண்டைக் குழியில்
கேள்விக் குறியும்
வயிற்றுப் பரப்பில்
பசியின் நெருப்பும்
நரம்புத் திசுவில்
மானச் சூடும்
உடம்புத் தசையில்
உணர்வுப் பிழம்பும்
நிமிர்ந்த எலும்பில்
இரும்பின் உருக்கும்
விடுகின்ற மூச்சில்
வெக்கையின் தகிப்பும்
விழிக்கின்ற கண்ணில்
எரிந்திடும் சினமும்
எழுகின்ற போது
மதில்கள்
மண்தூசாகிப் போகும்
பீரங்கிகள்
பிணமாய்த் துவண்டு விழும்
கோட்டைகள்
குப்புறக் கிடக்கும்
வரலாறு
தன் பயணம் தொடரும்.....



தங்கையும் மட்டுந்தான். கடைசியாக தங்கை பிறந்ததினால் அவன் தங்கையில் உயிரையே வைத்திருந்தான். தங்கையின் கடைசிப் பிறந்த தினத்திற்கு கூட அவனுக்கு அப்பா வெளி நாட்டிலிருந்து அனுப்பும் 'பொக்கற் மணி'யில் மிச்சம் பிடித்து ஒரு கைக்கடிகாரம் வாங்கிக் கொடுத்தான். அவ்வளவு பாசம். அவன் இடைக்கிடை சண்டை போடுவதானால் தம்பி யுவராஜனுடன்தான். ஆனாலும் அவன் மீதும் பாசம் வைத்திருந்தான்.

அரசாங்கப் பணியில் கடமையாற்றிய சிவப்பிரகாசம் இடையிலேயே 'பென்சன்' எடுத்துக்கொண்டு உழைப்பிற்காக அவுஸ்தி ரேலியா சென்றுவிட்டார். அங்கு அவர் கணணியைப் பற்றிப் படித்து இப்போது ஒரு நிறுவனத்தில் கை நிறையச் சம்பளம் வாங்கும் ஊழியராகக் கடமையாற்றுகிறார். சிவப்பிரகா சத்திற்குத் தற்போது அவுஸ்ரேலியா பிரஜா வுரிமை கிடைத்துவிட்டது. அவர் தனது குடும்பத்தை அங்கே அழைப்பதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால் கமலாதேவியோ பரம்பரையாக வாழ்ந்த வீட்டை விட்டுப் போவதற்கு சற்றே னும் விரும்பாதவள். அவள் ஒரு பழைய சைவ நம்பிக்கைகளைக் கொண்ட குடும்பத் தைச் சார்ந்தவள். இதனால்தானோ என் னவோ பிள்ளைகளது படிப்பில் கூடிய கவன மெடுத்து வேறு விடயங்களில் ஈடுபட விடாமல் கண்டிப்பாக படிப்பித்து வந்தாள். இதனால் படிப்பைத் தவிர வெளியுலக விடயங்களேதும் பெரிதும் தெரியாத வீட்டுப் பூச்சிகளாகவே பிள்ளைகள் வளர்க்கப்பட் டார்கள். செல்வராஜாவுக்கு மட்டும் விளை யாட்டுப் போட்டிகளில் விளையாட அனு மதி வழங்கியிருந்தாள். இந்த வருடம் அது வும் இல்லை.

செல்வராஜா மானிப்பாய் இந்துக் கல்லூ ரியில் உயர்தர கணிதப் பிரிவில் படித்துக் கொண்டிருந்தான். ஓ. எல்லில் அவன் நல்ல பெறுபேறுகளைப் பெற்றதால் உயர்தரத்திலும் பல்கலைக்கழகம் செல்லக்கூடியவன் என எல்லோரும் எதிர்பார்த்தார்கள். செல்வ ராஜாவும் அதற்கு ஏற்றாற் போல கடுமை யாகப் படித்து வந்தான். இடையில் வந்த சமாதானத்தின் பலனாக அவனது அப்பா அவுஸ்திரேலியாவிலிருந்து அனுப்பிய 'சோலார்' விளக்கு அவனது படிப்பிற்கு கைகொடுத்தது. மண்ணெண்ணெய்ப் புகை யிலிருந்து விடுதலை. பெற்றோர்கள் காட்டிய அக்கறைக்கும் ஊக்கத்திற்கும் ஏற்ப அவன் படித்தான். தாயார் விரும்பியது போலவே பொறியியலாளராக வருவதே அவனது இலட்சியமாக இருந்தது. போராட்டம் குறித்து அவன் பெரிதும் அக்கறை காட்ட வில்லை. அவனது குடும்பத்திலோ அல்லது உறவினர்களிலோ எவரும் இயக்கத்தில் இருக்காதது ஒரு காரணமாக இருக்கலாம். இயக்கத்திற்குப் போகிறவர்களைக் குறித்து அவனுக்கு ஆச்சரியமாகவும் புதிராகவும் இருந்தது. படிக்க முடியாதவர்களும் கஸ்ரப் படுகிறவர்களும்தான் இயக்கத்திற்கு போகி றார்கள் என அவன் தனக்குள் முடிவெடுத் துக் கொண்டிருந்தான். சுமங்கலா இயக்கத் திற்கு போனது இவனுக்கு ஒரு தாக்கமாக இருந்தது. அத்துடன் இவனது நெருங்கிய நண்பன் சத்தியமூர்த்தியும் இயக்கத்திற்கு போனது இவனை யோசிக்க வைத்தது. ஆனாலும் இவன் அதனைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. படிப்பிலேயே கவனமாகவும் குறியாகவும் இருந்தான். பேரா தனையில் பொறியியல் படிப்பை முடித்து அவுஸ்திரேலியா செல்லும் கனவில் மூழ்கியி ருந்தான்.

★★★

அது ஜூலை மாதம் 9-ம் திகதி. அதி காலையிலேயே எழுந்து அருகிலுள்ள பிள்ளை யார் கோவிலுக்குச் சென்று வழிபட்டுவிட்டு படிக்க ஆரம்பித்திருந்தான். பொறியியல் பீடத்திற்கு கிடைத்தால், கரகம் எடுப்பதாக பிள்ளையாரிடம் நேர்ந்திருந்தான். பிள்ளை

www.tamilarangam.net

யாரின் மீது இவனுக்கு அதிக பக்தி. பிள்ளையாரால் தான் ஓ.எல். விசேடமாகப் பாஸ் பண்ணியது என நம்பியிருந்தான்.

எறிகணைச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் அதிகரித்துக் கேட்கலாயின.

"இவங்கள் இப்படித்தான் நெடுகவும் அடித்துக் கொண்டிருப்பாங்கள்" என்று மனதிற்குள் இராணுவத்தை திட்டியவாறே எழுந்து எல்லா ஜன்னல்களையும் சாத்திவிட்டு "அம்மா என்னை ஒருத்தரும் குழப்பாதையுங்கோ நான் படிக்கப் போறன்" என்று தாயாரிடம் கூறிவிட்டு கதவையும் சாத்திவிட்டு படிக்கத் தொடங்கினான்.

எவ்வளவு நேரம் படித்துக்கொண்டிருந்தானோ தெரியாது திடீரென "டொய்" என்ற சத்தத்துடன் அவனது அறை ஜன்னல் கண்ணாடி சிதறியது. திடுக்கிட்டுப் போய் எழுந்த போதுதான் ரவைகளும் எறிகணைகளும் இவனது வீட்டைத் தாண்டிச் சென்று கொண்டிருந்ததை உணர முடிந்தது. "இது என்ன கஸ்ரகாலம்? வேணுமெண்டு என்ர படிப்பைக் குழப்புறாங்கள்" என்று சிந்தித்தபடியே அறைக்கதவைத் திறந்துகொண்டு வெளியே போனான்.

அங்கே தாயாரும், தங்கையும் பதறியபடியே மண்டபத்தில் நின்றார்கள். "தம்பி என்ன நடக்குதெண்டே தெரியேல்லை. சத்தங்களும் வரவர கிட்டவாகக் கேட்கிது" என்றாள் அம்மா. "கொஞ்சம் பொறுங்கோ நான் றோட்டில போய்ப் பார்த்திட்டு வாறன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

சத்தங்கள் வித்தியாசமாகவும் பயங்கரமாகவும் கேட்டன. ஒழுங்கை வழியாகச் சென்று பிரதான வீதியை எட்டிப் பார்த்த போதுதான் பயங்கரத்தின் முழுப்பரிமாணத்தையும் கண்டு கொண்டான். டாங்கி ஒன்று அவனைக் கடந்து சென்றுகொண்டிருந்தது. அவனுக்குப் பத்தடி தள்ளி ஏராளமான பச்சைப் பேய்கள் நின்றன. மழுங்கடிக்கப்



பட்டு மீசை இல்லாத முகங்களும், கண்களில் தெரியும் இரக்கமற்ற தன்மையும் கோபமும் அவனைக் கிலிகொள்ள வைத்தன. இவ்வளவு அண்மையில் செல்வராஜா ஒருபோதும் இராணுவத்தைப் பார்த்தது இல்லை. இராணுவத்தைத் தவிர வேறு எதுவுமே அவன் பார்வைப் புலனில் படவில்லை. அவனது நெஞ்சுக்குள் இருந்து ஏதோவொன்று திரண்டு வாயை அடைத்தது. கால்களோ அசைய மறுத்தன. அவன் கெலித்துப் போனான். "அடோ கொட்டியா" என்ற குரல் பதட்டத்துடன் ஒலித்த போதுதான் அவன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு "ஐயோ ஆமி" என்று குழறிக்கொண்டு ஓடத் தொடங்கினான்.

"சட சட" என்று ரவைகள் அவனைத் தாண்டி சீறிக்கொண்டு சென்றன. முள்ளந்தண்டு பலமாகக் கூசியது. எந்த நேரமும் ரவை அவனைத் தாக்கலாம். இதோட தான் சரி என்ற எண்ணமே செல்வராஜாவின் மனதிலிருந்தது. வீட்டு முன் கதவை பாய்ந்து திறந்து கொண்டு வந்தபோது கூட அவன் நிற்கவில்லை. "அம்மா ஆமி! அம்மா ஆமி ஓடுங்கோ" என்று கத்திக் குழறிக்கொண்டே ஓடினான்.

எப்படி அவன் வீட்டுப் பின்பக்க கிளுவம் வேலியைத் தாண்டினான் என்றோ, அடுத்த வளவு மாமாவின் வீட்டுச் சுவரை எப்படிப் பாய்ந்தான் என்றோ அவனுக்கு ஏதும் தெரியாது. எப்படியாவது தப்பவேணும்; ஓடித் தப்ப வேணும் என்பது மட்டும்தான் அவனுக்கு முன்னால் தெரிந்தது.

அவன் பார்த்த இராணுவத்தின் வெறுப்பு உமிழும் விழிகள் அவனை நிற்கவிடாமல் துரத்தியது. பேய்களைப் பற்றி அவனது தாயார் சொல்லும்போது அவனது விஞ்ஞான மனம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இன்றோ அந்தப் பேய்களை நேரில் கண்டபோது, அம்மா சொன்ன பேய்கள் உலகத்தில் இன்னும் இருக்கிறது என்பதைப் பூரணமாக நம்பினான்.

★★★

பூகம்பம் வெடித்தாற் போல பூமிப்பந்து திடீரென அதிர்ந்தது. மனச் சோர்வில் மயங்கிக் கிடந்தவனை குண்டுவெடிப்பின் அதிர்ச்சியலைகள் தள்ளி விழுத்தின. வீட்டுச் சிந்தனையில் தன்னை மறந்திருந்த அவன் தன்னைச் சுற்றியிருந்த யதார்த்த சூழ்நிலையினை கவனிக்கத் தவறிவிட்டான். குண்டு வீச்சு விமானமொன்று போகிற அவசரத்திலே எல்லாக் குண்டுகளையும் கொட்டிவிட்டு மிக உயரக் கிளம்பிச் செல்வதை கண்டான். "கொஞ்ச நாள் நிம்மதியாக இருந்தம். திரும்பி வந்திட்டாங்கள்...." என்று மனம் பதைபதைத்தபடியே எழும்பினான்.

தென்கிழக்கு மூலையில் சுமார் 500



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீற்றருக்கு கிட்ட ஒரே புகை மண்டலம் எழுந்ததுடன் மனிதக் கூக்குரல்களும் அவல ஒலிகளும் கேட்கலாயின. போய்ப் பார்ப்போமா..? என்று மனதில் கேள்வி எழ எழுந்து நடந்தான். வழமையாக எறிகணை அன்றி விமானக்குண்டு வீச்சுச் சேதங்களை இவன் ஒருபோதும் போய்ப்பார்ப்பதில்லை. இன்று சூழ்நிலை அவனைத் தூண்டியது.

அது, நவாலி சென். பீற்றர் தேவாலயம். அங்கு கட்டிடக் குவியல்களும் மனித சதைக் குவியல்களும் எங்கும் பரவி சிதறிக் காணப்பட்டன. ஒப்பாரியும் அழுகைக்குரலும் காதை அடைத்தது. எங்கும் அழுகுரலும், வேதனைக்குரல்களும், ஆண், பெண், பெரியவர்கள், குழந்தைகள் என்று எதுவித வேறுபாடும் இன்றி நரவெறிபிடித்த பேயொன்று வெறியாட்டம் போட்டிருந்தது.

இப்படியொரு கோரக்காட்சியினை அவன் என்றுமே கண்டதில்லை. சந்திரிகா அரசு பதவிக்கு வந்த போது மகிழ்ச்சி அடைந்தவர்களில் அவனும் ஒருவன். இனியென்ன, மின்சாரம் வந்து விடும். படிப்பதற்குப் பிரச்சினையில்லை என்றுதான் யோசித்தான். விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினரும் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களும் பாடசாலைகளில் கூட்டம் வைக்கும்போது சந்திரிகா சமாதான வேடம் தாங்கிய இனவாதி என்று கூறியபோதெல்லாம், அவன் அதனை நம்பவில்லை. இவர்கள் இயக்கத்திறகு ஆட்கள் சேர்ப்பதற்காகத் தான் இப்படிச் சொல்கிறார்கள் என்று யோசித்தான். 'பொடியள் சொன்னது சரிதான். சந்திரிகாவின் சமாதான முகமூடி இங்கு தான் எங்கோ விழுந்து நொருங்கியிருக்கிறது' என்று செல்வராஜாவுக்கு இப்போது தோன்றியது.

"ஐயோ இப்படி யாரும் செய்வாங்களோ என்ர ஐயோ! தமிழனாகப் பிறந்ததே பாவம் தான்" என்று யாரோ கதறியழும் சத்தம் கேட்டது. இப்படிப் பலகுரல்கள், பல அழுகைச்சத்தங்கள். கோபமிகுதியில் யாரோ சாபமிடுவதும் இவனுக்குக் கேட்டது. இவனுக்குள் யாரோ ஆணி அறைவது போலிருந்தது.

வட்டுக்கோட்டை, சங்கரத்தைப் பகுதிகளில் இருந்து அகதிகளாக இடம்பெயர்ந்து ஏராளமானவர்கள் நவாலி வீதிவழியே வந்து கொண்டிருந்தார்கள். நவாலி வீதியனருகே தான் சென்பீற்றரின் தேவாலயமும் அமைந்திருந்தது. றோட்டெல்லாம் கட்டிடச் சிதறல்கள்; பரவிக் கிடந்தன. இடம்பெயர்ந்து வந்துகொண்டிருந்தவர்கள் அச்சிதறல்களைத் தாண்டி குண்டு வீச்சின் கொடூரத்தையும் பார்த்தவண்ணம் விரைந்து சென்று கொண்டிருந்தனர். செல்வராஜாவினால் இவ்வாறு செல்லமுடியவில்லை. உலகமே கொடூரமானதாகவும், துன்பகரமானதாகவும் மாறிவிட்டது போலிருந்தது. புற உலகின் யதார்த்தத்தை அவனால் புரிந்து கொள்ளமுடியவில்லை.. இது என்ன உலகம்.. என்ன வாழ்க்கை என்று பெருமூச்சு விட மட்டும் முடிந்தது.

"என்ன செல்வா இங்கை நிக்கிறீர்" என்றபடியே ஒருவர் அவனது தோளைத் தட்டினார். திடுக்கிட்டுப் போய் திரும்பிப்பார்த்தால் அவனது கணித ஆசிரியர் பொன்னம்பலம். சைக்கிளில் பல உடமைகளுடனும் குடும்பத்தவர்களையும் அழைத்துக்கொண்டு வேகமாக யாழ் நோக்கிச் சென்றவர் அவனைக் கண்டதும் விசாரித்தார்.

தெரிந்த பழகிய ஒருவரைக் கண்டவுடன் மனதுக்குள் புழுங்கிக் கொண்டிருந்ததெல்லாம் வெளியே பீறிட்டுப் பாய்ந்தது. 'சேர் எங்கடை வீட்டிலெல்லாம் ஆமி வந்திட்டான். எனக்குச் சுட்டவங்கள் நான் ஓடியந்திட்டன். ஆனால் சேர், அம்மாவையும் தங்கச்சியையும் காணேல்ல' அதற்கு மேல் சொல்லமுடியாமல் அழ ஆரம்பித்தான்.

"என்ன தம்பி இப்படி அழுகிறீர். உம் மோட்ட பொடியள் இதைவிடச் சின்னப் பொடியளெல்லாம் முன்னுக்கு நின்று அடிபடுகிறாங்கள்" என்று சொன்னவர் பின்பு எதனையோ யோசித்து விட்டு "அம்மாவையெல்லாம் வேறு வழியால வந்திருப்பினம். நீர் ஒண்டுக்கும் யோசிக்காதையும்.. உங்கட சொந்தக்காரர் வீடுகளில போய்த் தேடிப் பாரும்" என்றார். பிறகு, "தம்பி நான் கன தூரம் போகவேணும் அப்ப வாறன்"

மாஸ்ரரும் அவரது குடும்பத்தினரும் சனக்கூட்டத்தினூடு சென்று மறைந்து விட்டனர். செல்வராஜா இன்னும் அங்கேயே நின்று கொண்டிருந்தான். சனக்கூட்டத்தை திரும்பிப் பார்த்தான். எவ்வளவு சனங்கள் றோட்டு முழுவதும் சாரிசாரியாகச் சென்று கொண்டிருந்தனர். எல்லோரது முகத்திலும் பயமும், பீதியும், கவலையும்.... 'எல்லோரும் எங்கே போகிறீர்கள்? நான் எங்கே போவது?' மனதில் களைப்பும் ஆயாசமும் தோன்றியது.

★★★

நான்கு நாட்களாக எல்லா இடமும் தேடியும் செல்வராஜாவின் தாய், தம்பி, தங்கைகளைக் காணவில்லை. செஞ்சிலுவைச் சங்கத்திலும் போய்ப்பார்த்து வந்தான். ஒரு முடிவும் தெரியவில்லை. செல்வராஜா இப்போது நல்லூரிலுள்ள அவனது சித்தப்பா வீட்டில் வந்து சேர்ந்திருந்தான். எப்போதோ ஒரு காலத்தில் இவனது வீட்டின் வேலியிலிருந்த முருங்கை மரத்தால் ஏற்பட்ட சண்டையால் இரு குடும்பத்ினருக்குமிடையில் உறவு முறைகள் சீரில்லாமல் இருந்தன.. இவன் எங்கே போவதென்று தெரியாமல் றோட்டால் போய்க்கொண்டிருந்த போது சித்தப்பா இவனைக் கண்டார். "இதென்ன கோலம் தம்பி.. ஆபத்திற்கு உதவுகிறதுதான் மனுஷத் தன்மை. ஒண்டையும் யோசிக்காமல் எங்கடை வீட்டிற்கு வாரும்" என்று அழைத்துக்கொண்டு போனார்.

நல்லூரடியில் எறிகணைச் சத்தங்கள், விமானங்களின் இயந்திர முறுகல்களின் சத்தங்களைக் கேட்டாலும் வழமையான வாழ்க்கையில் எதுவித குறையுமிருக்கவில்லை. சித்தப்பா குடும்பத்தினர் விமரிசையாக

www.tamilarangam.net

வெளிக்கிட்டுக் கோயிலுக்குப் போனார்கள். செல்வராஜாவுடன் அனுதாப வார்த்தைகள் கதைத்தார்கள். அவனது குடும்பத்தினரை அவனுடன் சேர்ந்து தேடினார்கள். வேளா வேளைக்கு நல்ல சாப்பாடும் தேனீரும் வந்தது. அவனுக்கு எதிலுமே மனம் செல்ல வில்லை. சாப்பாடும் இறங்கவில்லை.

அவனது நினைவுகள் எல்லாம் குடும்பத் தைச் சுற்றியே சுழன்றன. அம்மா.. தம்பி.. தங்கச்சி.. தங்கச்சி என்ன செய்யிறாளோ மனம் அலை மோதியது. கண்ணீர் வந்தது. 'எவ்வளவு கோழையாகிப் போனேன். என்ன நடந்திருந்தாலும் குடும்பத்தோடையே நிற்க வேணும். அப்பா அறிந்தால் என்ன நினைப் பார். செல்வராஜாவின் மனம் ஆறுதலற்று எங்கெல்லாமோ ஓடியது.

"ஆமி எவ்வளவு தூரம் வந்திட்டான் தெரியுமோ" சித்தப்பாவின் மூத்த மகன் சொல்லிக்கொண்டே வீட்டிற்குள் நுழைந் தான். "கல்லுண்டாய் வெளியிலே ஒருபக்கம் வந்து நிற்கிறான். அங்கே மற்றப்பக்கம் சண்டிலிப்பாய் சந்தி தாண்டி கட்டுடையில் நிற்கிறான்."

"எவ்வளவு இடத்தைப் பிடிச்சிட்டான் தெரியுமோ"

"அடுத்தது ரவுண்தான்"

சித்தப்பாவின் இளையமகன் பெருமூச்சு விட்டபடியே சொன்னான்.

சித்தப்பா வீட்டில் பாராளுமன்றம் கூடி விட்டது.

"அப்ப பொடியள் என்ன செய்யிறாங்க ளாம்?" இது சித்தி.

"பொடியள் அடிபடுற நோக்கமே இல் லைப்போல கிடக்கு"

"ஒருக்கா ஆமியை உள்ளுக்க விட்டாத் தான் தங்கட அருமை சனத்திற்கு விளங்கும் எண்டு யோசிக்கினம் போல"

என்றார் சித்தப்பா.

# தேசச் சிலிர்ப்பு

- ஜெயா

மாரி மழையிருட்டு.
"கும்" என்று வானம் பயங்காட்டும்.
பனிக்காற்று வீச்சில்
தேகம் சுள்ளிடும்.

உலகம் கண்மூடி உறங்கும் நேரத்தில்
நமக்கேன் விழிப்பு...
இனம்புரியா... ஏனிந்த மெய்யெழுச்சி...
செவியின் துடிப்பும்
விழியின் அவசரமும் ஏன்...? எதற்கு?

ஊர் விழிக்க வைக்கின்ற
நாதமணிச் சத்தத்தை
உள்வாங்கும் அவசரத்தில் செவியின் துடிப்பும்
நெய்விளக்கேற்றும் கணத்தை கருமணியில்
சுமக்கின்ற தவிப்பும் ஏன்..? எதற்கு?

கணங்கள் தப்பின்றி
ஊர் கூடி ஒலிக்கும்
ஒளிமயமாய் காட்சிதரும்.
உணர்வோடு தேசம் உயிர்ப்புறும்.
சேர்ந்து குரலெடுத்து விடுதலைப் பண் பாடும்

இன்று
"மாவீரர் நாள்"

நள்ளிரவு!

நாங்கள் விழிக்கின்ற நேரம்!
உள்ளுணர்வு தடையுடைந்து
விம்முகின்ற நேரம்!
தினந்தோறும் நினைப்பவர்தம் பாதமலரடியை
ஒரு சேர முழு இனமும்
வணங்குகின்ற நேரம்.
எண்ணிய கருமம் எடுத்து முடிப்பதற்குள்
கண்ணிறைந்து போன களப்புலிகள்
பேர் சொல்லும்
கார்த்திகைப் பெருநாள்.

சொன்னபடி எங்கும் நாதமணிச் சத்தம்.
நெஞ்சம் புடைக்க நெக்குருகி நின்று
சந்ததி காத்த சத்தியரைத் தொழும் போது
ஆண்டவன் சந்நிதியின் அருளோசை.
ஒளியேற்றி வைத்தவரின்
நினைவோடு விளக்கேற்றி
ஒளிபெற்ற... தேசத்தின் சிலிர்ப்பு.

தேகம் புல்லரிக்க நிமிர்ந்தோம்!
நெஞ்சில் கனல்மூண்ட வெம்மை தாளாமல்
கண்களில் நீர்!
தேசம் செழிக்கும்!!



www.tamilarangam.net

“அப்படியெண்டால் பொடியள் ரவுணையும் விட்டு விடுவாங்களோ?”

“அப்பிடிப் போலத்தான் கிடக்கு”

“நல்லூரரானே இதென்ன சோதனை?”

“சனமெல்லாம் சாகுது. காயப்பட்டு ஆஸ்பத்திரி நிரம்பி வழியிது. றோட்டெல்லாம் அகதி அகதியாய் திரியிது. பொடியள் பேசாமலிருந்தால் என்ன மாதிரி” சித்தப்பாவின் இளைய மகன்.



“கவனிச்சியோ பொடியள் ஒருத்தரும் சாகவுமில்லை. அவை அடிபடவுமில்லை” சித்தப்பா.

“பத்தாயிரம் ஆமியைக் கண்டு பயந்து போனாங்கள் போலக்கிடக்கு” சித்தப்பாவின் நடுவில் மகன் தனது பங்கிற்கு இவ்வாறு கூறினான். இன்னும் கதைகள் தொடர்ந்தபடியே இருந்தன. செல்வராஜாவுக்கு தனது கல்லூரியிலும் ரியூசனிலும் கருத்தரங்கு வைத்த போராளிகள் சொன்னவைதான் நினைவுக்கு வந்தன.

“பொடியள் அப்பவே சொன்னாங்கள் தானே! பெரிய சண்டை வரப்போகுது இயக்கத்தில சேருங்கோவெண்டு” கணீரென்ற குரலொன்று கேட்டது. “சரி கிழவி வந்திட்டுது. இனி விடாது. பேசாமல் மாறுவம்” என்று வாய்க்குள் முணுமுணுத்தபடியே சித்தப்பாவின் மூத்த மகன் நைசாக அந்த இடத்தை விட்டகன்றான்.

“இங்க றோட்டு றோட்டாய் பொடியளும் பெட்டையளும் அளந்து திரிந்தால் ஆர் போராடுகிறது? கதைக்க மட்டும் தெரியும். யாராவது ஒராள் இயக்கத்துக்குப் போங்கோவன்.” ஆச்சிக்கு கோபம் வந்தால் இப்படித்தான். ஆச்சி வேறு யாருமில்லை, சித்தப்பாவின் தாயார் தான். மனிசிக்கு பொடியளை யாராவது குறை சொன்னால் போதும் விளக்குமாறையும் தூக்கிக் கொண்டு சண்டைக்கு வந்து விடுவா. அதனாலே சித்தப்பா வீட்டில் ஆச்சிக்கு முன் ஒருவரும் இயக்கத்தைப்பற்றிக் கதைக்க மாட்டார்கள்.

“....பார்... நீ மூன்று தறுதலைகளைப் பெத்து வைச்சிருக்கிறாய்.. விடிந்தால் பொழுது படுகிறவரை நல்லூரிலை பெட்டையளுக்கு பின்னால் சுத்துறதுதான் வேலை.. ஏன் நீயும் தான் கூட்டங்கள், சாப்பாடு குடுக்கிறது எண்டு ஆதரவாளன் போல திரி. ஆனா பிள்ளையளை மட்டும் பொத்திப் பொத்தி இயக்கத்திற்கு விடாமல் வளர்.... தலைவர் இருக்கிறார். விடமாட்டார்.”

ஆச்சியின் சூடான இந்தக் கதையோட சித்தப்பாவையும், சித்தியையும் காணவில்லை. ஆச்சி சூரசம்காரம் செய்த முருகன் போல பொல்லோடு மண்டபத்தில் நின்றார். பாராளுமன்றம் எப்படிக் கலைந்தது என்றே தெரியவில்லை.

“ம் சண்டிலிப்பாயிலிருந்து பெத்த தாயையும் சகோதரங்களையும் விட்டிட்டு ஓடி வந்திருக்கிறான்... ம்.. எங்க தான் ஓடப் போறாங்களோ தெரியேல்லை..” ஒருவரையும் காணாதபடியால் ஆச்சி மெதுமெதுவாக முணுமுணுத்துக்கொண்டு வீட்டின் பின்பக்கம் செல்லலானா.

ஈட்டியாலே யாரோ இதயத்தினுள் செருகியது போல செல்வராஜாவிற்கு இருந்தது. ‘சுமங்கலாவும் இப்படித்தான் கேட்டவள்’ மனம் ஊமையாக அழுதது. ‘பிழைதான்.. பிழைதான் ஆனால்...’

‘தமிழீழத் தேசியத் தலைவரால் திட்டமிடப்பட்ட புலிப்பாய்ச்சல் தாக்குதலால் இராணுவம் கலைக்கப்பட்டு விட்டது. போராளிகள் மீளக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பகுதிகளில் தடையகற்றும் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.’ பத்திரிகைகள் பரபரத்தன; மக்கள் ஆரவாரித்தனர்.

செல்வராஜா நிலைகொள்ளாமல் தவித்தான். அவன் நாலைந்து தடவை தனது வீட்டிற்குப் போக முயன்றான். ஆனால் இராணுவம் ஆபத்தான வெடிபொருட்களை விட்டு விட்டு சென்றதால் போராளிகள் முன்னே செல்ல விடவில்லை.

ஆனைக்கோட்டைச் சந்தியில் நின்று எப்படிப்போவது என்று யோசித்துக்கொண்டிருக்கும் போதுதான் பக்கத்திலிருந்தவர் ‘ஈழநாதம்’ பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்ததை அவதானித்தான். அந்தப் பத்திரிகையை பார்க்கவேண்டும் என்று அவனது மனதில் இனந்தெரியாத ஏதோவொரு துடிப்பேற்பட்டது. பத்திரிகையை வாங்கினான். இல்லைப் பறித்தான் என்றே சொல்லலாம். புலிப்பாய்ச்சலின் போது வீரச் சாவடைந்த மாவீரர்களது புகைப்படங்கள் அங்கே விபரங்களுடன் பிரசுரிக்கப்பட்டிருந்தன. ஏனோ மனம் துடிதுடித்தது. அப் பக்கத்தில் கண்களைச் செலுத்தினான். வேகமாக எல்லாப் படங்களையும் பார்த்துக்கொண்டு வந்தவன் இடையில் திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தான்.

www.tamilarangam.net

திரும்பித் திரும்பி அந்தப் படத்தைப் பார்த்தான். நெஞ்செல்லாம் வேதனையால் துடித்தது. மனம் பதைபதைத்தது. அப்படத்தில் லெப். சுமங்கலா சிரித்துக் கொண்டிருந்தாள். இவன் அவளை ஒரு போதும் காதலித்தது கிடையாது. ஆனாலும் மனதில் அவளின் நினைப்பு ஆழமாக பதிந்திருந்ததை அவனால் அப்போதுதான் உணர முடிந்தது.

பேப்பர் கைநழுவி விழுந்ததையோ பேப்பரைப் பறிகொடுத்தவர் அவனை முறைத்துப் பார்த்துவிட்டு பின் அனுதாபமாகப் பார்த்ததையோ அவனால் உணரமுடியவில்லை. கண்களில் நீர் நிறைந்து குளமாயின.

‘தம்பி உம்மட சகோதரர்கள் யாராவது வீரச்சாவடைந்து விட்டினமோ’ பேப்பர் வைத்திருந்தவர் அவனை அனுதாபத்துடன் பார்த்துக் கேட்டார்.

அதிர்ச்சியடைந்து போன செல்வராஜா அப்போதுதான் புற உலகத்திற்கு வந்தான். ‘ஓம்’ என்றான் கண்ணீர் மல்க.

★★★

சண்டிலிப்பாயை நோக்கி அவனது சைக்கிள் மிகவேகமாகச் சென்று கொண்டிருந்தது. அவனது மனமோ அவனுக்கு முன்பே வீட்டிற்குப் போய் அங்கு அம்மா, தம்பி, தங்கைகளைத் தேடிக் கொண்டிருந்தது. இன்னொரு மனம் அவர்கள் பத்திரமாயிருக்க எல்லா தெய்வங்களையும் வேண்டியது. பிரார்த்தனை, நேர்த்தி இன்னும் பல. அவனது இஸ்ட தெய்வமான பிள்ளையார் உட்பட எல்லோருக்கும் வேண்டுதல்கள் செய்தான்.

அவனது வீட்டை அண்மிக்க அண்மிக்க அவனது நெஞ்சு ‘பக் பக்’ என்று மிகப்பலமாக துடிதுடித்தது. இராணுவம் சுட்டு ஓடும் போது கூட இதயம் இப்படி அடிக்கவில்லை. வேகமாக ஒழுங்கையால் திரும்பினான். பக்கத்து வீட்டு வேலியெல்லாம் ‘டாங்கி’ போனதால் சின்னாபின்னமாகக் கிடந்தது. அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசியது.

‘நாய், பூனை செத்திருக்கும். அல்லது ஆமிக்காரன் செத்திருப்பான்” என்று மனதைத் தேற்றிக்கொண்டான். வீட்டின் முன்மண்டபம் ‘ஆ’ வென்று திறந்து கிடந்தது. முற்றம் முழுவதும் வீட்டுச் சாமான்களும் வேறுமாக தாறுமாறாக வீசிக் கிடந்தன. சைக்கிளை நிறுத்தியவன் மனமெல்லாம் இனம்தெரியாத பீதியும் பயமும் நிறைய உடம்பெல்லாம் நடுங்கியது. காலில் ஏதோ தடக்கியது. வீட்டிற்குள்ளிருந்து நாலைந்து நாய்கள் அவனைப் பார்த்துக் குரைத்தபடியே ஓடின. ஆணியறைந்தவன் போல நின்றான். வீட்டிற்குள் போக துணிவு வரவில்லை. உடம்பிலுள்ள பலமெல்லாம் கரைந்து போவது போலத் தோன்றியது. மனதைத் திடப்படுத்திக் கொண்டு வீட்டிற்குள் காலடியெடுத்து வைத்தான்.

‘அம்மா.. ஆ..ஆ..’



அவன் கண்ட காட்சி அவனைப் பேயறைந்தவன் போலாக்கியது. அழுதான் குலுங்கிக் குலுங்கி அழுதான். பேய்க்காற்றும் இடியும் மின்னலுமான இரவில் தீவொன்றில் தனித்திருப்பது போலக் கிடந்தது. இன்னொரு கணம் கடற்சுழியொன்றில் அகப்பட்டு அது அவனை உள்ளுக்குள் இழுப்பது போல, கழுத்தெல்லாம் திருகி மூச்சுத் திணறுவது போல ஒரு உணர்வு. எவ்வளவு நேரம் அப்படி அழுது கொண்டிருந்தானோ அவனுக்கே தெரியாது.

மனம் கல்லாக இறுகியிருந்தது. தள்ளாடியபடி சைக்கிளைத் திருப்பினான். கால் போன போக்கில் சைக்கிள் போனது. இந்த மண்ணில் இப்போது அவனுக்கு சொந்தமென்று யாருமில்லை. எங்கே போவது?

‘எவ்வளவு காலத்திற்கு இப்படி ஓடப்போறியள்? சுமங்கலாவின் நினைவு வந்தது.

‘சொந்தத் தாய், சகோதரங்களை விட்டு ஓடி வந்திருக்கிறான் பார்’ ஆச்சியின் குரல்.

இவையெல்லாம் மாறி மாறி அவனுக்குள் ஒலித்தன.

அவனது சைக்கிள் ஆனைக்கோட்டையைக் கடந்து யாழ்ப்பாணம் நோக்கிப் போகையில் ஏதோவொரு சக்தியால் தன்னையறியாலே மனம் ஈர்க்கப்பட்டு சைக்கிளை நிறுத்தினான். முன்னாலே நிமிர்ந்து பார்த்தபோது, மில்லர் சிரித்துக்கொண்டு நின்றான். எத்தனையோ தடவை இந்தப் பாதையாலே செல்வராஜா போயிருப்பான். இன்றுதான் கரும்புலி கப்டன் மில்லருடைய கட்டவுட்டினைப் புதிதாய்ப் பார்ப்பது போலப் பார்த்தான். “என்னைத் தியாகம் செய்ததன் மூலம் ‘ஒப்பரேசன் லிபரேசனை’ ஒரு முடிவுக்கு கொண்டு வந்து எவ்வளவு மக்களைக் காப்பாற்றினேன் பார்த்தாயா?”... என்று மில்லர் இவனைக் கேட்பது போல இருந்தது. இனி எங்கு போவதென அவனுக்குத் தெரியும். ●

www.tamilarangam.net

# மாவீரர் சிற்பக் கலைக்கூடம்



தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது விடுதலைப்புலிகளின் வரலாறு ஆகும். தமிழீழ மண்ணின் நிலை கண்டு விடுதலை உணர்வு கொண்டு போராட உறுதிபூண்டு புலிகளாயினர் இளந்தமிழர்கள். இம்மறவர் படை படைத்துள்ள சாதனைகள் பலதரப்பட்டவையாகும். விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் வேளையில் சமகாலத்தில் இக் களப்புலிகள் சமைத்துவிட்ட சமூக, கலை, பண்பாடு மேம்பாடுகளும், தமிழர் பாரம்பரியம், பண்பாடு விழுமியங்களுடனான புதிய படைப்புக்களும், உற்பத்தி முறைகள், கண்டுபிடிப்புக்களும் தரநிர்ணயம் வாய்ந்தவையாகும். மேலாக எமது அடுத்த தலைமுறையினர் எமது மண்ணின், சுதந்திரத்தின், மொழியின் வரலாற்றுச் சிறப்பம்சங்களை தெளிவாக அறிந்து இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடிய வண்ணம் சமகாலத்தில் உருவாக்கி வீரச்சாவில் தம்மை அர்ப்பணித்து மாவீரர்களாகிக் கொண்டிருக்கிறார்கள் புலிவீரர்கள். ஆம் பிறந்த மண்ணிற்காக விடிந்த பொழுதெல்லாவற்றையும் போராடியே வாழ்வைத் துறந்த இளந்துறவிகளே மாவீரர்களாவர். இம் மாவீரர்களின் அர்ப்பணிப்புக்கள் உறுதியான வடிவம் பெற மேல்வாறான வரலாற்று அம்சங்கள், போர்க்கால நிகழ்வுகள் காலத்தால் அழியாதவைகளாகப் பேணிப்பாதுகாக்க வேண்டியது இந்த மண்ணின் பணியாகும். எனவே இத்தகு சிறப்புக்களை கலையம்சமாக நினைவுபடுத்தும் நோக்கில், தமிழர் பாரம்பரிய கலையான சிற்பக்கலை நுணுக்கத்துடன்கூடிய வரலாற்றுச் சிற்பங்களாக வடிவமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

இச் சிறப்புப் பணியை தமிழீழ மாவீரர் சிற்பக் கலைக்கூடம் மேற்கொண்டுள்ளது. இக் கலைக்கூடத்தின் சிற்பங்களின் உருவாக்கத்திற்கு மூலகாரணமாயிருந்தவர் மாவீரர் ஜேம்ஸ் ஆவார். இக் கலைக்கூடம் ஆனையிறவுப் போர் தொடங்கிய நாட்களில் அப்போதைய யாழ். மாவட்ட புலிகள் தளபதி திரு. கஸ்ரோவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இம் மாவீரர் சிற்பக்கலைக்கூடத்தில் உருவாகும் சிற்பங்களில் இடம்பெறும் அம்சங்களை வரலாற்றுத்துறையில் ஆர்வங்கொண்ட விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் (பேபி சுப்பிரமணியன்) அவர்கள் நிர்ணயித்து வருகிறார். குமரிக்கண்டம் முதல் தொடங்கும் மொழி வரலாற்றுச் சிற்பங்களும் பல வரலாற்று உண்மைத் தொல்லியல் சான்றுகளுடன் பல் கலைச்சான்றோர் கருத்துடன் தெரிவுசெய்யப்படுகிறது.

இவ்வகைச் சிற்பங்கள் மகோற்கனி மரத்தில் பல தரப்பட்ட வடிவங்களில் செதுக்கப்படுகிறது. மேலும் மரபுரீதியான கோயில் சிலைகள், தூண்கள், வாகன வேலைகள் என்ற தன்மையிலிருந்து விலகி சமகால நிகழ்வுகளை, உள்ளதை உள்ளபடியே இந்த மண்ணில் நடந்ததை நடந்தபடியே, நிகழ்ந்தபடியே, போராளிகளின் உண்மைத் தோற்றங்களுடன் போர்களத்தில் நிகழ்த்திய வீரஞ்செறிந்த கள நிகழ்வுகளை அப்படியே சித்தரிக்கும் வண்ணம் வடிவமைக்கப்படுகின்றது. இக் கலைக்கூடம் சிற்பத்துறைக்கு ஒரு புதிய பரிமாணத்தை கொடுத்ததென்றால், மிகையற்றதாகும்.

கலைக்கூடத்தில் தயாரித்து முடிக்கப்








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

பட்ட சிற்பங்கள் சிலவற்றையும் அவற்றில் அமைந்த தன்மைகளையும் ஆய்வுக்கெடுத்தல் சிறப்பானதாகும். முதலாவது சிற்பம் ஆனையிறவுப் போர்க்காலத்தில் செய்து முடிக்கப்பட்டது. இது 68 செ.மீ.; 36 செ.மீ; 5 செ.மீ. அளவுடையது. இச் சிற்பத்தில் இந்தியப் படையுடனான யுத்தத்தில் ஒரே ஒரு வாசூக்கா ஷெல் தாக்குதலில் ரி-72 ரக ரஷ்யத் தயாரிப்பான இந்திய யுத்த டாங்கிகள் இரண்டைத் தகர்த்த மேஜர் ஜேம்ஸின் தாக்குதல் சித்தரிக்கப்பட்டு செதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. இச் சிற்பம் செய்து முடிக்கப்பட்ட நாட்களில் ஆனையிறவுப் போரில் வீரச்சாவை அடைந்த மாவீரர்களது புகழுடல்கள் யாழ். நகர் நோக்கி வந்த வண்ணமிருந்தன. எனவே மாவீரர்களுக்கென பொதுவான ஒரு சிற்பம் அமைக்க முடிவாகி செய்யப்பட்டதுதான் ‘தமிழீழ மாவீரர் நாள் நவம்பர் 27’ எனப்பெயர் கொண்ட சிற்பமாகும். இச்சிற்பம் ஓவியர் ரமணியின் மாவீரர் நினைவு நாள் எனும் ஓவியத்தை அடிப்படையாக வைத்துச் செய்யப்பட்டதாகும். இச் சிற்பத்தில் விடுதலைப் போராளிகள் மத வேறுபாடின்றி போராட்டத்தில் இருபாலாரும் இணைந்து போராடி மாவீரராகி பின்னர் அவர்கள் ஆத்மார்த்தமாக மலரும் தமிழீழத்தை நோக்கி வருவது போன்று சித்தரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் “புதைந்த குழியில் இருந்து நீங்கள் எழுந்து வாருங்கள், எரிந்த இடத்தில் இருந்து நீங்கள் நிமிர்ந்து வாருங்கள்” எனும் கவிதை வரியைக் கருவாகக் கொண்டதே இச் சிற்பமாகும்.

மூன்றாவது சிற்பம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். இச் சிற்பம் ‘சார்ல்ஸ் அன்ரனி (சீலன்) சிறப்புப் படை அணி - தொடக்கம் 15-07-1991’ எனும் தலைப்பிலானதாகும். ஆனையிறவு யுத்தத்தில் விடுதலைப் புலிகளின் ‘ஆ.க.வெ’ (ஆகாய, கடல், வெளி) இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகளின் முதலாவது சிறப்புப்படை அணி, மாவீரர் சீலன் (சார்ல்ஸ் அன்ரனி) இன் பெயரில் பிரகடனப்படுத்தப்பட்டது. இப் படை அணி மரபுவழி இராணுவமாகச் செயற்பட்டு, ஆனையிறவு யுத்தத்தில் விடுதலைப்புலிகள் ஒரு முழுமையான மரபு வழி இராணுவத்துக்குரிய சிறப்பை உடையவர்கள் என்ற மதிப்பீட்டை உலக இராணுவ ஆய்வாளர்கள், அவதானிகள் மத்தியில் ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கதாகும். எனவே இவ் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு சிற்ப வடிவு பெறலாயிற்று.

இச் சிற்பம் 82 செ.மீ., 36 செ.மீ., 5 செ.மீ. அளவுடையதாகும். இதில் மாவீரர் லெப். சீலனின் பெயர் வைத்தமைக்கான காரணம் விளக்கப்பட்டுள்ளது. அந்த நாட்களில் முற்றும் முழுதான கெரில்லா அமைப்பாக புலிகள் இயக்கம் இயங்கிய காலம். அனைத்து செயற்பாடுகளும், இரவும், பகலும் தலைமறைவு வாழ்க்கையையே விடுதலைப் புலிகள் கைக்கொண்டிருந்தனர். இந் நாட்களில் ஒருநாள் (15-07-1983) அன்று மீசாலையில் சீலன், ஆனந்த், இன்னொரு போராளி ஆகிய மூன்று புலிகளும் சிறீலங்கா இராணுவத்தால் சுற்றிவளைப்புக்குள்ளாகி, ஆனந்த் அந்த இடத்திலேயே வீரச்சாவடைகிறார். சீலன் நடக்க முடியாதபடி காயமுற்றிருந்தார். அந்தக் கணம் சீலன் வேகமாகச் சிந்தித்தார். ஒரு சில ஆயுதங்களையே புலிகள் வைத்திருந்த காலம் அது. எனவே தாம் வைத்திருக்கும் ஆயுதம் எதிரிகளிடம் பிடிபடக்கூடாது என்பதில் உறுதியாய் சிந்தித்தார். அத்துடன் உயிருடன் எதிரியிடம் பிடிபடக்கூடாது என்ற தலைவரின், இயக்கத்தின் இராணுவக்கோட்பாட்டை கடைசிவரை ஒழுக வேண்டும் என்ற எண்ணம் மனதில் உற்றுத் தங்கியிருந்தது. அத்துடன் அது சயனைட் பழக்கத்தில் இல்லாத காலமாகும். எனவே அதில் முன்னுதாரண தற்கொலை ஒன்றுக்கு சீலன் ஆயத்தமானார். ஆம் தனது துப்பாக்கியை தன் சகாவிடம் கொடுத்து தன்னைச் சுட்டுக்கொன்று விட்டு ஆயுதங்களையும் பாதுகாப்பாகக் கொண்டு போய்ச் சேர் எனக் கட்டளையாய் பணித்தார். சக போராளியும் கள நிலைமையை உணர்ந்து கட்டளைக்கு பணிந்தார். சீலனின் துப்பாக்கியையும் எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றார். இந்த நிகழ்ச்சி சிற்பத்தின் இடப்பக்கத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. அந்த நாட்களில் சிறீலங்கா இராணுவம் பாவித்த டிரக்





www.tamilarangam.net

குகள், ஜீப்புகள் உள்ள மாதிரி மரத்தோப்பினுள் இராணுவச் சுற்றி வளைப்பும் இங்கு சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. சிற்பத்தின் வலப்பக்கத்தின் நடுவே சீலனின் மார்பளவு உருவச்சிலையும் சீலனின் இரு புறமும் போராளிகள் வரிப்புலி சீருடையுடனும் சம காலத்தில் களத்தில் பாவிக்கும் சகலவிதமான ஆயுதங்களுடனும் மரபுவழி இராணுவ அணிநடையாக களம் நோக்கிச் செல்வது போன்று சித்தரிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் நான்கு வரிசையில் வரும் போராளிகள் முப்பரிமாணத்தில் செதுக்கப்பட்டிருப்பது கூர்மையான கலைச் சிறப்பை உடையதாகும். அத்துடன் விடுதலைப் புலிகளின் இராணுவக் கண்டுபிடிப்புக்களும்! இதில் அணியாக வரும் போராளிகளின் கரங்களில் காட்டப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும். மேலும் 50 ச.மீ., 36 ச.மீ., பரப்பளவில் 250-க்கு மேற்பட்ட சிறியளவில் படையணி வீரர்கள் அமைந்திருப்பது இச்சிற்பத்தின் மேலும் ஒரு சிறப்பம்சமாகும். இத்தகைய இச்சிற்பம் தமிழீழ தேசியத் தலைவரின் பிறந்த தினத்தன்று கலைக்கூடத்திலிருந்து வெளியானது.



அடுத்த சிற்பம் விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாம் பற்றியதாகும். இதில் புலிகளின் ஆரம்பகாலப் பயிற்சி முகாம் அமைந்த தன்மை காட்டப்பட்டுள்ளது. இச் சிற்பத்தில் புலிகளின் ஆரம்பகாலத்தில், தமிழகத்தில் நடைபெற்ற பயிற்சி முகாம் பொறுப்பாளராயிருந்த லெப். கேணல் பொன்னம்மானின் மார்பளவு உருவச் சிலையும் பயிற்சி முறைகளும், அதன்பின் பயிற்சி பெற்ற அணியினர் தொகுதியின் அணிநடையும் தேசியக்கொடிக்கு மரியாதை தெரிவிப்பு நிகழ்வும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இச் சிற்பம் 68 ச.மீ., 42 ச.மீ., 5 ச.மீ. அளவுடையது. இதில் பலதரப்பட்ட அளவில் 6 ச.மீ. உயரத்திற்குட்பட்டதாக 300-க்கு மேற்பட்ட போராளிகளின் உருவங்கள் முப்பரிமாண நோக்கில் அமைக்கப்பட்டுள்ளன. இது மிகவும் நுண்ணிய வேலைப்பாடுடையதாகும்.

ஐந்தாவது சிற்பம் பெண் போராளிகள் பற்றியதாகும். இதில் மகளிர் படைப்பிரிவின் முதல் தளபதியுமான மேஜர் சோதியாவின் மார்பளவு உருவத் தோற்றமும், தமிழீழ தேசியக் கொடியேந்திய வண்ணம் மகளிர் படையணி அணிவகுத்து தென்னந் தோப்பினூடு செல்வது போலவும் செதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தியப்படையுடனான யுத்தத்தில் மகளிர் படை அணியினரின் தாக்குதலில் தகர்க்கப்பட்ட ரி-72 ரக இந்திய யுத்த டாங்கியும் அது நிகழ்ந்த இடமும் செதுக்கப்பட்டுள்ளது. இச் சிற்பம் மகளிர் படைப்பிரிவின் முதிர்ந்த அநுபவத்தை விளக்கக் கூடியது.

ஆறாவது சிற்பம் கரும்புலித் தாக்குதல் பற்றியதாகும். விடுதலைப் போராட்டங்களின் வரலாற்றில் முதன்மை பெற்ற தாக்குதல் முறை விடுதலைப் புலிகளாலேயே வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ் வரலாற்றுப் பெருமை மிக்க தாக்குதலை நடத்தியவர் கரும்புலி கப்டன் மில்லராவர். எனவே இச் சிற்பத்தில் கரும்புலி மில்லரின் மார்பளவு உயரத் தோற்றமும்,





www.tamilarangam.net



மில்லர் தாக்குதலுக்கு பயன்படுத்திய வெடி பொருட்கள் நிரப்பிய கொள்கலன்களை ஏற்றிய கவசம் பொருத்தப்பட்ட கன்ரர் ரக டிரக் வண்டியும், கரும்புலி தாக்குதல் நடந்தபோது ஏற்பட்ட பெரும் கட்டிட, இராணுவச் சிதறல்களும், சம்பவம் நடந்த போது உள்ளமாதிரியே செதுக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

அடுத்து மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பின்போது, லெப். கேணல் போர்க்கின் கரும்புலித் தாக்குதலும் சிற்ப வடிவம் பெறுகிறது. இவ்வாறு கலைக்கூடத்தின் சிற்பப் பணி தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இவ்வாறான சிற்பங்கள் வரிசைப்படுத்தி வைக்கும் கலையகமாக எதிர்காலத்தில் அமையப்போவது தான் தமிழீழ மாவீரர் கலைக் கோட்டம் ஆகும். இம்மாவீரர் கலைக் கோட்டத்தின் மாதிரி அமைப்பு ஒன்று தமிழீழ மாவீரர் சிற்பக் கலைக்கூடத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை அடிப் படையாக வைத்தே தமிழீழ மாவீரர் கலைக்கோட்டம் எதிர்காலத்தில் அமையவுள்ளது. இக் கலைக்கோட்ட முன் முகப்பு 24 தூண்களால் நிறுத்தப்பட்டதும், உச்சியில் பாயும் புலி சின்னம் அமைக்கப்பட்டதும் திராவிடர் கலைச் சிறப்பைக் கொண்டதுமான முன்முகப்பு அரங்கைக் கொண்டுள்ளது. அத்துடன் 38 ஒளித்தூண்கள் பொருத்தப்பட்ட 6 மீற் அகலமான சுற்றுத் தளத்தையும், 70 மீற், 3 மீற் பரப்புடைய தளமண்டபத்தையும் உடையது. மண்டபத்தின் கீழ்தளம் மாவீரர் கலையரங்கமாகவுள்ளது. மேல்தளத்தின் உள்பிரகாரத்தில் 6 மீற் அகலமான சுற்றுப்பிரகாரமும், நடுவே 50 மீற், 18 மீற் பரப்புடைய தொல்பொருளியல் கூடத்தை சுற்றியுள்ள உள்பிரகாரத்தில், வரலாற்றுச் சிற்பங்களைத் தாங்கி நிற்கும் தொல்லியல் கூடத்தில் தமிழ் மன்னர்கள் பாவித்த ஆயுதங்கள், நுண்கலைப் பொருள்கள், தமிழர் வரலாற்றுச் சான்றுகள், தமிழ் இலக்கிய ஏடுகள் என்பன இடம் பெறும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு போராளிகள், கலைஞர்கள் ஒன்றிணைந்த செயற்பாடாக இக்கலைத் துறை வளர்ச்சியுற்று வருகின்றது. எதிரியுடன் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்திலும் எல்லைக் காவலரண்களில் கண் உறங்காது கடமையில் களத்தில் நிற்கும் வேளையிலும் எமது பாரம்பரியங்கள் சிந்திக்கப்பட்டு கலை பண்பாடு வழியே எமது வரலாறு முன்னெடுக்கப்படுவதை இக் கலைக்கூட நிகழ்வுகள் கோடிட்டுக் காட்டும். தமிழீழமெங்கும் யுத்த மேகங்கள் சூழ்ந்துள்ள வேளையிலும் பொருளாதார நெருக்கடி உச்சம்பெற்ற போதிலும் எமது பாரம்பரியங்கள் பேணிப்பாதுகாக்கப்பட்டு எமக்கென உள்ள கலை பண்பாட்டுக் கூடாக வரலாற்றம்சங்களுக்கு புத்துயிரளிக்கப்பட்டு, புதுமெருகூட்டப்பட்டு, எமது தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் வழிகாட்டுதலின் ஆசீர்வாதத்துடன் புனிதமாக வளர்க்கப்பட்டு வருகின்றது. தமிழர்களின் பொற்காலமென வரலாற்றாசிரியர்களால் கருதப்படும் சோழர்கால கலை நிகழ்வுகள் தமிழீழ மண்ணில் உயிர் பெற்றெழுவதை இம் மண்ணில் காணலாம். கலைக்கூடப் பணிகள் தொடரும்.

தலைமை சிற்பாசிரியர்,
மாவீரர் சிற்பக்கலைக்கூடம்
தமிழீழம்.



**தாகம் அடங்கத்**
**தமிழீழம் கேட்டீர்கள் -**
**ஆவி அடங்கி**
**அனலில் எரிந்தீர்கள் -**
**வேகம் கொண்டெழுக இனம் - என**
**வேதம் படித்தீர்கள் -**
**மேகம் போல் திரண்டீர்கள் -**
**மின்னல் போல் வெடித்தீர்கள் -**
**நாகம் கொண்ட நஞ்சிற்**
**கொடிய நஞ்சில்**
**காதல் கொண்டீர்கள் -**
**பூகம்பம் இங்கு**
**நெஞ்சுக்குள் வெடிக்குது**
**அந்நிய ஆக்கிரமிப்புக்குப்**
**பாடை கட்டுவோம்**
**தேசமே எழுக.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு நாள் போதுமா?

- குமுதினி ஷண்முகராஜா -
அவுஸ்திரேலியா



மகத்தான இன்னுயிரை
மனம் சிறிதும் கலங்காமல்
மண்ணின் மீட்புக்காக
மகிழ்ந்தே அளித்திட்ட
மாவீரர் நீங்கள்
உங்களின் நினைவாக
உள்ளமெல்லாம் உருகி
உலகமெல்லாம் புகழ் பாடிட
'மாவீரர் நாள்' என்று
ஒரு நாள் மட்டும் போதுமா?

கொடும் பகைமை ஒழிப்பதே
கொள்கை எனக் கொண்டீர்
நாளும் சபதம் பூண்டு
சிற்றறிவு படைத்த
சீரில்லா பகைவரை
தாக்கியே ஒழித்திட
சீறும் புலிகளென
புறப்பட்டீர் போர்க்களத்திற்கு
பிரபாகரன் என்னும் மாவீரன்
தலைமையின் கீழ் ஓர் அணியாகவே.

வெற்றுத் தரையினிலே படுத்தெழுந்தீர்
காட்டினிலே கனியுண்டு பசி தீர்த்தீர்
போர்க்களத்தில் தாகமெடுக்க நன்னீர் கிடைக்காமல்
காட்டெருமை குளித்து விட்ட சேற்று நீரை
குடித்திருந்த சம்பவங்கள் பலர் அறிவர்
பாழாய் போன பொம்மரும் ஹெலியும்
சுழன்றடித்து குண்டுமாரி பொழிய
நாமெல்லாம் பதுங்கு குளிக்குள் ஒடியே பதுங்கிட
நீங்களோ....! ஆயுதம் ஏந்தியே, இரவு பகலாய்
எமையெல்லாம் காத்து நின்றீர் உயிரையும் விட்டீர்.

ஆண்டாண்டு காலமாய் இருந்து வந்த
அடிமைத்தளைகளை அறுத்தெறிந்து
பெண்ணினம் பெருமைப் படவே பெண்
புலிகளுமானீர்.
நன்னாளில் பூட்டிடும்
பொற்றாலியை விட
தன்மானம்தான் பெரிதென
சயனைட் குப்பியை மனமுவந்தே ஏற்றிவிட்டீர்.

கப்பலில் வந்த கள்ளப் பகைவனை
கடலிலேயே வைத்து சமாதியும் கட்டிட
கங்கணம் கட்டியே கடல் புலிகளுமானீர்
பல சரித்திரம் படைத்திட்டீர்
காலனே தோற்று நிற்க
நீரே உமது உயிரை போக்கிட
நாளும் நேரமும் குறித்து
தற்கொலைப் படையென அணிதிரண்டு
மில்லர் காட்டிய வழியினை மேற்கொண்டீர்
உயிரை விட்டீர் கரும் புலிகளாய்.

கட்டியழ கால்வாசியுடல் தானும் இல்லை
கருமாதி வைக்க ஓர் எலும்பும் இல்லை
கண்காணா இடங்களில் காற்றோடு கலந்திடுவீர்
சமுத்திரம் தனிலேயே சங்கமும் ஆயிடுவீர்.

உங்களைப் போற்றி, கரம் கூப்பி, வணங்கிநிற்க
'மாவீரர் தினம்' என்ற
ஓர் நாள் மட்டும் போதுமா?
ஓராயிரம் நாள் வேண்டாமா?

இரவு பத்துமணிக்கு மேல் கேட்கத் தொடங்கிய குண்டுச் சத்தங்களும் வெடிச்சத்தங்களும் விடிந்த பிறகும் ஓய்ந்த பாடில்லை. வழமையான காலை நேரத்துப் பரபரப்பு ஏதுமின்றிப் பத்தமேனிப் பிரதேசம் அன்று ஓய்ந்து போய்க் கிடக்கிறது. வெடிச்சத்தங்கள் கேட்டவுடன் இரவோடிரவாக சனங்கள் வெளியேறி அயல் ஊர்களுக்குப் போய் விட்டிருந்தார்கள். இப்படி இடம்பெயர்வது இப்போதெல்லாம் வழமையாகிப் போன விஷயம். மீண்டும் இரண்டொரு நாட்களில் அத்தனைபேரும் சொந்த இடத்துக்குத் திரும்பிப் போய் விடுவார்கள்.



# திதி

முகாம்களில் முடங்கிக் கிடக்கும் சிங்கள இராணுவம் அவ்வப்போது நரவேட்டையாடப் புறப்படும் நாட்களில், மக்களின் இந்த இடம்பெயர்வும், தொடர்ந்து வரும் நாட்களில் மீண்டும் திரும்புதலும் நிகழும்.

இந்த இடம்பெயர்தலுக்கும், மீண்டும் திரும்புதல் நடவடிக்கைக்கும் செல்லம் என்றுமே விதி விலக்கு.

அவள் ஒரு தனிக்கட்டை. அதுதான் காரணமோ? 'எல்லோருமே இடம்பெயர்ந்து போய் விட்டால் இன அழிப்புக்குப் புறப்படும் இராணுவத்தை மீண்டும் முகாமினுள் முடக்குவதற்காக - இரவு பகலாய்க் காத்து நிற்கும் 'பிள்ளை'களுக்கு - சண்டைபிடித்துக் களைத்துப் போன நிலையில் குறைந்தபட்சம் தேநீரையாவது கொடுப்பதற்கு அங்கே யார் இருப்பார்கள்?' - என்று செல்லம் நினைப்

www.tamilarangam.net

பதும் இதற்கு ஒரு காரணம்.

சண்டை ஓய்ந்த பிறகு - சூடான தேநீரை எதிர்பார்த்துப் 'பிள்ளைகள்' இந்த அம்மாவிடம் வருவது வழமையான விஷயமாகி விட்டது. அவர்கள் சண்டையைப்பற்றி அம்மாவுக்குச் சொல்லுவார்கள். அம்மா ஆவலுடன் கேட்பாள். அவளிடம் சாப்பிட்டவர்கள், பழகியவர்கள் சண்டையில் காயம்பட்டதையும், சாவடைந்ததையும் அவர்கள் சொல்லும்போது உடைந்து போவாள்; விம்முவாள். தன்னுடைய பிள்ளைகளுக்கு இப்படி வேதனையா? அவ்வளவு பாசம் கொந்தளிக்கும். எதிரிகளைச் சபிப்பாள், திட்டுவாள். கோபத்தின் சுவாலை மூண்டெரியும்.

இன்னமும் சத்தங்கள் ஓய்ந்தபாடில்லை.

இன்று செல்லத்தின் கணவருடைய திதி.

87-ம் ஆண்டு பிரம்படியில் இந்திய இராணுவ டாங்கிகளின் கீழ் நசியுண்ட உயிர்களில் செல்லத்தின் கணவருடையதும் ஒன்று.

அன்றிலிருந்து இவள் தனிக்கட்டை. பிள்ளைகள் இல்லை.

கணவருடைய ஓய்வூதியத்தில் வாழ்க்கை.

கடந்த ஐந்து வருடங்களாகக் கணவருடைய திதி வரும் தினத்தன்று, அருகிலுள்ள சிவன் கோவிலில்....

அரிசி, தேங்காய், இன்னும்... சமையலுக்குத் தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் ஐயரிடம் கொடுத்து, சிவனுக்கு அர்ச்சனை செய்து பிரசாதமும் பெற்றுக்கொண்டு வந்துதான், வீட்டில் சமையல் செய்து அவள் சாப்பிடுவது வழக்கமாயிருந்தது.

போராளிகளை அன்றைய தினத்தில் வரவழைத்து, அவர்களையும் தன்னோடு சேர்ந்து சாப்பிடவைப்பாள்.

கணவனுக்குச் செய்யவேண்டிய கடமையை இந்தத் திதியில் அன்றுதான் செய்வதாக நினைத்துச் செல்வம் திருப்தி கொள்வாள்.

நேற்று மாலை உண்டியல் உடைத்துப் பொருட்களை வாங்கி வைத்து... சிவன் கோவில் ஐயரிடமும் சொல்லி வைத்திருந்தாள் - நாளை கணவனுடைய திதி என்று.

சற்று ஓய்ந்திருந்த வெடிச்சத்தங்கள், இப்போது மீண்டும் இடைவிடாமல் கேட்கத் தொடங்கின.

இரண்டு உலங்குவானூர்திகள் தாழப் பறந்து வட்டமிட்டுக்கொண்டிருக்க, குண்டு வீச்சு விமானங்கள் மாறி மாறிக் குத்தி எழுந்து குண்டுகளை வீசின.

'இண்டைக்குப் பாத்து இப்படி நடக்குதே..' என்று அடிக்கடி மனதுள் கவலை கொண்டாள்.

"பிதிர்கடன் செய்யாமல் விட்டா, பிதிர்கள் சாபம் போடுமாம்" என்று தனது தாய் முன்னர் அடிக்கடி சொல்வது இப்போது ஞாபகம் வருகிறது.

இதென்ன சோதனை?

வாகனங்களின் இரைச்சல் அடிக்கடி கேட்பதும், பின்னர் தேய்வதுமாக இருக்கிறது.

"காயம்பட்ட பொடியளைக் கொண்டு போகினம் போலை..! எத்தினை பிள்ளையள் காயம்பட்டுதோ.. எத்தினை பிள்ளையள் உயிர் விட்டுதோ.. சிவ சிவா.."

செல்லத்தின் மனம் ஒரு நிலையிலில்லை. ஒருவேளை இடம்பெயர்ந்த சனங்களோடு சிவன் கோவில் ஐயரும் போயிருப்பாரோ?

போயிருந்தால் இன்று திதி செய்ய முடியாமல் போய்விடும்.. 'பிதிர்க் கடன் செய்யமால் விட்டா பிதிர்கள் சாபம் போடுமாம்..'

நேரம் 10.00 மணி

'கணீர் கணீர் எனச் சிவன் கோவில் மணி ஒலிக்கிறது. 'அப்பாடா'

செல்லத்தின் மனதில் பெரியதொரு

**மறைந்தவர்களே நீங்கள்**
**மலடர்களல்ல.**
**உங்கள் கல்லறைகளும்**
**கருத்தரிக்கும்**

***- கப்டன் கஸ்தூரி***



**நான் சாகலாம்; நீ சாகலாம்;**
**ஆனால் - நாங்கள் சாகக்கூடாது.**

***- லெப். கேணல் குணா***

நிம்மதி பிறக்கிறது.

ஐயர் எங்கும் போகவில்லை.

அடுத்தது பகல் 12.00 மணிப்பூசை.

அந்த நேரத்துக்குத்தானே வருவதாகச் செல்லம் ஐயரிடம் சொல்லியிருந்தாள்.

பன்னிரண்டு மணிக்கு ஆரம்பித்தால் பூசை புனஸ்காரம் எல்லாம் முடியக் குறைந்தது இரண்டு மணி நேரம் ஆகும்..

முழுகிக் குளித்துக் கோவிலுக்குப் போகும் ஆயத்தத்துடன் செல்லம் வந்தபோது நேரம் 11.30 ஆகியிருந்தது.

'இப்ப வெளிக்கிட்டால் பன்னிரண்டு மணிப்பூசைக்குச் சரியாயிருக்கும்..'

உரப்பையினுள் கட்டிவைத்திருந்த பொருட்கள், அர்ச்சனைப் பொருட்கள் யாவற்றையும் எடுத்துக்கொண்டு வீட்டைப் பூட்டிவிட்டுப் புறப்படுகிறாள்.

சண்டை ஓய்ந்து விட்டதன் அறிகுறியாய் இப்போது சத்தங்கள் முற்றாக ஓய்ந்திருந்தன.

உலங்கு வானூர்தி - விமானங்கள் எதுவும் இல்லை.

வெளிப்படலையைத் திறந்து செல்லம் மேலே ஒரு அடிகூட வைக்காமல் அப்படியே நின்று விடுகிறாள். முகத்தில் ஏதோதோ சிந்தனையின் சாயல்கள்...

'சண்டை ஓஞ்சிட்டுது.. இன்னும் கொஞ்ச நேரத்திலை பிள்ளையள் ஆரும் என்னைத் தேடி வருங்கள்..'

'ராத்திரி துவக்கம் அடிபட்டுக் களைச்சு இப்ப ஒரு தேத்தண்ணி குடிக்க என்னைத் தேடி வரேக்க நான் இல்லாட்டி அதுகள்

(தொடர்ச்சி 41ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமெரிக்காவின் மத்திய பகுதியில் நிலவிய பழமையான நாகரிகம் மாயா நாகரிகமாகும். இது அமெரிக்க இந்தியருடையதாகும். கி.மு. 2000 ஆண்டு தொடக்கம் நிலவியது இந்த நாகரிகம். இந்த நாகரிக மக்கள் போர் வீரர்களை வழிபட்டார்கள். இந்த நாகரிகத்தின் உயர் நிலையின் இறுதிக் காலத்தில் நிறுவப்பட்ட "போர்வீரர்களின் கோயில்" மிகவும் புகழ் பெற்றது. சில சுவர்கள் இடிந்த நிலையில் காணப்படும் "போர் வீரர் கோயில்" மிகவும் கவர்ச்சிகரமானது.

நாட்டுப் பாதுகாப்புப் போரில் ஈடுபட்டு இறந்த வீரர்களை மாவீரர்களாகக் கொண்டு அவர்களை மதித்துப் போற்றும் மரபு உலகெங்கும் நிலவுகிறது. தமிழர் பண்பாட்டின் சங்ககாலத்திற்கு முந்திய காலம் 'பெருங்கற் பண்பாட்டுக் காலம்' எனப்படுகின்றது. இது இறந்தோரை அடக்கம் செய்யும் முறையை ஒட்டிய பெயரீடாகும்.

தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பெருங்கற் பண்பாட்டு தாழிக்காடுகள் பரவலாகக் காணப்படுகின்றன. இப் பண்பாட்டிலிருந்தே சங்ககாலப் பண்பாடு உருவானதாகக் கருதப்படுகின்றது.

சங்ககாலத் தமிழகத்தில் பல இனக் குழுக்கள் காணப்பட்டன. எனினும், பேரரசு உருவாக்கும் நோக்குடன் இக்குழுக்களுக்கிடையே போர் நடைபெற்றது. ஏனைய குழுக்களிடமிருந்து மண்ணையும் பெருஞ் செல்வமாகக் கருதப்பட்ட மாடுகளையும் காக்கப் போர் நடைபெற்றது. இப் போர்களிலே பெருந்தொகையானோர் இறந்தனர். இவர்களை மக்கள் தெய்வீக நிலையில் போற்றினர். இவர்கள் உரையும், பாட்டும் உடையவர்களாக விளங்கினர். இம்மாவீரர்களின் நினைவாக நடுகற்கள் நிறுவப்பட்டன. பெரு மன்னர், சிற்றரசர், குறுநிலத்தலைவர், படைத்தலைவர், போர்வீரர் முதலிய அனை



# மாவீரர் நினைவு மரபுகள்





www.tamilarangam.net





வர்க்கும் நடுகற்கள் நிறுவப்பட்டன.

புறநானூறு 221-ம் பாடல் கோப்பெருஞ் சோழன் என்ற மன்னனுடைய நடுகல்லைக் குறிப்பிடுகிறது. மன்னனின் உயிர் நண்பரான பொத்தியார் நடுகல்லைப் பரவிய செய்தி இப்பாடலிற் கூறப்படுகிறது. அதியமான் நெடுமான் அஞ்சிக்கு நினைவு நடுகல் நாட்டி விழாக் கொண்டாடப்பட்டது. அதில் ஔவையார் கலந்து கொண்டார். அப்போது அவனது பெருமையை நினைந்து ஔவையார் வருந்திப் பாடிய பாடல் புறநானூற்றில் 232-ம் பாடலாக இடம்பெற்றுள்ளது. இவர்கள் பெருமன்னர்.

ஒரு குறுநிலப்பரப்பில் பகைவர் ஆநிரைகளைக் கவர்ந்து சென்றனர். அப்பகுதித் தலைவன் அவர்களைத் தொடர்ந்து சென்று போரிட்டு ஆநிரையை மீட்டு வந்தான். காயம்பட்ட அவன் ஊரெல்லையில் வரும்போது வீழ்ந்திறந்தான்.

அவ்விடத்தில் அவன் வீரச்செயலைப் பாராட்டி நடுகல் நட்டு பந்தரிட்டுப் பரவினர். இச் செய்தி புறநானூறு 260-ம் பாடலில் கூறப்பட்டுள்ளது.

தலைவரில்லாத படை வீரர்களுக்கும் நடுகல் நடப்பட்டது. அகநானூறு, ஐங்குறுநூறு முதலிய நூல்களில் பாலை நிலத்திலும் வீதிகளிலும் நடப்பட்ட பெருந்தொகையான நடுகற்களைப் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. இவை பெருந்தொகையாக இருப்ப



அம்மா
ஏன் அழுகின்றாய்
இந்தக் கல்லறைக்கு
அருகில் நின்று
ஏனம்மா துக்கப்படுகிறாய்

உன் மகன் இங்கே இல்லை
இதோ பார்....

அவன்
மக்களில்
ஒருவனாகிவிட்டான்

- சிவசாகர்
ஆந்திர புரட்சிக் கவிஞர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தைக் கொண்டே இவை சாதாரண படை மறவர்களுக்கான நடுகற்கள் என்பது புலனாகின்றது.

வீரர்கள் வீழ்ந்துபட்ட இடங்களில் இந் நடுகற்கள் நடப்பட்டன. இவற்றில் இறந்த வீரனது பெயரும், பீடும் எழுதப்பட்டன. இந் நடுகற்களுக்கு தெய்வங்களுக்குச் செய்யப் படும் சிறப்புக்கள் செய்யப்பட்டன. நீராடுதல், மாலைசூட்டுதல், படையலிடல், மயிற்பீலி சூட்டுதல், தூபமிடல், விளக்கேற்றுதல் இசைக்கருவிகளை ஒலித்தல் முதலியவற்றைச் செய்து காலை தோறும் நடுகல்லை மக்கள் கை தொழுது வழிபட்டனர்.

சங்ககால நடுகற்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. எனவே அவற்றில் பெயரும் பீடும் எவ்வாறு எழுதப்பட்டன என்பதை அறிய முடியவில்லை. பல்லவர் காலத்தில் நிறுவப்பட்ட (கி.பி. 6 - 8) நடுகற்களே கிடைத்துள்ளன. இக் கற்களில் அரசன் பெயர், இறந்த வீரனின் பெயர், அவன் இறந்துபட்ட போர் பற்றிய செய்தி முதலியன இடம்பெற்றன. செங்கம் நடுகற்களில் சாசனச் செய்தியுடன் வாளும், கேடயமும் ஏந்திப் போரிடும் வீரனின் உருவப் பொறிப்பும் இடம்பெற்றது. கேரளத்துப் புலப் பள்ளியில் கிடைத்த வீரர் கற்களில் வீரன் போரிடல், இறந்த அவனது உயிரை உயர் நிலை உலகத்து மகளிர் மாலை சூட்டி வரவேற்றல், வீரன் சிவனை இலிங்க வடிவில் வழிபடல் ஆகிய காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. தென்னகத்தில் நடுகல் வழிபாட்டில் ஏற்பட்ட படிமுறை வளர்ச்சிகளை இச் செய்திகள் மூலம் அறியமுடிகிறது.

தமிழீழ விடுதலைப் போரில் மாவீரராகும் போராளிகளுக்கான மாவீரர் மயானங்கள் பெருங்கற் காலத்தையும் சங்ககாலத்தையும் ஒரு சேர நினைவூட்டுகின்றன. இங்கு மாவீரர் அனைவரையும் ஒரே இடத்தில் புதைப்பது பெருங்கற்காலத் தாழிக் காடுகளை நினைவூட்டுகிறது. நினைவுச் சின்னம் அமைத்து பெயரும் பீடும் எழுதுவதும், போற்றுவதும் சங்ககால நடுகல் மரபை நினைவூட்டுகிறது. போரில் உயிர்க்கொடை செய்த ஒவ்வொரு மாவீரனதும் வரலாற்றை உருவாக்கும் முயற்சி தமிழீழத்துக்கே தனியுரிமையானது. படங்களும், உருவச்சிலைகளும் வெளியிடலும், அமைத்தலும் செங்கம் புலப்பள்ளி நடுகல் மரபுகளை நினைவூட்டுகிறது.

**'வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'**

என்பது மனித தெய்வங்கள் பற்றி வள்ளுவரின் மதிப்பீடு. மாவீரர்களும் மனிதர்களே எனினும், அவர்கள் தமது ஆசாபாசங்களை ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டுக்காக தமது உடமை, உயர்வு, உயிர் அனைத்தையும் நல்க முன்வந்தவர்கள். இதனால்தான் மனித இனத்துக்கு நன்மை செய்ய முனைந்து உயிர்க்கொடை செய்த மாவீரர்களை அதிமானிடர்களாக மக்கள் கருதி அவர்களை மதித்துப் போற்றுகிறார்கள்.



**விடுதலை என்றால் என்ன விலை**
**என்று கேட்கும் ஈனர்கள் மத்தியில்**
**மங்கை நளாயினி அங்கையற்கண்ணி**
**திரேசா சாந்தா மதுஷா என்றும்**
**திலகன் திரு நவரத்தினம் ரங்கன்**
**அத்தனை பேரும் அடுக்கடுக்காக**
**தாய்மண் காக்க தன்னுயிர் ஈந்து**
**மாவீரராக மனதில் நிற்கின்றார்.**
**இவர்கள் செய்த சாதனை பற்றி**
**வீரம் பேசி நேரம் போக்கும்**
**காலம் அல்ல இன்றைய பொழுது**
**அண்ணன் தம்பி அக்கா தங்கை**
**அணிஅணியாக பெருந்திரளாக**
**விடுதலைப்புலிகளின் வீரப்பாசறையில்**
**துணிவுடன் இணைந்து மாவீரர்**
**விட்ட இடத்தை தொட்டு நிரப்பி**
**எதிரியின் கையை ஒட்ட நறுக்கி**
**ஆக்கிரமித்த அனைத்து நிலத்தையும்**
**மீட்டெடுத்து ஆட்சி அமைக்கும்**
**உரிமைப் போரில் உணர்வுடன் சேர்தல்**
**தமிழ் மண்ணின் மைந்தர் மாவீரர்கட்கு**
**நாம் என்றும் ஏற்றும் ஈகைச்சுடர்.**

**- இந்திரகுமார்.**

www.tamilarangam.net

# கோயில்கள்

மேசை மணிக்கூட்டின் அலாரம் பயங்கரமாக அலறியது. யோகன் திடுக்கிட்டு கண் விழித்தான். அவனுக்கு அதை அடித்து உடைக்க வேணும் போல் இருந்தது. 'நான் முறுக்கி விட்டாலும் நீயேன் அடிப்பான்' என்பது போல் அதனைப் பார்த்தான். மறுகணம் அவனுக்குத் தன்னை நினைக்க சிரிப்புத்தான் வந்தது. நேரம் ஆறு மணியாகிவிட்டது. எழுந்து வெளியே வந்தான். வாசலில் அவனது தங்கை பேப்பர் பார்த்துக்கொண்டிருந்தாள். 'இவளிட்டை இருந்து பேப்பரைப் பறிக்க வேணும், இது மூதேசி எடுத்தது எண்டால் இண்டு முழுக்க வைச்சு வாசிக்கும்' என மனதிற்குள் நினைத்துக் கொண்டவனின் மனதில் திட்டம் உடனடியாகத் தயாரானது.

"வாணி இஞ்சை பேப்பரைக் கொண்டு வா, ஓ.எல். சோதனைக்கு 2 கிழமை கிடக்கு. விடிய எழும்பி பேப்பர் பார்க்கிறா... ஓடு போய்ப்படி..' அவள் முணுமுணுத்தபடி உள்ளே செல்வதை இரசித்தபடி பேப்பரை எடுத்தான். அன்று மாவீரர் வாரத்தின் கடைசிநாள். பல கவிதைகள், படங்கள் பிரசுரமாகியிருந்தன. உள்ளே இருந்த தாளை எடுத்தான். அது.. அவனது நண்பன் ரவியின் படம். நெடிய வருடங்கள் ஓடிவிட்டன. யோகனின் நினைவுகள் பின்னோக்கிச் சுழன்றன.

★★★

அது அந்தத் தவணையின் கடைசி நாள். அவர்களது விடுதிப் பாசையில் அதை 'லாஸ்ற் டே' என்று சொல்லுவார்கள். அந்த இரவு அவர்களைப் பொறுத்தவரை ஒரு சுதந்திரமான இரவு. விடுதியின் சட்டதிட்டங்களிற்குப் புறம்பாக அன்றைய தினம் பற்பசையால் மீசை வைத்தல், கட்டிலுக்குப் பொறி வைத்தல், மை ஒற்றுதல் போன்ற 'திருகுதாளங்களில்' ஈடுபட மாணவர்கள் திரைமறைவில் அனுமதிக்கப்படுவார்கள். பொதுவாக அன்றைய சம்பவங்கள் பற்றி எந்த மாணவனும் விடுதிச்சாலை பொறுப்பாசிரியரிடம் முறைப்பாடு செய்வதில்லை. அப்படியான ஒரு இரவில் தான் ரவியும் யோகனும் தம்மைவிட ஒரு வகுப்புக் குறைந்த பத்தாம் ஆண்டு மாணவர்களுக்கு மீசை வைப்பதற்கு திட்டமிட்டார்கள். திட்டத்தின் சூத்திரதாரி ரவி. திட்டத்துக்கான காரணம் ஒரு கிறிக்கெட் போட்டியில் ஏற்பட்ட 'கொழுவல்'. 'மச்சான் யோகன், உவைக்குச் சரியான லெவலடா, இண்டைக்குப்பார் என்ன செய்யிறனெண்டு.' இது ரவி. 'என்ன செய்யப் போறாய்'. 'இரவைக்கு எல்லாருக்கும் மீசை வைக்கப்போறன், அதுவும்... பற்பசையாலை... நரைச்ச மீசை எப்படி ஐடியா?'

'ஐடியா நல்லம் தான், எங்கட வகுப்புப் பெடியள் இன்னும் இரண்டு பேரைச் சேர்த்தால் என்ன?'

'யோகன், அது பேய் வேலையாய்ப் போயிடும் மச்சான், இரண்டு பேர் காணும். நீ வாறியோ?' என்று ரவி கேட்டதும் யோகன் உடனடியாக ஒப்புக்கொண்டு விட்டான். திட்டம் செயல்படுத்தப்படவேண்டிய இரவும் வந்தது. அவர்களும் விழிப்பாகத் தான் இருந்தார்கள்.

'என்னடா செய்யிறது... அவங்கள் முழிச்சுக் கொண்டிருக்கிறாங்கள்? 'என்ரை' கசியோவில அலாரம் வைச்சிட்டு அதை காதுக்கருகில் வைச்சுக்கொண்டு கிடக்கப்போறன், விடிய 2 மணிக்கு அலாரம் அடிக்கும், அப்ப உவங்கள் படுத்திடுவாங்கள்'.

ரவியின் திட்டமிடல்படி இருவரும் படுத்துவிட்டார்கள். சரியாய் காலை 2 மணிக்கு ரவி யோகனை எழுப்பி விட்டான். இருவரும் எழுந்து பார்த்தனர். பத்தாம் ஆண்டு



மாணவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள். பாவம் எவ்வளவு நேரம் தான் அவர்கள் விழித்திருப்பது?

'யோகன் இந்தா பற்பசை. போய் மெயின் சுவிச்சை' நிப்பாட்டிப்போட்டு வா'

'மெயின் சுவிச்' நிப்பாட்டப்பட்டதும், 'மீசைவைத்தல்' ஆரம்பமானது. திடீரென.. 'டேய் மீசை வைக்கிறாங்களடா, எழும்புங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோடா லைற்றைப் போடுங்கோ' அது பத்தாம் ஆண்டு சுரேசின் அலறல். தொடர்ந்து தடபுட சத்தங்கள், 'மெயினை ஓப் பண்ணிப் போட்டாங்கள்' என்ற குரல்கள். யோகன் திகைத்துப் போய்விட்டான். பிடிபட்டால் எல்லோரும் சேர்ந்து துவைச்செடுத்துப் போடுவாங்கள்.

போடிங் மாஸ்ரரிடமும் முறையிட முடியாது. யோகன் கால் போன போக்கில் ஓடத் தொடங்கினான். பின்னால் பலர் கலைத்தனர். ஓடிப்போய் குளியலறைக்குள் புகுந்ததும் சரமாரியாக கல்வீச்சுக்கள் நடந்தன. இறுதியில் சரணடைய வேண்டி வந்து விட்டது. 'அண்ணைப்பிள்ளை வசமாக மாட்டியிட்டார்' இது வாகீசனின் ஏளனக் குரல். 'ஐயாவுக்கு இண்டைக்கு சாணித்தண்ணி அபிஷேகம் செய்ய வேணும்' இது காந்தன். காந்தன் தான் பத்தாம் ஆண்டு மாணவர்களின் முடிசூடா மன்னன். இவனால் எதுவும் பேச முடியவில்லை. அபிஷேகம் நடக்கத்தான் போகிறது என்ற நிலையில், அபிஷேகத் திரவியங்கள் எல்லாம் தயாராகிவிட்ட நிலையில்...

'டேய், விடியப்புறத்திலை மனிசரை நித்திரை கொள்ள விடமாட்டியள் போல கிடக்கு. என்னடா சத்தம்?' அதட்டியபடி பதினோராம் ஆண்டு மாணவர்கள் புடைசூழ ரவி வந்து கொண்டிருந்தான்.

'இவர் எங்களுக்கு மீசை வைச்சவர்' வாகீசனின் குரல் ஈனஸ்வரமாக ஒலித்தது.

பலத்த வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. இறுதியில் ரவி சொன்னான்,

"அவன் மீசை வைச்சால், நீங்களும் மீசை வையுங்கோ. அதைவிட வேறை ஏதாவது செய்தால் பிரச்சினை வரும்."

வேறு வழியின்று யோகனுக்கு மீசை வைப்பதுடன் சடங்கு பூர்த்தியாகிவிட்டது. எல்லாம் முடிந்ததும் யோகன் ரவியிடம் மெதுவாகக் கேட்டான்,

'நீ என்னெண்டடா தப்பினனீ? 'அவங்கள் எழும்பினதும் நான் பக்கத்தில கிடந்த வெறும் கட்டில் ஒன்றில் நித்திரை போலக் கிடந்திட்டன்'

யோகன் அவனை அதிசயமாகப் பார்த்தான்.

★★★

'ரவி இயக்கத்துக்கு போட்டானாம்' இரண்டாம் தவணைக்காக பெட்டி படுக்கைகள் உடன் விடுதிக்கு வந்தவனின், காதில் விழுந்த முதல் செய்தி இது தான்.

'எந்த இயக்கம்?' 'ரைகேஸ்' 'சீ.. எனக்குக் கூடச் சொல்லாமல் போட்டான்' என்று யோகன் சொல்லிக்கொண்டான். நாட்கள் நகர்ந்தன. ஒரு நாள் மாலை ரவி விடுதிக்கு வந்திருந்தான், சற்றுக் கறுத்து, மெலிந்து, முழங்கைகளில் உரசல் காயங்களுடன் அவனைப் பார்க்க யோகனுக்கு புதுமையாக இருந்தது. கதையோடு கதையாகக் கேட்டான்,

'என்ரா நீ எனக்குச் சொல்லாமல் போனனீ?'

'உனக்குச் சொல்லுறதென்றால் கடிதம் போடவேணும். இதைப்பற்றி எழுதுகிற கடிதம் ஆமியிட்டை அகப்பட்டால், அதுவும் உங்கட ஊரிலை அவன் ரோந்து திரியறவன். கடைசியா உனக்குத்தான் ஆபத்து..' யோகனுக்கு கண்கள் பனித்தன. எவ்வளவு ஈரநெஞ்சம் இவனுக்கு? இப்படியான ஈரநெஞ்சம் உள்ளவர்களால்தான் தங்களையிழந்து மற்றவர்களுக்காகப் போராடமுடியும் என யோகன் நினைத்துக்கொண்டான்.

★★★

அது தமிழீழத்தின் வரலாற்றில் ஒரு இருள் சூழ்ந்த காலப்பகுதி. ஆம்... இந்திய தேசத்து எருமைகளின் பாதக்குளம்பில் அகப்பட்டு தமிழீழம் இரத்தச்சேறாகிக் கொண்டிருந்தது. அப்படியான ஒரு நாளில் ஒரு மாலைப்பொழுதில் புத்தகங்களுடன் போராடிக் கொண்டிருந்தவனின் காதில் யாரோ கூப்பிடுவது கேட்டது. எட்டிப்பார்த்தான். ரவி நின்றுகொண்டிருந்தான்.

'உள்ளுக்க வா மச்சான்' உள்ளே அழைத்தவன், ரவியைப் பார்த்துக்கேட்டான்,

**மாவீரர்களே!**
**உங்களைப் புதைத்த மண் உறங்காது**
**உரிமைகள் பெறும் வரை கலங்காது**
**எங்களின் தாயகம் விடிவுபெறும் - புலி**
**ஏற்றிய கொடியுடன் ஆட்சி வரும்.**



www.tamilarangam.net

'என்னெண்டடா வந்தனீ? உது வழிய எல்லாம் அவங்கள் திரியிறாங்கள்'

'நான் இருக்கிற ஏரியா ரவுண்டப்' அது தான் வெளிக்கிட்டனான். இரவுக்குப் படுக்கவும் இடமில்லை...' ரவி சொன்னதும், யோகனுக்குத் துயரம் தொண்டையை அடைத்தது.

இந்த மண்ணின் மக்கள் நிம்மதியாக படுத்துறங்கி நிம்மதியாக மூச்சுவிட்டுத்திரிய வேண்டும் என்பதற்காக, சிலுவை சுமக்கும் இந்தப் புனிதனுக்குப் படுப்பதற்கும் இடமில்லை என்றால்...

'ஏன் மச்சான் உப்பிடிக் கதைக்கிறாய், நீ இஞ்சைபடுத்தால் என்ன?' யோகன் கேட்டான்.

டேய், நான் இயக்கம். குப்பி வைச்சிருக்கிறன். ஆமி வந்தாலும் என்னைப் பிடிக்க முடியாது? ஆனால் நீ... நீ படிக்கிறனி... ஆனால் தப்பித் தவறி நான் தங்கினது தெரிஞ்சாலும் உனக்குத்தான் ஆபத்து.

நான் இப்ப இஞ்சை வந்தது தங்கிறதற்கில்லை.... ஒரு கடிதம் தாறன். அதை நாளைக்கு உன்னிட்டை வாற சிறியிட்டைக் குடுத்து விடு... நான் போய் இந்த வைரவர் கோயில் பூக்கண்டுக்கை கிடக்கப் போறன்' யோகனுக்கு நெஞ்சுக்குள் ஏதோ செய்தது. சாகும்போது கூட இவர்களால் எப்படி மற்றவர்களைப் பற்றிச் சிந்திக்க முடிகிறது? யோகன் சிந்தித்தான். வைரவர் கோயிலடி, அங்கை எல்லாம் ஆமி இரவில திரியிறவன், இஞ்ச படு, அப்பிடி ஒண்டும் நடக்காது, நடந்தால் நீ குடிக்கிற குப்பியில பாதியை எனக்கும் தா'

ரவி அவனை நன்றி உணர்வுடன் பார்த்தான். 'எங்கள் தேசத்து மக்கள் உணர்வுடன் தான் இருக்கிறார்கள். நிச்சயமாக இந்தப் போராட்டம் வெல்லத்தான் போகிறது' ரவி நினைத்துக்கொண்டான்.

'என்ன யோசிக்கிறாய், இந்தா சாப்பாட்டுப் பார்சல், சாப்பிட்டிட்டுப் படு.'

**எமது மண்ணின் விடுதலைக்காக யார் போராடுகிறார்களோ அவர்களே இந்த மண்ணின் மைந்தர்கள்.**

**எமது மண்ணின் விடுதலையை நேசிக்காத எவரும் இம் மண்ணை ஆள அருகதையற்றவர்கள்.**

**- லெப். கேணல் திலீபன்**

யோகன் தனக்காக எடுத்து வந்த பார்சலை நீட்டினான்.

'நீ சாப்பிட்டனியோ?'

'ஓம்'

'பொய் சொல்லுறாய்'

'இல்லையடா பின்னேரம் கொத்து றொட்டி சாப்பிட்டனான். இது வழமையாய் வாற இடியப்பப் பார்சல்'

ஒரு பொய்யை சாமர்த்தியமாகக் கூறிவிட்ட மகிழ்ச்சியில் யோகன் இருக்க, ரவி சாப்பிடத் தொடங்கினான்.

'சத்தியமாய் யோகன் காலமையும் மத்தியானமும் ஒண்டுமில்லை' சாப்பிட்டு முடித்ததும் ரவி சொன்னான். யோகனுக்கு வேதனையாக இருந்தது. இப்படி எத்தனை இளசுகள் பட்டினி கிடக்கின்றனவோ?

எல்லாம் இந்தியர்களால் வந்த வினை. நினைத்துக் கொண்டவன் ரவியிடம் சொன்னான்,

'படு மச்சான்'

'படுக்கிறன், கொஸ்ரல்லிலை போல மீசை வைச்சிடாதை'

ரவி சொன்னதும். இருவரும் சூழ்நிலையை மறந்து சிரித்தனர்.

★★★

இரண்டு வருடங்கள் உருண்டோடி விட்டன. இந்திய இராணுவம் வெளியேறி, இரண்டாம் கட்ட ஈழப்போரும் ஆரம்பமாகிவிட்டது. ரவி இப்பொழுது இயக்கத்தில் ஒரு முக்கிய பொறுப்பாளராகி விட்டான். ஒருமுறை வீதியில் அவனைச் சந்தித்த போது யோகனால் மட்டெடுக்க முடியவில்லை. நிறத்துப் பூரித்து புத்தொலிவுடன் இருந்தான். 'மச்சான் இனி எனக்குச் சாவில்லையடா'

கடைசியாக அவன் சொன்ன வார்த்தை அதுதான். சரியாக மூன்று மாதம் கழித்து அவன் பலாலியில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்த செய்தியை பத்திரிகையில் பார்த்ததும் யோகன் துடித்துப் போனான். உடனடியாகப் புறப்பட்டு ரவியின் ஊருக்குச் சென்ற அவனால் ரவியின் சமாதியைத் தான் தரிசிக்க முடிந்தது. அந்தத் துயிலுமில்லத்தின் சுவர் ஒன்றில் எழுதியிருந்த வாசகம் அவனது கண்களில் பட்டது.

'மாவீரர்கள் புதைக்கப்படவில்லை, விதைக்கப்பட்டிருக்கிறார்கள்'

அவனது காதுகளில் 'மச்சான் இனி எனக்குச் சாவில்லையடா' என்ற வார்த்தைகள் ஒரு முறை எதிரொலித்தன.

★★★

'அண்ணா, இந்தாங்கோ தேத்தண்ணி. ஏழுமணியாகுது. முகம் கழுவாமல் யோசிச்சுக் கொண்டிருக்கிறியள்' வாணியின் வார்த்தைகள் அவனது சிந்தனையைக் கலைத்தன.

'வாணிக்குஞ்சு, உந்த மல்லிகைப் பூவெல்லாத்தையும் பிடுங்கி தண்ணி தெளிச்சு வையம்மா'

'ஏன் அண்ணா? இண்டைக்கு கோயிலுக்குப் போகப் போறியளோ?' வாணி அதிசயமாகக் கேட்டாள்.

'ஓம்'

'எந்தக் கோயிலுக்கு?'

'மாவீரர் துயிலுமில்லத்துக்கு' யோகன் அமைதியாகப் பதிலளித்தான். அவனுக்குத் தெரியும் புனிதம் அங்கே குடிகொண்டிருக்கிறது என்று.

www.tamilarangam.net

# அன்றைய நினைவில்... இன்றைய நிகழ்வுகள்....



1992-ம்ஆண்டின் மாவீரர் நாள் பிறக்கப்போகின்றது. இந்த நாளின் பிறப்பின் போது நாம் மாவீரர் துயிலுமில்லத்தில் நிற்க வேண்டும். இதற்காகச் சென்று கொண்டிருக்கிறோம். பகலிலேயே எங்கோ ஒருவரைத்தான் காணக்கூடியதாக இருக்கும் இராசபாதையில் இந்த நள்ளிரவிலும் ஒரே மக்கள் கூட்டம். இந்த வீதியிலிருந்து மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் செல்லும் வீதியில் இன்னும் கூடுதலான மக்கள் திரள் திரளாகச் செல்கிறார்களே.... இவர்கள் கிளாலியை நோக்கிச் செல்லும் மக்கள் கூட்டமல்ல... நல்லூர்த் திருவிழா முடிந்ததும் கடலைக் கடைகளுக்கும் ஐஸ்கிறீம் கடைகளுக்கும் வேடிக்கை பார்க்கும் கூட்டமுமல்ல. அனைவருமே உணர்ச்சிப் பிளம்புகளாய் காட்சியளிக்கின்றார்கள். எங்கள் தேசத்தின் விடுதலையைச் சத்தியம் செய்யும் அந்தக் கூட்டத்தினூடேதான் போய்க்கொண்டிருக்கிறோம். இது ஒரு வித்தியாசமான அனுபவம்தான். நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியின் போதும் மனதுள் ஏதோ ஒன்று... அதை விபரிக்க முடியவில்லை.

'என்ரை ராசா.. கிளியண்ணை வந்திருக்கிறார் ஒருக்காப் பார் ராசா...' ஒரு மாவீரனின் சமாதியில் அவர் தாய் அழுது கொண்டே சொல்லும் வார்த்தைகள் எமது நெஞ்சைப் பிழிகின்றது. கண்ணீர் முட்டுகிறது. கூட வந்தவர்களுக்குத் தெரியாதபடி துடைத்துக் கொள்கிறேன். இப்போதே அழத்தொடங்கினால்.. கஸ்டப்பட்டு கண்ணீரைச் சிக்கனப் படுத்திக் கொள்கிறேன்.. பின்பு தேவையல்லவா.

வழியில் இந்த ஆண்டு மாவீரர் தினம் பிறக்கும் வேளையில் மணியோசைக்குப் பின் ஒலிக்கவிருக்கும் மாவீரர் பாடலைப் பாடவிருக்கும் வர்ணராமேஸ்வரன் வருகிறார். 'ராமேஸ்வரன் எனக்குப் பக்கத்தில நில்லுங்கோ.... நீங்கள் தான் எனக்குப் பக்கத்தில நிண்டு பாடுறது' - உரிமையுடன் கட்டளையிடுகிறார் புதுவையண்ணா.. இப்படித்தான் நாங்கள் எங்கள் மக்களை வசப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

சுற்று முற்றும் பார்க்கிறேன். மாவீரர் சமாதியில் ஊதுவர்த்திகளைக் கொழுத்தியும், மலர்வைத்தும்.... எந்த ஒரு ஆலயமும் இந்த மாதிரியான புற அகத் தூய்மையோடு காணப்படுவதில்லை.... கண்ணீரைக் கட்டுப் படுத்த சிரமமாயிருக்கிறது. சாதாரணமாக இருப்பதாகக் காட்டிக் கொள்ளச் சிரமப்படுகிறேன். ஒவ்வொரு விநாடியும் செல்லச் செல்ல மயிர்க்கால்கள் குத்திடுகின்றன.

மாவீரர் துயிலுமில்லத்தில் முதலாவது சுடர் ஏற்றப்படும் இடம் - அந்த நேரத்தை எதிர்பார்த்தபடி மனம் எதையோ தேடுகின்றது. 12.00 மணி. யாழ் மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன் முதலாவது சுடரை ஏற்றுகிறார். எங்கும் ஆலயமணியோசை. தீபத்தில் ஏற்றப்படும் ஒளியைத் தொடர்ந்து எனது கண்கள் எனது கட்டுப்பாட்டை இழக்கின்றன. ஆலயமணியின் ஓசை ஒலிக்கு மட்டும் மௌனமாக நின்று அஞ்சலிக்கின்றோம். ராமேஸ்வரன் பாடுகிறார். இதே பாடல் ஒலிபெருக்கியிலும்... நாம் உறுதியெடுத்துக் கொள்கின்றோம்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி
விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி
இழிவாக வாழோம் தமிழீழப்போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி."

நான் ஏன் அழுகின்றேன்.... இழப்புக்களால் உரமேறிய தேசமல்லவா எனது தேசம்... ஐயாயிரத்துக்கு மேலும் சில நூறு பேர்களை இழந்துவிட்டோமே இன்னுமா மாறவில்லை நான். சீலனது வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. 'போராளிகள் மென்மையான மனமுடையவர்கள். மற்றவர்களுக்கு ஏற்படும் துன்பங்களைக் கண்டு மனம் சகிக்கமுடியாதவர்களே போராளியாகின்றனர். அதைத் தாங்கிக்கொண்டு சாதாரணமாக இருக்கக் கூடியவர்கள்தான் போராட்டத்துக்கு வெளியில் நிற்கிறார்கள்' - எவ்வளவு அச்சொட்டான வார்த்தைகள் இவை. சூழவுள்ள மக்களைப் பார்க்கிறேன். எத்தனை எத்தனை ஆயிரம் சொந்தங்கள் எமக்கு. எல்லோரும் எம்மவர்கள்... ஆனால் அன்று நீயும் ஆனந்தும் எரிக்கப்படும் போது உங்களுக்குப் பக்கத்தில் ஒருவருமே இல்லையே.... உனது வீரச்சாவுச் செய்தி கேட்டு திருமலையிலிருந்து பறந்து வந்த உனது அம்மா உனது உடலைத் தரும்படி எவ்வளவு மன்றாடியிருப்பார் சிறீலங்கா இராணுவத்திடம். அவர்கள் உனது உடலைக் கொடுக்கவில்லையே.... பௌத்த தர்மம் அதற்கு இடமளிக்கவில்லை... இன்று இந்தத் தேசமே சொந்தம் கொண்டாடுகிறது. நாங்கள் வளர்ந்துவிட்டோம்... எங்கும் போராளிகள், பொதுமக்கள்...

ஒரு தாக்குதலுக்காக யாழ் நகரப் பகுதிக்குள் சென்று கொண்டிருக்கிறோம். மக்கள் நடமாட்டமுள்ள இடத்தில் இராணுவத்தினர் இரண்டு வாகனங்களில் வந்து இறங்குகின்றனர். கம்பீரமான தோற்றத்துடன் தனக்குச் சொந்தமில்லாத மண்ணில் நடமாடுகின்ற

## துயரப்பறவைகளின் துயரிசைப் பாடல் அல்லது அதிமாநுடர் பற்றிய சங்கீதம்

- சுபாஸ்

வீரர்களே!
உங்களின் முகங்களை
எங்களுக்கு ஒருமுறையேனும்
பார்க்க முடியாது போனதையிட்டும்
எங்களுக்காகவும்
நீங்கள்
எரிநெருப்பில் நின்று
களமாடியதையிட்டும்
என்றுமே காணமுடியாது போன
முற்றத்தில் பூக்கள் மலர்வது போன்ற
உங்களின் புன்னகையையிட்டும்
நாங்கள் கலங்குதல் செய்தோம்.

மழைத்துளி போன்று
வரண்ட மனங்களில்
சிந்தும் உங்களின் நினைவு
ஒரு வசந்த காலத்தை
எமக்கு ஞாபகப் படுத்துகிறது.
உங்களைப் போல..
உங்களைப் போல வாழ முடியாது
போனதையிட்டும்
உங்களுக்கருகிலேனும் நின்று
தொட்டு, ஆவி தழுவிடப் பேசும்
பாக்கியமும் இல்லாது போனதையிட்டும்
நாங்கள் கலங்குதல் செய்தோம்.

வயல் வெளிகளிலோ
பசுமை நிறைந்த புல்வெளிகளிலோ
கானகங்களிலோ
நீங்கள் பாடிய பாடல்கள் எதுவுமே
எங்கள் செவிகளில் ஏறாதுபோய்
துயரமுந்திச் சாகும்
துயரப்பறவைகளாகிய எங்களுக்கு
தற்காலிகமாக
தங்கிய கூடுகளில்
ஒரு ஓநாய் அல்லது ஓநாய்க் கூட்டம்
ஒரு மரநாய் அல்லது மரநாய்க் கூட்டம்
தாக்கியழிக்க வருவதான பயம்.
திசையெல்லாம் அலையும் எங்களை
எழுப்பும் சங்கீதத்தை
எப்படி காற்றிலும் ஒழித்து வைத்தீர்கள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னர் இராணுவத்தினர். அப்போது நீ சொல்கிறாய், "இதைப் போல நாங்களும் ஆம்ஸைக் கட்டிக் கொண்டு சுதந்திரமா திரிய வேணும். அப்ப அது புதினமில்லாத மாதிரிச் சனம் போக வேணும்" எவ்வளவு ஆசையாகச் சொன்னாய். இந்தப் போராட்டம் வெல்லும்... நாங்கள் வளர்வோம் என்பதெல்லாம் நாம் எதிர்பார்த்ததுதான். ஆனால், இவ்வளவு விரைவாக.... எல்லாம் இன்று போல் இருக்கிறது.

**"உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்**
**உறவினர் வந்துள்ளோம்"**

இதே நேரம் இந்த மாவீரர் துயிலுமில்லத்தில் ஏதோ ஒரு இடத்தில் அழுது கொண்டிருப்பார்கள் எனது குஞ்சம்மாவும், குஞ்சையாவும். எனது இளமைக் காலங்கள் நினைவுக்கு வருகின்றன. இவர்களின் மகன் நக்கீரன் (செந்தில்குமரன்) அப்போது பிறக்கவில்லை. (ஆறு பெண்பிள்ளைகளுக்கு பின்னே இவன் பிறந்தான்) ஒவ்வொரு பிள்ளையும் பிறக்கும்போது இது ஆண்பிள்ளையாக இருக்காதா என்ற எதிர்பார்ப்பாயிருக்கும். இனி ஆண்பிள்ளையே பிறக்காது. தமக்கு இறுதிக்கடன் செய்ய ஆண்பிள்ளை இல்லையே என்று குஞ்சையாவுக்கு ஒரு ஏக்கம். அதனால் அவர் என்னுடன் கூடியளவு பாசத்துடன் இருந்தார். ஒருநாள் எனக்குத் தேவையான பழவகைகளை வாங்கி வந்து 'குஞ்சையாவுக்கு கொள்ளி வைப்பியா மனா?' என்று கேட்டார். நானும் 'ஓம்' என்றேன். அவருக்கு மகிழ்ச்சி தாழவில்லை. அதன் பிறகு எனது தேவைகளை நிறைவேற்றுமிடத்தை நான் தெரிந்து கொண்டேன். ஒவ்வொரு தடவையும் அவர் என்னைக் கேட்பார் 'குஞ்சையாவுக்கு என்ன செய்வாய்?' 'கொள்ளி வைப்பன்' இதன் தாக்கம் விளங்காது பதில் சொல்லும் வயது.

ஏழாவதாகச் செந்தில்குமரன் பிறந்தான். அவன் மீது பாசமாகக் கொட்டி வளர்த்தார்கள். நானும் வளர்ந்து விட்டேன். அப்போதெல்லாம் இந்தப் பழைய சம்பவத்தை எனது குடும்பத்தாரிடம் சொல்லிச் சிரிப்பேன். 'இப்ப குஞ்சையா செத்து நான் கொள்ளி வைக்கப் போனால் குஞ்சையா பெட்டிக்குள்ளால எழும்பி 'ஏன் நீ கொள்ளி வைக்கிறாய். செந்தில் எங்கை போட்டான்' எண்டு கேட்பார் என்று சொல்லிச் சிரிப்பேன்.

அவன் இயக்கத்துக்குப் போய் மாவீரர் ஆனதும் நான் அங்கே போனேன். அப்போது அவர் 'டேய் நீ சின்னனாய் இருக்கேக்கை குஞ்சையாவுக்குக் கொள்ளி வைப்பனெண்டெல்லோ சொன்னனீ... வைப்பாய் தானே' என்றார்.

புரியாத வயதில் சொன்ன அந்த வார்த்தைகளில் இத்தனை அர்த்தமா?.. இத்தனை தாக்கமா..? தொடர்ந்து பாடல் ஒலிக்கிறது.

**"...... ..........அன்று**
**செங்களம் மீதிலே உங்களோடாடிய**
**தோழர்கள் வந்துள்ளோம்"**

அடிபட்ட பந்தாக மீண்டும் சீலனை நோக்கி நினைவுகள்... சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தாக்குதல். மேல் மாடியில் காலில் காயப்பட்ட சீலன் காலை இழுத்துக் கொண்டு இயலாத நிலையில் றிப்பீட்டரைக் கொடுத்துவிட்டு அந்த பொலிஸ் நிலைய வளவில் தேங்கியிருந்த மழைத்தண்ணீரைக் குடிக்கிறான். தொடர்ந்து படுத்தபடியே அவனது உத்தரவுகள் 'ஒண்டையும் விடக் கூடாது. எல்லாத்தையும் ஏத்தவேணும்' இயந்திரமாக இயங்குகின்றோம். எல்லாவற்றையும் ஏற்றியதும் மினிபஸ் புறப்படுகிறது. அழுதபடியே ரஞ்சன் காயப்பட்ட எல்லாரையும் கொஞ்சுகிறான். (சீலன், புலேந்திரன்......) எல்லாரையும் காப்பாற்ற விரைவாக வாகனத்தைச் செலுத்துகிறான் சங்கர். அன்று மற்றவர்கள் காயப்பட்டதற்காக அழுத ரஞ்சன் உட்பட ஏனைய அனைவரையும் தொலைத்து விட்டு நிற்கிறோம். அதே வரிகள் மீண்டும்.

**"...... ..........அன்று**
**செங்களம் மீதிலே உங்களோடாடிய**

**மாவீரர்களே!**
**நெஞ்சில் விடுதலைக் கனலைச் சுமந்தீர்**
**நெருப்பினில் ஆடியும் தேகம் இழந்தீர்**
**உங்களின் நினைவுடன் பயணம் தொடரும்**
**ஒருநாள் வெற்றிக் கொடிகள் உயரும்**



www.tamilarangam.net

**தோழர்கள் வந்துள்ளோம்"**

வரிசையாக நினைவுக்கு வருகின்றனர். 'யாழ்ப்பாணத்துக்கு வெளியில அடிக்க வேணும்' என்று அடிக்கடி கூறும் செல்லக் கிளியம்மான்.

உமையாள்புரத்தில் இராணுவத்தினர் ஓடும்போது சிரித்தபடியே 'துரத்துங்கடா' என்றபடியே அவர்களின் ட்றக்கில் ஏறிய செல்லக்கிளியம்மான்... கஞவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத் தாக்குதலில் 'அம்மாட்டச் சொல்லுங்கோ நான் சண்டையிலதான் செத்தனென்டு' என்று சொன்ன பரமதேவா... ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடுமையாகச் சண்டை நடந்து கொண்டிருக்கும் போது 'ரெண்டு கிறனைட் தாங்கோ நான் உள்ளுக்கை போய்க் காட்டுறன்' என்று சொன்ன விசாகன்..... 'அண்ணை ஒரு சக்கைக் கானைத் தாங்கோ நான் கொழுத்திக் கொண்டு போய் உள்ளுக்கை வச்சிட்டு வாறன்' என்று சக்கைக்கானை வாங்கிக் கொண்டு துப்பாக்கி வேட்டுக்களுக்கிடையே பொலிசாருக்கு மத்தியில் அதை வைத்து விட்டு வந்த கமல்.... இன்னும் எத்தனை எத்தனை...

**"எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்.**
**ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே**
**மறுபடி உறங்குங்கள்"**

தவிக்கும் மனதின் வார்த்தைப் பிளம்பு இது. எனக்கு இதற்கும் மேல்..... 'ழ'கரம் 'ல'கரம் வித்தியாசமில்லாமல் மழலையாக ஒலிக்கும் சீலனின் வார்த்தைகளைக் கேட்க வேண்டும் போல் இருக்கிறது.

**"நள்ளிரா வேளையில் நெய்விளக்கேற்றியே**
**நாமுமை வணங்குகின்றோம்"**

பசீனுக்கு எப்போதும் சந்தேகம் இந்த சயனைட் வேலை செய்யயுமாவென்று அடிக்கடி கேட்பான் 'அண்ணை இது வேலை செய்யுமோ?' 'அது வேலை செய்யும் நீ போடா' - வல்வெட்டித்துறைக்கு அனுப்பிவைப்போம். நாம் எத்தனை தரம் சொன்னாலும் அவனுக்குத் திருப்தியில்லை.

ஒரு நாள் நள்ளிரவு, களைத்துப்போய் வந்த நான் படுக்கப்போகிறேன். அப்போதும் கேட்கிறான். 'அண்ணை இது வேலை செய்யுமோ?' - எனக்கு எரிச்சல். 'வேலை செய்யாது போல கிடக்கு... உன்னில தான் ரெஸ்ற் பண்ணவேணும்... போய்ப் படடா'

அவன்தான் எமது இயக்கத்தில் முதன் முதல் சயனைட் உட்கொண்டவன். அந்தச் செய்தி கிடைத்ததும் நான்... இந்த வாயால இனி எதுவும்...'

**"எங்கே எங்கே ஒருதரம் விழிகளை**
**இங்கே திறவுங்கள்**
**ஒரு தரம் உங்களின் திருமுகம் காட்டியே**
**மறுபடி உறங்குங்கள்"**

கண்ணால் காணமுடியவில்லைத்தான், ஆனால் மனதில் அனைவரது முகங்களும்... அங்கிருந்து நகர்கிறேன்.

**"உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது**
**உரைத்தது தமிழீழம் - அதை**
**நிரை நிரையாகவே நின்றினி விரைவினில்**
**நிச்சயம் எடுத்தாள்வோம்"**

என்ற வரிகளை மனதில் சுமந்தபடி அங்கிருந்து நகர்கிறேன். கடந்த வருடத்தைப் போலவே அங்கு பலர் மயங்கி விழுகின்றார்கள். முதலுதவிப் படையினர் அழைக்கப்படுகின்றனர்.

அறிவிப்பாளரின் மொழியில் கூட சோகம்...

உலகத்தில் எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும் இப்படியொரு காட்சியைக் காணமுடியாது என்று என் மனது சத்தியம் செய்கிறது.

---

**இலங்கைத் தீவின் ஒரு பகுதியாக இருந்த எமது மண் இன்று, உலகத்தின் கண்களில் தமிழீழமாகத் தோன்றத் தொடங்கியிருக்கின்றது. இந்த மாற்றம், வெறும் ஒலிபெருக்கி முழக்கங்களினாலும், அச்சடித்த காகிதங்களாலும், வாய்ச்சவடால்களாலும் கொண்டுவரப்பட்டதல்ல. ஒற்றைத் துப்பாக்கியோடு, உறுதியும், கட்டுப்பாட்டுடனும் ஆரம்பித்த எமது இயக்கத்தின் எண்ணற்ற வீரர்கள் செய்த தியாகங்களினாலும், சிந்திய இரத்தத்தாலும், கண்ட சாதனைகளாலும் உருவானது தான் தமிழீழம். இதற்கு நாம் கொடுத்த விலை சொல்லில் அடங்காது. வீட்டைப் பிரிந்து, படிப்பைத் துறந்து... கைகளில் துவக்கோடும், கழுத்தில் சயனைட்டோடும் களத்தில் இளம்புலிகள் எத்தனை பேர்! அவர்களது வேட்கையும், வீரமும், விவேகமும்தான் விடுதலைப்போரின் உயிர்மூச்சு. இவர்களது வெற்றிகளின் பின்னால் வேதனைகள், எத்தனையோ வீரமரணங்கள். மண்ணில் கலந்த குருதி நாளைய அரசியல் சாசனமாக உருமாறும். இவர்கள் களம் கண்ட கதையை தலைமுறைகளிற்கூடாக காலம் எப்போதும் சொல்லிக்கொண்டிருக்கும்.**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உயிர் விதைப்பு

நீர் கொண்டு போகும் நீளிருள் மேகமே
நீவந்து நீர் சொரிந்து போகாயோ
நிலவோடு விளையாடும் விண்மீன் கூட்டமே
நிலம் வந்து ஒளியேற்ற மாட்டீரோ
ஊரையே உசுப்பும் ஊழிக் காற்றே
ஒரு முறையேனும் உறங்கிவிடு
மண்மூடி எம் மாவீரர் துயில்கிறார்
மறுபடி மௌனம் காத்துவிடு

பாலையும் வேம்புமே பனியில் நடுங்கும்
பங்குனி குளிரில் காத்திருந்தார்
ஆந்தையும் வௌவாலும் அயர்ந்துறங்கினாலும்
அனல் விழி திறந்திருந்தார்
வெயிலேறிப் போய் விழியெரிந்தாலும்
இமைமூட இவர் மறந்தார்
விடுதலை வேள்வியில் வில்லொடிந்தாலும்
நடு நெஞ்சில் நாண் ஏற்றார்

விடிவெள்ளி மட்டும் விழித்திருக்க
வெடிகொண்டு படகேறினார்
கொடி முல்லையெல்லாம் குலுங்கியழ
நொடிப் பொழுதில் உயிரேகினார்
கடற்புலியாகி காலனும் அதிர
கடலினில் உயிர் சிதைத்தார்
கருவேங்கையாகி களமாடி நின்று
காற்றினில் உயிர் விதைத்தார்.

அங்குலத் துண்டாய் அன்னைமண் காத்தவர்
ஆறடி மண்ணில் அடக்கமோ
கனவிலும் எதிரியை கலங்க வைத்தார்
காற்று வெளியில் அடக்கமோ
நீரிலும் தீமூட்டி நீறாகிப் போனவர்
நீலக் கடல் மடி அடக்கமோ
அழுதிடும் கண்களை ஆற்றிவிடு
ஆயிரம் நெய்விளக்கு ஏற்றிவிடு!

- சோதியா நோர்வே



விடுதலைப் பாதையில் விரைந்து நடந்தீர்
விடிவிற்காகவே வீழ்ந்து மடிந்தீர்
புதைந்திருந்தாலும் நீங்கள்
பூகம்பப் பொறிகளே!

நீங்கள் புதைக்கப்படவில்லை
விதைக்கப்பட்டிருக்கிறீர்கள் - நாளை
பூமியைக் கிழித்து துளிர்த்தெழுவீர் - எம்
தேசத்து விடுதலையைக் காண்பதற்காக.

# மாவீரர்கள்

சொந்தம் தனைத் துறந்து
தாயகம் மீட்க என்று
சேனை வந்திணைந்த சோதரர்கள்
செந் நெல் விளை புலங்கள்
சீர் வரிசை சீதனங்கள்
கண்ணிற்கு அழகான கன்னியரும்
கனடா மண் வரைக்கும்
கால் ஊன்றுதற்காய்
கடவுச் சீட்டுக்களும்
அள்ளிக் கொடுக்கின்ற
ஆட்கள் பல இருந்தும்
அனைத்தும் தள்ளி விட்டு
எம் அன்னை மண்ணதனின்
அடிமை விலங்குடைக்க
ஆகுதியாய் கலந்து விட்ட
எம்மினத்தின் இளைஞர்களே
மாவீரர்கள்.

மெல்ல நடை பயின்று
மேனி எல்லாம் பூச்சூடி
கண்ணில் மை தீட்டி
கணவனும் காதலனும்
கண்கண்ட தெய்வமென
காலமெல்லாம் கால் தொழுது
காலை முதல் மாலை வரை
கடன்கள் பல முடித்து
வீட்டில் பொங்கிப் பெருக்குதலும்
பிள்ளை பெறுதலுமே
பெண்ணினத்தின் பெருமை என்ற
பொம்மை நிலை விடுத்து
தமிழீழ விடுதலைக்காய்
தம்முயிரை தான் கொடுத்த
தமிழ்த்தாயின் தங்கைகளே
மாவீரர்கள்.

- இ. திருமாறன்

www.tamilarangam.net



# மாவீரர் நாளில் உறுதி எடுப்போம்

போராட்டக் களத்தில் உயிர்துறந்த வீரர்கள் வீராங்கனைகள் ஆகியோரை நினைவுகூர்ந்து, அவர்களது வீரச் செயல்களை நினைவில் மீட்டி, அவர்கள் விட்டுச்சென்ற பணியை தொடர்ந்து செய்வதற்கு உறுதி எடுக்கும் நோக்குடன் 'மாவீரர் தினம்' நினைவு கூரப்படுகின்றது. நாங்கள் ஒரே மக்கள், ஒரே தாயின் மக்கள், தமிழ் மக்கள், தமிழீழ மக்கள் என்ற உண்மையை ஆணித்தரமாக வெளிப்படுத்தவும் இம் மாவீரர் தினம் கொண்டாடப்படுகின்றது. யார் இந்த மாவீரர்கள்? அவர்கள் தங்கள் உயிரினும் மேலாக தங்கள் தாய்நாட்டை நேசித்தவர்கள். உயிரினும் மேலாக தங்கள் மக்களை நேசித்தவர்கள். எனவே தான் உயர்வான தங்கள் உயிரை, தாய்நாட்டின் விடுதலைக்காக விட்டுவிடத் துணிந்தார்கள். எனவே தான் அவர்களை மாவீரர்கள் என்று அழைக்கின்றோம்.

அவர்களுடைய வாழ்க்கையில், அவர்களுடைய செயல்களில், அவர்களுடைய மரணங்களில் மிகுந்த அர்த்தம் இருக்கிறது. ஆழ்ந்த பொருள் இருக்கிறது. அவர்கள் சாதாரண மனிதர்கள் அல்ல. அவர்களது போராட்ட வாழ்விலும், வீரமரணத்திலும் ஓர் ஆன்மீகம் உள்ளது. அவர்கள் தங்களைத் துறந்தவர்களாக இருந்துள்ளனர். தங்கள் சுயத்தை அழித்தவர்கள். தங்கள் ஆன்மாவை தமிழீழ தேசிய ஆன்மாவோடு இணைத்துக்கொண்டவர்கள். இவ்வாறு தமது ஆன்மாவை அகண்ட தமது மக்கள் சமூகத்தோடு, அதன் பரந்த ஆன்மாவோடு பிணைத்துக் கொண்டவர்கள். இத்தகு முக்தி நிலையில், தமிழ் அன்னை மீது கொண்ட பக்தி நிலையில், தமிழன்னைக்கு உயிர் கொடுப்பதற்காக தங்கள் இன்னுயிரைக் கொடுக்க முன்வந்தவர்களாக இம் மாவீரர்கள் உள்ளனர். அவர்களது தற்கொடையினால் தமிழீழ வரலாறு எழுதப்படுகின்றது. அவர்களது உயிர்க்கொடை தமிழீழ வரலாற்றைச் செழுமைபெறச் செய்கின்றது. தற்கொடையாளர்களது வாழ்க்கை, தமிழீழ வரலாற்றோடு சங்கமம் ஆகின்றது. எனவே மாவீரர்கள் வரலாறு, தமிழீழ வரலாற்றின் வளர்ச்சியோடும், தொடர்ச்சியோடும் நீடிக்கிறது. தமிழீழ மண்ணைப் போல் சாகாவரம் பெற்றதாகின்றது.

எனவேதான் மாவீரர்களை சிரஞ்சீவிகள் என்கிறோம். அவர்களுக்கு அழிவில்லை. அவர்கள் இறந்த பின்னும் உயிர் வாழ்கிறார்கள். அவர்களுக்கு இருப்பும், இறப்பும் ஒன்றாக இருக்கின்றது. அவர்கள் மக்களின் மனங்களில் வாழ்கிறார்கள். எங்கள் மண்ணின் ஒவ்வொரு அணுத்துணிக்கையிலும் வாழ்கிறார்கள். எங்கள் காற்றில் வாழுகிறார்கள். சுழன்றடிக்கும் சண்டமாருதத்தில் வாழுகின்றார்கள். எங்கள் மண்ணிலே எறிகின்ற சூரியனின் ஒளிக்கற்றைகளில், பொழியும் பால் நிலவில், ஆர்ப்பரிக்கும் கடல் அலைகளில் வாழ்கின்றார்கள். எம் மண்ணில் சிவப்பாய் பூக்கும் மலர்களும் அவர்களே. அவர்களது தார்மீக கோபமும், வேகமும், சத்திய ஆவேசமும் நெருப்பாக உமிழ்கின்றது. அவர்கள் ஏற்றி வைத்த நெருப்பு, அவர்கள் தங்கள் உயிரினால் ஒளி கொடுத்த தீபம், எங்கள் மனங்களில் ஒளியைப் பாய்ச்ச வேண்டும். எங்கள் உணர்வுகளில் தீயைப் பற்ற வைக்க வேண்டும். எங்களைத் தேசப் பற்று மிக்கவர்களாக மாற்ற வேண்டும். எங்களை நாங்களே உணர்ந்து கொண்டு, போராட்டம் என்னும் நெருப்பு மழையில் நனைபவர்களாக வேண்டும்.

இம் மாவீரர்கள், இம் மாமனிதர்கள் எப்பொழுது தோன்றுகிறார்கள்? ஒரு புரட்சிகர கால கட்டத்தில் தான் தோற்றம் தருகிறார்கள்.

இப்போது எங்கள் வரலாற்றில் இது ஒரு போர்க் காலமாக உள்ளது. எமது வரலாற்றின் சக்கரம் மிகவும் வேகமாகச் சுழல்கின்ற காலம். வரலாற்றின் நியதிகள், விதிகள் வேகமாக இயங்குகின்ற காலம். இப் போராட்டக் காலத்தில் தான் உயர்ந்த மாமனிதர்கள் தோன்றுகிறார்கள். மனிதர்கள் தெய்வங்கள் ஆகின்றார்கள், தெய்வங்கள் மனிதர்களாகப் பிறக்கின்றார்கள். இத்தகு கண்கண்ட தெய்வங்கள்தான் எமது மாவீரர்கள். இத்தகு மாவீரர் நாளில், அம் மாவீரர்களை நினைவுகூர்ந்து நாம் ஒரு பிரதிக்னை எடுத்துக்கொள்வோம். அடிமை என்றோ, அகதி என்றோ அடையாளங்கள் எமக்கு உரியவையல்ல. சுதந்திரமான தமிழர்கள் நாம் என்பதை எங்கள் மனங்களில் ஏற்றுவோம். அந்த நிதர்சனத்தை நிலைநிறுத்துவதற்கு, அந்த உண்மையை உறுதிப்படுத்துவதற்கு, நாம் உழைப்போம்; போராடுவோம் என்று சத்தியம் செய்துகொள்வோம்.

www.tamilarangam.net

# தெய்வங்கள்

'நிலக்கிளி' அ. பாலமனோகரன்

"கோயில் இல்லாத ஊரிலை குடியிருக்க வேண்டாம் எண்டு இதுக்குத்தான் சொல்லுறது!... எங்கடை பழைய சனங்கள் அறியாமலே அப்பிடிச் சொன்னதுகள்! ரிவியிலை கூட நேற்றுக் காட்டினவங்களாம்!... எனக்குத்தான் பாக்கக் கிடைக்கேல்லை!..."

மங்களம் காலையில் எழுந்ததும் முறையிட ஆரம்பித்துவிட்டாள். அவளுடைய கணவன் சிவதாசனுக்கு எரிச்சலாக வந்தது. கிழமை நாட்கள் முழுவதும் தொழிற்சாலையில் கஷ்டப்பட்டு வேலை செய்பவன். ஓவர் ரைம் வேலை வந்தால் சனி, ஞாயிறு என்று பாராது உடம்பைப் போட்டு அடிப்பவன். இன்று அத்தி பூத்தது போல விடுமுறை. ஆறுதலாகப் படுக்கையில் கிடந்து எழும்ப வேண்டும் என்ற அவனுடைய ஆசை, மனைவி மங்களத்தின் தொணதொணப்பில் கெட்டுப் போய்விட்டது.

பிள்ளையார் பால் குடிக்கிறாராம்!.... சில இடங்களில் நாகதம்பிரான் சிலைகளும் பால் குடிக்கின்றனவாம்!.. சிவதாசன் முதலில் இதைப்பற்றிக் கேள்விப்பட்டபோது அவனுக்கு மிகவும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. கடவுள் காரியம்!... புதுமைகளும் அற்புதங்களும் எங்கே, எப்போது, எப்படி நடக்கும் என விளக்க முடியாதுதான்..... என் அவன் தனக்குள் நினைத்துக் கொண்டான். ஆனால், அந்த அற்புதம் இங்கு டென்மார்க்கிலும் நிகழ்வதாகத் தொலைக்காட்சியில் சொல்லப்பட்ட போதுதான் அவனுக்கு மங்களத்தின் வடிவத்தில் சங்கடம் ஆரம்பித்தது.

டென்மார்க்கில் ஈழத் தமிழர்கள் அதிகமாக வாழ்கின்ற யூலண்டில் வாழமுடியவில்லையே என்ற ஆதங்கம் மங்களத்துக்குப் பல வருடங்களாகவே உண்டு. அங்கு தமிழர்கள் சில குறிப்பிட்ட நகரங்களில் பெருந்தொகையாக வசிப்பதனால் அங்கு அவர்கள் சார்ந்த சமய நிகழ்ச்சிகளும், குடும்ப வைபவங்களும், பொது நிகழ்ச்சிகளும் அடிக்கடி நிகழ்வதற்கு ஏதுவாக இருந்தது. அதுவும் இப்போது யூலண்டில் பிள்ளையார் பால் குடிக்கும் அற்புதம் நிகழ்வதாக அறிந்தபோது மங்களம் சிறிது அதிகமாகவே உணர்ச்சிவசப்பட்டுப் போனாள்.

யூலண்டில் தனக்குத் தெரிந்தவர்களிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு விபரம் கேட்டாள். அவர்கள் சொல்வதைக் கேட்கக் கேட்க அவளுக்குப் பெரிய அதிசயமாக இருந்தது. அந்த அதிசயத்தை தானும் நேரில் காண வேண்டும்... தெய்வ அனுக்கிரகம் இருந்தால் தானும் பிள்ளையாருக்கு ஒரு கரண்டி பாலாவது பருக்கவேண்டும் என்ற ஆசை அவளுள் வளர்ந்தது. இந்தச் சனி ஞாயிறே யூலண்ட் போய்வர வேண்டும் என அவள் வியாழக்கிழமை தொட்டே கணவனை இரந்தும், நயந்தும், சிணுங்கியும், அழுதும், கோவித்தும் அவை எதுவும் பலனளிக்காத காரணத்தினாலேயே இப்போது சிவதாசனுடைய தூக்கத்தைக் கலைத்துப் பழிவாங்கிக்கொண்டிருந்தாள்.

ஞாயிற்றுக்கிழமை ஓவர் ரைம் வேலைக்கு வருவதாக தான் ஏற்கனவே செய்துகொண்ட பொருத்தத்தை தன்னால் எச் சந்தர்ப்பத்திலுமே மீறமுடியாது என அவன் திட்டவட்டமாகச் சொன்னதாலேயே மங்களத்துக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்திருந்தது.

"உங்களுக்கு திடீரெண்டு ஏலாமல் போனால் அல்லது எனக்கு, அல்லாட்டி எங்கடை மைதிலிக்கு ஏதாவது பெரிய சுகவீனம் வந்திட்டால் என்ன செய்வியள்? சுகமில்லையெண்டு போன் பண்ணிப்போட்டு நாங்கள் யூலண்டுக்கு போட்டி வருவமப்பா"

எண்டு ஒருவாறு மடக்கிச் சமாளிப்பதற்குள் அவளுடைய மகள் மைதிலி ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள்.

ஞாயிற்றுக்கிழமை அவளுக்குப் பாடசாலையில் ஒரு முக்கியமான நாடக ஒத்திகை உண்டாம். அதில் பிரதான பாகம் எடுக்கும் தான், அதில் கலந்துகொள்ளாவிடின் அதில் சம்பந்தப்பட்டவர்களுடைய நேரமும் முயற்சியும் தன் ஒருத்தியினால் வீணாய்ப்



போய்விடும். அதனால் நீங்களும் அப்பாவும் போய்வாருங்கள்... நான் வரவில்லை என மைதிலி சொன்ன போது மங்களம் யூலண்ட் போகும் எண்ணத்தைக் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

பதினைந்து வயதான மைதிலியை வீட்டில் ஒரு இரவு தனியே விட்டுவிட்டு யூலண்ட் போய் வருவதா!... முழுக்க முழுக்க டெனிஷ் பிள்ளைகளுடனும், டெனிஷ் சூழ்நிலைகளிலும் கடந்த ஐந்து ஆண்டுகளாக வளர்ந்து வரும் மைதிலியின் ஒளிவு மறைவின்மையும், கேள்விகளும் ஏற்கனவே வயிற்

www.tamilarangam.net

றில் புளியைக் கரைக்க ஆரம்பித்திருந்தது. அவளுக்கு கரவு, கல்மிஷம் என்பன அறவே தெரியாது. இந்தச் சமயத்தில் இறுக்கிப் பிடிக்கப் போனால் முறித்துக்கொண்டு போய்விடுமோ என்ற இயல்பானதொரு நுண்ணறிவு மங்களத்துக்கு இருந்தபடியால் தான் மகள் விஷயத்தில் அவள் சாதுரியமாக நடந்துகொள்ள முடிந்தது.

தகப்பனும் மகளுமாகச் சேர்ந்து தனது நியாயமான ஆசையில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டார்களே என்ற புழுக்கத்தினால் அவிந்துகொண்டிருந்த மங்களத்துக்கு தனக்குத்தானே வாய்விட்டுப் புலம்பிக் கொள்வது ஒரு ஆறுதலாகவிருந்தது.

வரவேற்பறையில் ஷோகேசினுள் இருந்த பொருட்களைத் தூசி துடைத்துக்கொண்டே தன்பாட்டுக்குப் புறுபுறுத்த மங்களத்துக்கு பளீர் என ஒரு யோசனை தோன்றியது.

அவர்களுடைய நகரத்தின் கடையொன்றில் பலவிதமான சிலைகளை அவள் அடிக்கடி காண்பதுண்டு. அவற்றில் கணிசமானவை தென்னிந்தியச் சிற்பங்களும் இருந்தன. காலைத் தூக்கியாடும் நடராசர் சிலை, கபால விநாயகர், சித்திவிநாயகர் எனப் பல சிலைகளை அவள் கண்ணாடியூடாகக் கண்டதுண்டு. அந்தக் கடைக்கே சென்று அங்குள்ள பிள்ளையார் ஒன்றுக்கு நான் ஏன் பால் பருக்கிப் பார்க்கக் கூடாது? கடைக்காரனுக்கு விஷயத்தை விளங்கப்படுத்தினால் அவனுடைய அனுமதியைப் பெற முடியுமல்லவா?....

செய்துகொண்டிருந்த வேலையைப் போட்டுவிட்டு சட்டெனப் படுக்கையறைக்கு ஓடினாள். அங்கு ஒருவாறு மறுபடியும் உறக்கத்தை வரவழைத்துக் கொண்ட கணவனை உசுப்பி தன் ஆசையைக் கூறியபோது அவனுக்குத் தன் மனைவியைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

தன் பெற்றோர், சகோதரங்கள், ஊர் உறவு எல்லாவற்றையுமே விட்டுவந்து இங்கு டென்

# விடியல் தேடும் வேங்கைக்கு!

தமிழீழ மண்ணதனில்
தரங்கெட்ட இனவெறியர்
தமிழை மிதிப்பது நியாயமா?
எழுந்து வாடா தமிழா!
இனியதோர் புவிபடைக்க...

காலமெல்லாம்
எங்களினம்
கலங்குவது சரியா?
புதுக்காவியம் படைத்திட
புறப்படடா தமிழா!

சமர்க்களம்
சென்று - நீ!
சாதனை படைக்க
சரியான நேரம்
சடுதியாய் வாடா!

எத்தனை வேங்கைகள்
இன்னுயிர் ஈந்தனர்
அத்தனையும் எங்கள்
அகத்தில் பதிந்த
அழியாத சுவடுகள்!

உன் வீரத்தின் விழுதுகள்
விழுந்திடலாமா?
எமது தேசத்தின்
விடிவுக்காய்!
வீறுநடை போடு!

ஆயிரம் எதிரிகள்
அருகில் வந்தாலும்
அனல் போல்

எழுந்து - நீ
எதிர்கொள்ளடா!

சட்டங்கள் தெரியாத
சிங்களத்தி
சந்திரிகாவினால்
எம் சங்கத் தமிழினை
அழிக்க முடியுமோ?

திட்டங்கள் தீட்டும்
திரைமறைவு(த்)
தேசத் துரோகிகளினால்
எங்கள் தேசத்தின் விடிவு
சிதறிப்போகுமா?

வட்டங்கள் போடும்
வானவூர்தியை
உந்தன்
துப்பாக்கிக் குண்டுகள
துளைத்துச் செல்லும்

கலங்காதே வீரனே!
காதவெளித் தூரம்தான்
புலிநிகர் தமிழன் - நீ
போற்றுகிறேனிப்போது
விடியல் பரவும்
உன் போர்க்களத்தை.

- மகேசன் (சவுதி அரேபியா)

www.tamilarangam.net

மார்க்கில் ஆறேழு வருடங்களாக வாழ்ந்து வரும் அவளுக்கு, ஒரு கிராமத்து தமிழ் பெண்ணுக்கு இருக்கக்கூடிய விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு, மற்றைய தமிழர்களோடு கலந்து பழக, இந்த இடத்தில் வாய்ப்பிருக்கவில்லை. தனது வேலையில் தான் ஒன்றிப் போவதனால் தனக்கு அவளுக்கிருக்கும் தனிமைத் துயர் அவ்வளவாக இல்லை என்பதையும் அவன் உணர்ந்திருந்தான்.

"மங்களம்!.... எனக்குத் தெரிந்த டெனிஷ், உந்த விஷயத்தைக் கடைக்காரனுக்கு விளங்கப்படுத்திற அளவுக்குப் போதும் எண்டு நான் நினைக்கேல்லை.... மைதிலியைக் கூட்டிக்கொண்டு போ!.... தயவுசெய்து என்னை மட்டும் உந்த அலுவலுக்கு இழுக்காதை" என்று சொல்லிவிட்டு அவன் மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டான்.

★★★

சிவதாசன் தனது தூக்கம் கலைந்து எழுந்து குளித்து உடைமாற்றிக்கொண்டு வரவேற்பறைக்கு வந்தபோது நகரத்துக்குச் சென்றிருந்த மைதிலியும் மங்களமும் வீட்டிற்குத் திரும்பி வந்தனர்.

மங்களத்தின் முகமே போன காரியம் வெற்றியளிக்கவில்லை என்பதைக் காட்டியது.

"அந்தக் கடைக்காரன், தான் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட உடனை அங்கை கடையிலை இருந்த பிள்ளையார் சிலையளுக்கெல்லாம் தானும் பால் பருக்கிப் பார்த்தவனாம்.... ஒண்டுகூடப் பால் குடிக்கேல்லையாம்!.... அவனுக்கென்ன தெரியும் பிள்ளை யாரைப்பற்றி!.... இரா முழுக்கப் பண்டியிறைச்சியைத் திண்டு பியரும் குடிச்சிட்டுக் காலமை எழும்பிக் குளிக்காமல் முழுகாமல் பால் பருக்கினால் பிள்ளையார் பால் குடிப்பாரே!.... சும்மா கடைவழிய வைச்சிருக்கிறதெல்லாம் வெறும் சிலையள்தான்!... சிலையைக் கொண்டு வந்து கோயில்லை வைச்சு ஆசாரம் அனுட்டானமாய் அதுக்குப் பூசை பண்ணி வழிபட்டால்தானே அதுகள் தெய்வங்களாகும்!.... இதை முதலிலேயே யோசிச்சுப் பாராமல் பாலையும் தூக்கிக்கொண்டு ஓடின நானல்லோ விசரி!" என மளமளவெனப் பொரிந்து கொண்டிருந்தாள் மங்களம்.

மகள் மைதிலியிடம் நடந்தவை பற்றி சிவதாசன் விளக்கமாகக் கேட்டறிய முனைந்த போது வாசற்கதவு மணி ஒலித்தது. மைதிலி ஓடிப்போய்க் கதவைத் திறந்தபோது அங்கு சுதா நின்றுகொண்டிருந்தாள்.

"வாம்மா சுதா!.... நல்ல நேரத்திலை வந்தாய்!... நானே உன்ரை வீட்டை வரவேணும் எண்டு நினைச்சுக் கொண்டிருந்தனான்.... எங்கை கணேசுவைக் காணேல்லை?...." என வரவேற்றாள் மங்களம்.

"அவருக்கு இண்டைக்கு வேலை!.... எங்கடை தூசி இழுக்கிற மெசினுக்கு அவர் வாங்கிக்கொண்டு வந்த பை அளவு பிழைச்சுப் போச்சுது!.... அதை வாங்கின கடையிலை குடுத்து மாத்தி வைக்கச் சொல்லிப் போட்டார்... கடையிலை அவங்களிட்டைப் போய் என்னண்டு கேக்கிறதெண்டு தெரியேல்லை!..... அதுதான் மைதிலிக்கு நேரம் இருந்தால் ஒருக்கால் கூட்டிக்கொண்டு போவமெண்டு வந்தனான்!"

"ஓ!... அதுக்கென்ன!.... நானும் மைதிலியும் இப்பதான் கடைத்தெருவுக்குப் போட்டு வந்தனாங்கள்!... இண்டைக்கு மத்தியானம் மட்டும் கடையள் திறந்திருப்பாங்கள்தானே!... ஒரு கோப்பி குடிச்சிட்டுப் போட்டு வாருங்கோவன்!" என அன்பு மேலிடக் கூறினாள் மங்களம்.

மைதிலி சுதாவின் கையைப் பிடித்து அழைத்து வந்து சோபாவில் அமரவைத்துத் தானும் கூடப் பக்கத்தில் இருந்து கொண்டாள்.

சுதாவின் வரவு அந்த நேரத்தின் இறுக்கத்தைத் தளர்த்தி, மங்களத்தின் களையிழந்த முகத்தில் ஒரு மலர்ச்சியையும் கொண்டு வந்திருந்தது.

"இந்த ஊரிலை தட்டத்தனிய இருந்த எனக்கு கடவுளாய்ப் பார்த்து உன்னைக்

**மாவீரர்களே!**
**நீங்கள் புதைந்த இடத்தில் புல்லா முளைக்கிறது?**
**இல்லையே!**
**போராடும் எங்களுக்கு புது வீரமல்லவா பிறக்கிறது**
**நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்.**



www.tamilarangam.net

கொண்டுவந்து விட்டிருக்கிறார். உன்ர புருஷன் கணேசுவும் இவரைப் போலத்தான்!.... இரண்டு பேருக்கும் தாங்கள் செய்யிற வேலைதான் கடவுள்! மனுசி பிள்ளை குட்டி கூட அதுக்குப் பிறகுதான்!.... அங்கு யூலண்டிலை சனமெல்லாம் பிள்ளையாருக்குப் பால் பருக்குதுகளாம்..... வாருங்கோ நாங்களும் போய் அந்தப் புதுமையைப் பாத்திட்டு வருவம் எண்டால் அதைக் கேட்டு நடக்கிறதுக்கு கொஞ்ச நஞ்சமெண்டாலும் தெய்வ பக்தி இருக்கோணும்!.... நானும் சொல்லிச் சொல்லிக் களைச்சுப் போனன்.... ஆனால் மைதிலியாவது அப்படியிருக்கக் கூடாது....அதுதான் என்ரை ஆசை!... நான் படிச்ச சமய பாடம், தேவாரம் எல்லாம் எனக்கு மறந்து போச்சுது!... நீ இப்பத்தான் கலியாணமாகி ஊரிலை இருந்து வந்திருக்கிறாய்!... எங்கடை மைதிலிக்கு நீதானம்மா தமிழ், சமயம், தேவாரம் இதெல்லாம் கொஞ்சம் சொல்லிக் குடுக்கவேணும்! அவள் ஒரு நல்ல தமிழ்ப் பொம்பிளையாய் வளர உதவி செய்யவேணும்!.... உன்னைத்தான் நான் இதுக்கு நம்பியிருக்கிறன்!" எனக் கேட்டுக்கொண்ட மங்களத்தைப் பார்த்து அமைதியாகச் சிரித்தாள் சுதா.

★★★

சுதாவும் மைதிலியும் நகரத்திலிருந்த கடைத்தெருவுக்குப் போய்க்கொண்டிருந்த தெருவில் சனநடமாட்டம் அதிகம் இருக்கவில்லை.

வீட்டிலிருந்து புறப்பட்ட கையுடனேயே மைதிலி, தானும் தாயாரும் சிலைகள் விற்கும் கடைக்குச் சென்றதையும் அங்கு நடந்தவற்றையும் சுதாவுக்குக் கூறிவிட்டு உடனேயே ஒரு கேள்வியையும் கேட்டாள்.

"சுதா அக்கா!.... பல இடங்களிலை இந்தப் புதுமை நடக்குது எண்டுதானே எல்லாரும் சொல்லுகினம்.... விசாரிச்சுப் பார்த்து உண்மையெண்டால் நம்பத்தானே வேணும்!"

> **எமது போராளிகள் வேறுபட்டவர்கள். உடலையும் உயிரையும் பணயம் வைத்து போர்க்களத்தில் சமராடுபவர்கள். உயிரையும் விட சுதந்திர பூமியை மேலான்தாக நேசிக்கும் இலட்சியவாதிகள். களத்தில் புயலாகப் பாயும் இவர்கள் ஒருபோதும் புறமுதுகு இடுவதில்லை. களப்புண் ஏற்படினும் களத்தைவிட்டுப் போக மாட்டார்கள். அவர்கள் போவதெனில் உயிரற்றோராகவோ அல்லது உடலில் இயக்கமற்ற தன்மையைப் பெறும்போதோதான் பிறரால் களத்தை விட்டு அகற்றப்படுகிறார்கள்.**
>
> **இது எம் போராளிகளுக்குரிய தனித்துவ இயல்பாகும். இதுவே தம்மை அழிக்க முடியாதென இறுமாந்திருக்கும் ஆக்கிரமிப்பாளர்களையும் வெற்றிகொள்ள வழிவகுக்கிறது.**
>
> ***- கப்டன் மலரவன்.***

"நான் கேக்கிறது இதை உண்மையெண்டு நம்புகின்றியள் எண்டல்ல!.. உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருக்குதா எண்டுதான் கேக்கிறன்?"

ஏழெட்டு வயதிலேயே டென்மார்க்குக்கு வந்திருந்தும் இந்த அளவுக்கு விளக்கமாகத் தமிழ் பேசும் மைதிலியின் திறமையை மனதுக்குள் மெச்சிக்கொண்டாள் சுதா.

"மைதிலி!..... என்ரை அப்பா அம்மா, சகோதரங்கள், இனம் சனம் எல்லாரும் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள்தான்! நானும் என்ர பெற்றோரோடை ஒழுங்காய் கோயில் திருவிழா எண்டெல்லாம் போய் வந்தனான்தான். அது ஒரு காலம்! ஷெல்லடி, பொம்பரடி, சாப்பாட்டுச் சாமான் தட்டுப்பாடு, மருந்துத் தட்டுப்பாடு எண்ட நிலைமை இல்லாத காலம்! இப்ப அங்கை எப்ப ஷெல் அடிப்பான், எப்ப குண்டு போடுவான் எண்டு பயந்து பயந்து பதுங்குகுழியிக்கை சீவிக்கிற பயங்கரப் போர்க் காலம்! இந்த அவலமான நேரத்திலை கடவுளிட்டை முறையிடத்தான் சனத்துக்கு ஏலும்!... கடவுளைக் கொண்டாட அதுகளுக்கு எங்கை வழி!" என்று சொல்லிப் பெருமூச்செறிந்த சுதாவின் முகத்தில் கவிந்த இருளையும் சோகத்தையும் உணர்ந்த மைதிலி அவளுடைய கரத்தை ஆதரவாகப் பற்றிக்கொண்டாள்.

சற்றுநேரம் எதுவுமே பேசாது அமைதியாக நடந்துவந்த மைதிலி மறுபடியும் பேச ஆரம்பித்தாள்.

"எங்கடை வகுப்பிலையும் இந்த விஷயத்தைப் பற்றி நாங்களெல்லாரும் கதைச்சனாங்கள்..... எங்கடை வாத்தியார்கூட இதைப்பற்றி கன விஷயங்கள் சொன்னவர். புதுமைகள் நடக்கிறதிலை அற்புதம் எதுவுமில்லை, ஆனால் அந்தப் புதுமைகள் நடக்கிறதாலை சனங்களின்ரை மனதிலை விசேஷமாய் ஏதாவது நல்ல மனமாற்றம் ஏற்பட்டால்தான் அது ஒரு அற்புதம் எண்டு சொல்லி அதுக்கு தங்கடை சமயத்திலை இருக்கிற கதையையும் எங்களுக்குச் சொன்னவர்!"

"என்ன கதை அது மைதிலி?" என்று ஆவலுடன் கேட்டாள் சுதா.

"யேசுநாதர் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் ஆசீர்வதித்து ஐயாயிரம் பேருக்கு உணவாக வழங்கிய அற்புதம் பற்றிய கதை அது!.... அந்தக் கதையின்படி ஊருக்கு வெளியிலே வீடுகள் கடைகள் எதுவுமில்லாத ஒரு இடத்திலை யேசுவின்ரை பிரசங்கத்தைக் கேக்க ஐயாயிரம் பேருக்கும் அதிகமாய் மக்கள் கூடியிருந்த நேரம். அவர்கள் தொலைவிலிருந்து நடந்து வந்து வெகுநேரமாகத் தன்னோடிருந்ததைக் கண்ட யேசு அவர்கள் பசியாயிருந்ததை உணர்ந்தார். அப்போது அவர் தன்னுடைய சீடர்களைப் பார்த்து இந்தச் சனங்களுக்குக் குடுக்கிறதுக்கு உங்களிட்டை ஏதாவது சாப்பாடு இருக்கின்றதா எனக் கேட்டபோது அவர்கள் அங்குமிங்கும் விசாரித்துக் கடைசியில் ஒரு சிறுவனிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் இருப்பதாகக் கூறினார்கள். அந்த அப்பங்களையும் மீன்களையுந்தான் யேசு

www.tamilarangam.net

ஆசீர்வதித்து ஐயாயிரம் பேருக்கு உணவளிக்க வழி செய்தார் என்றும் அது யேசு செய்த அற்புதங்களில் ஒன்று என்றும் சொன்ன எங்கடை வாத்தியார் இன்னுமொரு விஷயத்தையும் எங்களுக்குச் சொல்லி அதைப்பற்றி எங்களை யோசிக்கச் சொன்னவர்... அது என்னவெண்டால்.... அந்த ஐயாயிரம் பேர் கொண்ட இடத்திலை ஆக ஒரு சின்னப் பொடியன் மட்டும் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் ஏன் கொண்டு வந்திருந்தான்? போற இடத்திலை சாப்பாடு ஒண்டும் கிடைக்காது, ஆனபடியால் நான் கையிலை ஏதாவது கொண்டு போகவேணும் எண்டு அந்தச் சின்னப் பையன் மட்டும் யோசிச்சவனா?.... இந்த விஷயத்தைத்தான் எங்கடை வாத்தியார் எங்களை வடிவாய் யோசிச்சுப் பார்க்கச் சொன்னவர்! உண்மையிலை அந்த ஐயாயிரம் பேரிலை ஒரு ஆயிரம் பேர் எண்டாலும் கையிலை சாப்பாடு கொண்டுதான் போயிருப்பினம்! யேசுவின்ரை நல்ல புத்திமதிகளைக் கேட்டு அந்த ஆயிரம் பேரும் தங்களிட்டை இருந்த சாப்பாட்டைப் பக்கத்திலை இருந்த ஆக்களுக்கும் பகிர்ந்து கொடுத்துச் சாப்பிட்டிருக்குதுகள்! தங்களிட்டை இருக்கிறதிலை இல்லாத ஆக்களுக்குக் குடுக்கோணும் எண்டு அந்த ஆயிரம் பே மனங்களும் மாறினதுதான் அங்கை நடந்த உண்மையான அற்புதம் எண்டு எங்கடை வாத்தியார் சொன்னவர். அதோடை இந்தக் கருத்து தன்ரை சொந்தக் கருத்தெண்டும், அதை நாங்கள் கட்டாயம் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லையெண்டும் அவர் சொன்னவர்! நீங்கள் இதைப்பற்றி என்ன நினைக்கிறியள் சுதா அக்கா எனக் கேட்டாள் மைதிலி.

"உங்கடை வாத்தியார் சொன்ன கருத்திலை உண்மை இருக்குது மைதிலி!... பசிக்கின்ற நேரத்தில் சோறுதான் தெய்வம்! தாகம் எடுக்கின்ற நேரத்திலை தண்ணீர்தான் கடவுள் எண்டு ஒரு தமிழ்க் கவிஞர் பாடினது இப்ப நினைவுக்கு வருகுது!... இதையெல்லாம் யோசிக்கிறபோது இப்ப எங்கடை நாட்டிலை உள்ள தெய்வங்கள்தான் நாங்கள் எங்கடை கண்ணுக்கு முன்னே, நேருக்கு நேரை காணுகிற தெய்வங்கள் எண்டு நம்புறன் மைதிலி!" எனக் குரல் கரகரக்க உணர்ச்சி மேலிட்டுக் கூறிய சுதாவை உற்றுப் பார்த்தாள் மைதிலி.

"மைதிலி!... மற்றச் சனங்களின்ரை பசி பட்டினியைப் போக்க தங்களிட்டை இருக்கிறதைக் குடுக்கிற மனுசரையே நாங்கள் மிகவும் உன்னதமானவர்கள் எண்டு சொல்லுறம்! தன்னுடைய நாட்டு மக்கள் சுதந்திரமாய், நிம்மதியாய் எப்போதும் இருக்க வேணும் எண்டதுக்காக தங்கடை உயிரையே குடுக்கிற ஆக்கள் வெறும் மனுசரல்ல... அதுகள்தான் உண்மையான தெய்வங்கள்! .....



**நான் என் உயிரினும் மேலாக நேசிக்கும் மக்களே! உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழ வேண்டும். இங்கு ஒரு மாபெரும் புரட்சி வெடிக்கட்டும்.**

**மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்க முடியாது.**

**எமது உரிமைகளை நாமே வென்றெடுக்க வேண்டும். இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்கக்கூடாது.**

***- திலீபன்***

எங்கடை நாடு விடுதலை பெறவேணும் எண்டதுக்காக எத்தினை ஆயிரம் இளம் வாலிபர்களும், யுவதிகளும் தங்களுடைய உயிரையே அர்ப்பணித்திருக்கிறார்கள் என உனக்குத் தெரியுமா மைதிலி?.... இந்த நிமிடத்தில் கூட அங்கே போர்க்களத்திலே, புதுப் புது நவீன ஆயுதங்களையும், கவச வாகனங்களையும், போர்க் கப்பல்களையும், குண்டு வீச்சு விமானங்களையும் வைத்துக்கொண்டு பல்லாயிரக்கணக்கான எதிரிகள் நமது மண்ணையும் மக்களையும் நாசம் செய்யும்போது, போதிய ஆயுதங்களும் ஆட்பலமும் இல்லாமலே, தங்களுடைய இளம் உடல்களையும், உயிர்களையுமே ஆயுதமாகக் கொண்டு போராடுகின்ற உன் வயதையொத்த இளம் பிள்ளைகள் இருக்கின்றார்கள் தெரியுமா? நான் இன்று வணங்கும் தெய்வம் யாரென நீ என்னைக் கேட்டால், அந்த மனித தெய்வங்கள்தான் இன்று நான் வணங்கும், வாழ்த்தும் தெய்வங்கள் எனச் சொல்வேன் மைதிலி! தன்னுயிரையே பிறர்க்காக வழங்கும் அவர்களுடைய செயல் அல்லவா இன்று எல்லாவற்றையும் விட மிகவும் புதுமையாகவும் அற்புதமாகவும் உள்ளது" எனக் கண்களில் நீர் ததும்பக் கூறினாள் சுதா.

அவளுடைய கரத்தை இறுகப் பற்றியவாறு நடந்துகொண்டிருந்த மைதிலிக்கு உடல் புல்லரித்தது.

"சுதா அக்கா! அந்தத் தெய்வங்களைப் பற்றிய கதையளை எனக்குச் சொல்லித் தருவியளே!" என ஆர்வத்துடன் கேட்ட மைதிலியையும் அவளுடைய விழிகளில் எரிந்த கனலையும் கண்ட சுதாவுக்கு மெய் சிலிர்த்தது.

"அதைவிட எனக்கு சந்தோஷமான வேலை வேறை ஒண்டும் இல்லை மைதிலி!" என்று சொன்ன சுதா நெஞ்சில் நம்பிக்கை மிக்கவளாக மைதிலியின் கரத்தை இறுகப் பிடித்தவாறே தொடர்ந்து நடந்துகொண்டிருந்தாள்.

முற்றும்

www.tamilarangam.net

(23-ம் பக்கத் தொடர்ச்சி) திதி

என்ன செய்யும்?

குற்றம் செய்வது போன்றொரு உணர்வில் அவள் பரிதவித்துப் போகிறாள்.

'பிதிர்க்கடன் செய்யாமல் விட்டா பிதிர்கள் சாபம் போடுமாம்'

"சிவ சிவா.... நான். என்ன செய்ய?" - வாய்விட்டுக் கூறிய செல்லத்தின் மனதில் மாறிமாறிப் போராட்டம் நடக்கிறது.

போவதா? நிற்பதா?

ஒரு சில நிமிடங்கள் தான் -

அவளுள்ளே ஒரு தீர்மானம் பிறக்கிறது. திரும்பி உள்ளே வருகின்றாள்.

87-ம் ஆண்டு திலீபனுடைய இறுதி யாத்திரையில் கலந்துவிட்டு வந்த பிறகு, தொடர்ந்து சில நாட்கள் அந்தச் சோகத்திலிருந்து மீளமுடியாமல் தனது கணவர் தவித்த தவிப்பையும், போராளிகளின் மீதும், போராட்டத்தின் மீதும் அவர் வைத்திருந்த ஈடுபாட்டை வெளிப்படுத்திய அவரது நடவடிக்கைகளையும் செல்லம் இப்போது நினைத்துப் பார்க்கிறாள்.

பன்னிரண்டு போராளிகள் ஒரே சிதையில்... தானும் விழுந்து விட்டது போலப் புழுவாகத் துடித்த தன் கணவருடைய மனப்பாங்கு... இப்போது நினைவில் மூட்டங்கொண்டன.

எந்த நேரம் என்றில்லாமல், யாரென்றில்லாமல் - ஊருக்குள் திரியும் எந்தப் போராளியைக் கண்டாலும், வீட்டுக்குக் கூட்டி வந்து சாப்பிடச் செய்த பின்பே, அனுப்பி வைக்கும் தன் கணவருடைய பாச உணர்வு... மீண்டும் மீண்டும் வருகின்றது.

பெரும்பாலான நாட்களில், போராளிகளை இவர்களின் வீட்டுக்குக் கூட்டி வந்து போன பிறகு, "போராட்டத்துக்கு அனுப்பி வைக்கிறதுக்கு எங்களுக்கொரு பிள்ளை இல்லாமல் போட்டுதடி செல்லம்.." என்று கூறி ஆதங்கப்படும் உணர்வுள்ள அந்த மனிதரின் பரி



★ **"உலகில் எல்லார் கருத்தையும் கேள். சிந்தி. நன்றாகச் சிந்தி. நீயாகச் சிந்தி. யாரும் உனக்காக சிந்திக்க மாட்டார்கள்"**

★ **"அறிவும் வயதும் அனுபவமும் உயர்வும் கிடைக்கும்போது பணியவேண்டும். பணிவென்பது உலகையும் மக்களையும் புரிந்து கொண்டு அவர்களுக்காக உழைத்தல் வேண்டும்."**

***- கேணல் கிட்டு***

தவிப்பு மாறாமல் அவளுள் துளிர்க்கிறது.

'தமிழனை அழிப்பதற்காகப் பல்கலைக் கழக வளவினுள் இறக்கப்பட்ட இந்திய இராணுவத்தினர் இருபத்தொன்பது பேரையும், இறக்கப்பட்ட கையோடு வெற்றிகரமாக எதிர்த்தடித்துவிட்டனர் எங்களுடைய போராளிகள்' என்ற செய்தி கேள்விப்பட்டதும், அந்தக்காட்சியை நேரில் காண்பதற்கென அச்சுவேலியிலிருந்து மிதிவண்டியில் திருநெல்வேலிக்குப் போய்த் திரும்பி வராமலே உயிர் பிரிந்த தனது கணவனை.. இப்போது நெகிழ்ச்சியோடு நினைவு கூர்கிறாள் செல்லம்.

இப்படிப்பட்ட தன் கணவர், சண்டை பிடித்துக் களைத்துப் போய்வரப் போகின்ற பிள்ளைகளைப் பற்றி எண்ணிப்பாராமல், திதி செய்வதற்காக கோவிலுக்குப் போகும் தன் செயலை, நிச்சயம் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பதை அவள் மனம் உணர்கிறது.

இன்று - தன் கணவர் உயிருடன் இருந்திருந்தால், இந்தச் சமயத்தில் என்ன செய்திருப்பார்..? அல்லது செல்லம் எதைச் செய்ய வேண்டும்? என எதிர்பார்த்திருப்பார் என்பதும் மனதில் கேள்விகளாக முகங்காட்டுகின்றன.

பிதிர்க்கடன் என்பது வெறுமனே ஒரு சம்பிரதாயமல்ல... ஒரு சடங்குமல்ல...

'பிதிர்கள்' என்று சொல்லப்படுகின்ற, எம்மைப் பிரிந்துபோன ஜீவன்கள், நாங்கள் எதைச் செய்தால் ஆத்மதிருப்தி அடையுமோ, அதுதான் உண்மையான - அர்த்தமுள்ள - பிதிர்க்கடன்.

செல்லத்தின் மனதில் தெளிவு பிறக்கிறது.

"உங்கடை திதியை இந்த வருசம்தான் உண்மையோட அர்த்தத்தோட செய்யப் போறன்..." என்று நினைத்தவளாய், கணவருடைய படத்துக்கு முன்னால் ஒரு நிமிடம் கை கூப்பி நின்ற செல்லம், சமையலறைக்குப் போய் அவசரம் அவசரமாக அடுப்பைப் பற்ற வைக்கிறாள்.

உரப்பையைப் பிரித்துச் சமையல் பொருட்களை வெளியே எடுக்கிறாள்.

இன்னும் சிறிது நேரத்தில் அவளைத் தேடி வரப்போகும் பிள்ளைகளுக்கு ருசியான திதிச் சாப்பாடு தயாராகிக் கொண்டிருக்கிறது.

சிவன் கோவிலில் உச்சிக்காலப் பூசைக்கான ஆயத்தமணி 'கணீர் கணீர்' என ஒலிக்கிறது.

கணவனோடு, ஒவ்வொரு போராளிகளினதும் எண்ணங்கள் அவளில் நினைவாகப் பிறக்கின்றன. தன் கையால் சோறு தின்ற பிள்ளைகள், இன்றைக்கு..

மணியொலி கேட்க, அந்த வீரர்களின் நினைவுகள் நெஞ்சிலெழுகின்றன. அவளின் விழிகளில் அவர்கள் நிறைந்து போயிருக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாவீரர்கள் உடல்கள் ஏன் புதைக்கப்பட வேண்டும்?

வீர மரணமடையும் புலி வீரர்களது உடல்கள் இனித் தகனம் செய்யப் படமாட்டாது. அவைகள் புதைக்கப்பட வேண்டும் என நாம் முடிவெடுத்துள்ளோம். இம்முடிவானது போராளிகளுள் மிகப் பெரும்பாலானோரின் விருப்பத்துக்கிணங் கவே எடுக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களை தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட "மாவீரர் துயிலும் இல்லங் களில்" இப்பொழுது மாவீரர்கள் புதைக்கப் பட்டு அங்கே நினைவுக் கற்கள் வைக்கப்பட் டுக் கொண்டிருக்கின்றன.

இது என்றென்றும் தியாகத்தின் சின்ன மாக எமது மண்ணில் நிலைபெறும்.

மாவீரர்களின் உடல்கள் புதைக்கப்பட வேண்டும் என நாம் ஏன் முடிவெடுத்தோம் என்பதையும் அதற்குரிய காரணிகளையும் இங்கே பார்ப்போம்.

**போராளிகளின் புகழுடல்கள்**

**ஏன் புதைக்கப்பட வேண்டும்?**

போராளிகள் தனிமனிதர்கள் அல்லர். அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள் அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றைப் படைக்கும் சிருஸ்டிகர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரண நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்றுச் சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டும். இந்தத் தியாகச் சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக் கொண்டே இருக்கும். அதாவது, போராளிகளின் கல்லறைகள் மக் களின் உள்ளத்தில் சுதந்திரச் சுடரை ஏற்ற உதவும் நெருப்புக் கிடங்குகளாகவே பயன் படும்.

எனவேதான் போராளிகளது உடல்க ளைப் புதைத்து, கல்லறைகளை எழுப்பி, அதை என்றென்றும் உயிர்த்துடிப்புள்ள ஒரு நினைவுச் சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகின்றோம்.

அன்புக்குரிய எமது பெற்றோர்களே, மக்களே!

எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்க ளும் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின் றோம். இந்த முடிவு, காலங்காலமாக இருந்து வந்த சம்பிரதாயம், சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கின்றது என நீங்கள் கருதலாம். ஆனால் உங்களது பிள்ளைகளான புலிவீரர் கள் இந்த நாட்டின் பொதுச்சொத்தாக, பொக்கிசமாக இருக்கின்றார்கள். பல்லாயி ரக்கணக்கான இப்பொக்கிசங்கள் வெறும் நினைவுகளாகவும், எண்ணிக்கைகளாகவும் மட்டும் இருக்கக்கூடாது.

அவை பொருள் வடிவில் என்றென்றும் எம் மண்ணில் இருந்து கொண்டேயிருக்க வேண்டும்.

இது ஒரு புறமிருக்க, எமது சகதோழர்கள்

www.tamilarangam.net

சிலரது வீரமரணத்தின் பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதைப் பாதித்திருக்கின்றன. அதாவது, பெற்றோரோ, உடன் பிறந்தவர்களோ உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போராளிகளின் இறுதிச் சடங்குகளை நாம் கண்டிருக்கிறோம்.

என்னதான் எமது தோழர்கள் சூழ நின்று தகன நிகழ்ச்சிகளை நடாத்தினாலும் கூட, அப்போராளியைப் பெற்றெடுத்த - சீராட்டி வளர்த்த தாய் தந்தையரோ, அல்லது உடன் பிறந்தவர்களோ அங்கே இல்லாதது எமது மனதை நெருடுகின்றது.

போராட்ட சூழல் காரணமாக அவர்கள் வரமுடியாது விட்டாலும் நாளை இப்பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் எதைக்காட்டப் போகின்றோம்?

ஒன்றன் பின் ஒன்றாக நூற்றுக்கணக்கான போராளிகளைத் தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டப் போகின்றோம்?

அப்படியான சூழலில் அவர்கள் படும் துயரையும், அங்கலாய்ப்பையும் அனுபவவாயிலாக நாம் அறிந்தே இருக்கின்றோம்.

எனவேதான் தனது பிள்ளையின் உடலைப் பார்க்காது விட்டாலும் கூட அவனது உடல் புதைக்கப்பட்ட கல்லறையைப் பார்த்து






## மரணம் மரித்த நாள்
## மாவீரர் பிறந்த நாள்
## நவம்பர் - 27

விஞ்ஞானத்துக்கும்
விட்டுக்கொடுக்காத மரணம்
உங்களிடம் வளையும்.

மனித மரணத்தை
பார்த்தவர்கள் நாங்கள்
மரணத்தின் மரணத்தையே
பார்த்தவர்கள் நீங்கள்.

தீயில் கருகும் எல்லாம்
அத்தீயையே கருக்கும்
நெருப்புக்கள் நீங்கள்.

எல்லாமே மண்ணாகும்
மண்ணையே உங்களுள்
புதைத்தவர்கள் நீங்கள்.

மரம் செடி கொடிகள்தான்
மண்ணிலே முளைக்கும்
ஆனால்..
மனித வித்துடல்கள்
முளைத்தெழுவது இங்கேதான்
இந்த மண்ணில் தான்!

யேசு உயிர்த்ததாய்
பைபிள் சொன்னது
நீங்கள் உயிர்த்ததை
நாங்கள் பார்த்தோம்!

அண்டவெளிக்குள்
அடங்கும் அத்தனையும்
அந்த அண்டமே அடக்கம்
உங்களுக்குள்.

சூரியன் என்ன?
சந்திரன் என்ன?
உங்கள் கண் சிவந்தால்
சூரியன் கறுக்கும்.
கனல் மூச்சுப் பட்டாலே போதும்
கடல் காயும்.
வியர்வை தெறித்தால்
வெண்மதி நூர்ந்து போகும்.

காற்றையும் கட்டி வைக்கும்
வல்லமை உங்களுக்கு.

கடலையும் மடக்கத் தெரிந்த
சித்தர் கூட்டம் நீங்கள்.

மரணத்துக்கும்
ஒரு நாள் மண் அள்ளிப் போடுவோம்!
சாவையும்
ஒரு நாள் சிதையில் வைப்போம்!
தீயே!
உனக்கும் ஒரு நாள் தீ மூட்டுவோம்!

- துறையூரான்

www.tamilarangam.net

ஓரளவு ஆறுதல் அடையவாவது நாங்கள் உதவிசெய்வோம். அத்துடன் அடிக்கடி அக்கல்லறைக்குச் சென்று அவனது நினைவு களை மீட்டுப்பார்ப்பதுடன் ஓர் ஆத்ம திருப் தியையும் அவர்கள் அடைந்து கொள்வார் கள்.

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோக மானதுதான். ஆனால் அந்தச் சோகத்தை மறக்க வேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்க முயற்சிப்பதாக இருக்க முடி யாது தானே!

கல்லறைக்கு மீண்டும் மீண்டும் செல்வ தால் சோகம் அதிகரிக்கும் என்றில்லை. உண்மையில் அப்படிச் செய்வதால் மன நிம்மதி அடையும்.

'எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. தகனம் செய்வதற்குப் பதிலாக புதைப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்கு முரணான செயலல்லவா?' என யாராவது வினா எழுப் பலாம்.

நீண்டகாலம் தொட்டு இருந்து வரும் 'தகனம் செய்வது' தமிழரின் பண்பாடு என எண்ணுவது தவறானது. உண்மையில் பண் டைய தமிழர் பண்பாட்டில் இறந்தவர்களது உடல் புதைக்கப்பட்டு நடுகல் வைக்கப் பட்டதாக போதுமான வரலாறுகள் உண்டு. புறநானூற்று இலக்கியமும் ஈமத்தாளி வடி விலான தொல்லியல் சான்றுகளும் நடுகற் களும் இதை நிரூபிக்கப் போதுமானது.

ஆனாலும் இந்த ஆராய்ச்சிகள் ஒரு புற மிருக்கட்டும். உண்மையில் இந்த முறையை ஒரு சமூக சீர்திருத்தமாக நாங்கள் செய்ய வில்லை. இது போராளிகளுக்கு மட்டுமே பொருந்தும். பொதுமக்களுக்கல்ல. எனவே இங்கே பண்பாட்டுப் பிரச்சினை எழ நியாயமில்லை. அத்துடன் புதைப்பது என்ற முடிவானது வெறும் இறுதிக்கிரியை நிகழ்ச்சி அல்ல. அது போராட்டத்தை உயிர்ப்புடன் என்றென்றும் வைத்திருக்கும் ஒரு சரித்திரத் தியாகத்தின் சின்னம்.

# அஞ்சலி செலுத்தி ஆராதிப்போம்



ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கோடி
ஆண்ட நம் தமிழர் வாழ்ந்த எம்பூமி
மீண்டிட வேண்டி மலர்ந்த நல்தோழர்
நீண்ட தம் ஆயுளை நிலைத்திட எண்ணார்
பாண்டவர் புரிந்த பாரதப் போரும்
பைந்தமிழ் ஈழப் புலிகளின் போரும்
ஆண்டவர் போற்றும் அற்புதப்போரே - இதில்
மாண்டவர் மடிந்தவர் மனிதர் அல்லர்
மாதவம் உற்ற மாசிலா மேனியர்
மாணவர் ஆனவர் மன்னரைப் போன்றவர்
ஆனவர் ஆயவர் அறிவிலும் மேலவர்
வானவர் போலநல் வல்லமை பெற்றமா
மனிதராய் ஆன மறத்தமிழ் வீரர்

மார்பினை மண்ணின் கேடயம் ஆக்கி
மனவலிமையை போர் ஆயுதம் ஆக்கி
தோள்களில் துன்பம் யாவையும் ஏந்தி
துணிகரம் மிக்க திறம்படை ஆகி - எதிரியை
தருணம் பார்த்துத் தாக்கி அழித்திட
ஆன்மபலம் மிக்க அண்ணனும் தம்பியும்
ஆசைகள் துறந்த
அக்காவும் தங்கையும் ஒன்றாய்
மண்ணினை மீட்க கண்ணினை மூடி
கத்தியில் நடந்த தர்ம வீரர்

கரும்புலி கடற்புலி பெரும்புலி தரைப்புலி
பெண்புலி பலவும் போர்க்களம் வென்று
புண்ய பூமிக்கு அடித்தள மாகி
பொன்னும் மணியுமாய் பளிச்சிடும் இரத்தினமாகி
விண்ணிலும் மண்ணிலும்
வாழும் மழைத்துளியிலும்
கண்ணிலும் கடைக்கண் விழியிலும்
தூணிலும் துரும்பிலும் துலங்கும் ஒளியிலும்

இருளிலும் ஒலியிலும் இரண்டறக் கலந்து
அகிலம் எங்கணும் அணையாத ஜோதியாய்
அனைவரும் போற்றும் அபூர்வச் சுடர்களே

திட்டம் போட்ட தினம் தவறாமல் - எதிரியின்
தளத்தினை அடித்து தத்தம் உயிர்களை
தமிழ் மண்ணிற்காக தற்கொடை யாக்கி
இரத்தம் சொட்டச் சொட்ட
இன்னுயிர் நீத்திடும்
இன்னரும் வீரமாவீரர் - இவர்க்கு
ஈகைச் சுடரை ஏற்றித் தொழுவோம்

ஆலயம் தொழுவது சாலவும் நன்றெனச்
சொன்னது முன்பு - அதனினும் நன்று
தமிழீழ மாவீரரைத் தொழுவது - என்றுமே
இன்றைய எம்மவர் தொண்டு
அஞ்சலி செலுத்தி ஆராதிப்போம்.

- உலகத் தமிழர் இயக்கம், கனடா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாயிலும் மேலான மாவீரா!

தாயின்பம் பெற்றுவிட உனைச் சுமந்தாள் - போரில்
நீயென்ன பெற்றதாலே உயிரையும் தந்தாய்?
வாயில்லாப் பூக்களது வாழ்வு மலரும் - அவர்
வாய் திறந்து பரணி பாடும் நாள் தெரியும்.

தீயொன்று உள்ளமதில் கொழுந்து விட்டதா? - ஊரில்
தீமைகண்டு உன்னிதயம் வெம்பி அழுததா?
பாய்விரித்து உறங்கிவிட மனம் வெறுத்ததா? - உன்னை
பாயும்புலி வீரனாகிப் போகச் சொன்னதா?

வானமதில் வெள்ளிஒன்று நின்றது கண்டாய் - தமிழர்
வாழ்வுயர வேண்டுமென வாழ்ந்தது கேட்டாய்
கானகத்து வாழ்வதனை காதலித்துச் சென்றாய்
கண்துயிலாக் காவலிலே இன்பமா சேர்த்தாய்?

ஈகையிலே வருவது பேரின்பம் என்றார் - உயிர்
ஈகமது செய்து நீயோ இன்பங் கண்டாய்
சோதரியர் கைகளிலே விலங்குகள் போட்டார் - வாழும்
சுதந்திரத்தை சிலபேய்கள் தீண்டியும் விட்டார்.

உன் குருதிச் சிவப்பாலே விடியல் தெரிந்தது - படைகள்
ஊரைவிட்டு முகாமுக்குள் ஒதுங்கிப் பதைத்தன
நின் ஆவி கரைந்ததாலே கடல் எழுந்தது - அங்கே
நின்று முழங்கிய நேவியின் கப்பல் மறைந்தது.

தமிழீழம் ஒன்றே உன் தாகம் என்றாயே - இதைத்
தாங்கிய நெஞ்சுக்குச் சாந்தி வேண்டாமா?
தமிழர் துயரைநீ தாங்கி நடந்தாயே - நாமும்
தாங்கிச் சுமத்தலன்றி வேறெது வேண்டும் கூறு!

**- ஹேமராஜ்**
**(லண்டன்)**



# காவல் தெய்வங்கள்

மற்றவர் வாழ்விற்காக
மண்ணிலே புதைந்த
வீரமறவர்கள்.
நாங்கள் வாழ
உருகி ஒளிர்ந்த மெழுகுகள்.
இரவில் விழியுறங்காது
கால் கடுக்கவிருந்து
இருளை விரட்டி
விடியலை விடுவித்தவர்கள்.
அகதியாய் அலையாமல்
தமிழனின் புதிய வரலாற்றை எழுதிய
காவிய நாயகர்கள்.
முகம் தெரியாத
இருட்டு வாழ்க்கைக்கு
இடமளிக்காமல்
போருக்கு புறப்பட்ட
புரட்சிப் பூக்கள்.
தமிழீழ எல்லைக்கே
வேலியாய் நிரைத்த
எல்லையோரக் காவலர்கள்.
தாயவள் விலங்குடைக்க
தன்னுயிர் ஈய்ந்திட்ட
தற்கொடையாளர் நீங்களன்றோ
தமிழீழ காவல் தெய்வம்.

**- தி. இளவரசன்**
**(நெதர்லாந்து)**

www.tamilarangam.net




# மலரின் மணம்

பூ பூவா பூத்திருக்கும் ஆயிரம் பூ பூமியிலே
புன்னகையும் ஒரு பூவே பூவையரின் முகத்தினிலே
தண்ணொளியும் தாவரங்கள் தாவி மலர் பரப்பும்,
தாமரையும் தண்ணீரில் தான் நனைந்து பூ முளைக்கும்
இங்கே இவன் கூறும் இந்தப் பூ?
மணம் வீசும் மண் பூவாம் மாய்கின்றேன்;
மண்டைதனை பிய்க்கின்றேன்
தேடுகிறேன் ஓடுகிறேன் இருள் சூழும் அந்தியிலும்
உதயத்தின் அரும்பதிலும், வெள்ளி பூத்தொரு நேரத்திலும்,
எனக்கெதுவும் புரியவில்லை.
மண் பூக்கும் மலரின் மணம் தெரியா என் மூக்கின்
மூச்சிரைக்கும் முனகலினால்
மூச்செடுக்க சற்று அமர்கிறேன்

செல்லரித்த வீடொன்றில் செருமல் ஒலியுடன்
சொல்லென்று செவியில் தேனாகத் தெவிட்டியது
மண்பூக்கள் மூன்று மன்னாரில் மலர்ந்ததுவே.
நாண் அறுந்த வில்லுப்போல்,
கூன் நிமிர்ந்த கிழவர் குதறிய வார்த்தையிது
வில்லில் அம்பு போல் விரைந்தருகில் சென்று
சொல்ல வேண்டும் சொல்லரிய வார்த்தையிது.
மண்பூக்கும் மலர் எந்தனுக்கு புரியவில்லை மடையன் நான்
மலங்க விழியுயர்த்தி மதிப்புடனே முகம் பார்த்தேன்
மண்ணுக்காய் மகனையிழந்த மாமனிதக் கிழவரிவர்
குவிந்திருந்த மலரொன்று மலர்ந்தது போல் வாய்திறந்து
சுயத்தைக் கொன்றிடுவாய் சொந்தத்தை மறந்திடுவாய்
இதயத்தை மண்ணுக்காய் இரங்கி நீ விட்டிட்டால்
மறவீரன் உரு எடுப்பாய் மலர் வனமும் சென்றடைவாய்.
மாவீரன் ஆவதற்கு மனம் கொஞ்சம் இடருமென்றால்
சிறந்த அக் காட்சி தனை மறந்திடுவாய் என்றுரைத்தார்.
ஆனாலும்,
இவ்வூரின் மத்தியிலே இருக்கின்ற இல்லமொன்று,
பவ்வியமாய் பாதுகாக்கும்
பாசமலர் பல நூறு

மண் பூக்கள் மலர்ந்தவுடன் மதிப்பாக எடுத்து வந்து
மலர் அடுக்கி வைத்திருக்கும் மாண்பதனைப் பாரிங்கே,
அப்பாலும் கூறுகின்றேன்... தப்பாமல் கேட்டிடுவாய்,
நவம்பர் மாதமதில் நல்லதோர் செய்தி சொல்லும் தேதியோ இருபத்தியேழு.
சுகந்தமிங்கே வீசுமப்பா, சுடரோளியோ கண் பறிக்கும்,
அகமெல்லாம் ஒளிபரவும்.
இன்னும் சொல்வேன் இருள் விலக கேட்டிடுவாய்....
மண் பூக்கள் மலருமந்த நேரத்தில்
மண் சிவக்கும், மரம் சிவக்கும், கொடி சிவக்கும்,
பூ சிவக்கும், மழலைகள் முகம் சிவக்கும்

உதயத்தின் அறிகுறியாய், வான் சிவக்கும்.
மண்ணுக்காய் மண்ணில் மரணித்த மாவீரன் போல் மண் பூக்கும்.
புதிதாய் மலருகின்ற புதுமை மிகு மலர் கண்டேன்; விடியலுக்காய்
விழுகின்ற வீரமிகு மலர் கண்டேன்.
மண்ணுக்காய் மணம் பரப்பும் மாவீரன் மலர் கண்டேன்

என்ன தான் செய்தேனோ மண்ணுக்காய்
எதுவுமே செய்யவில்லை ஏக்கமுடன் எழுகின்றேன்; நடக்கின்றேன்.
ஏறி நின்ற உணர்வுதனை இறக்கி விட மனமுமில்லை.
மண் பூக்கும்; பூவின் மாண்புதனை கேட்டு, மனம் மாறி செல்கின்றேன்.

**உலகநாடன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# No Homecoming

*"What is the greatest wonder of all?"*
*"Every day Death takes lives beyond counting, yet those who live think: Death can never come this day to me."*
*- MAHABARATA*



She cries out as he turns and walks away
Around his neck a cyanide capsule hangs like a noose,
the tropical winds make it sway.
The child who once suckled her breasts,
leaves her now as she beats her chest.
He marches off this boy, who looks like a toy soldier
I wonder if he will live to see older
Fifteen years old, just hit puberty
He marches off to fight for liberty.
While others chase women down city streets
He chases the enemy and hopes to never meet
Yemen in some dark corner come to take him neither
Will he come home?
When?
When will her son come home?

As I sit in front of my computer screen playing Doom;
he sits on guard looking up at the moon
His finger on the trigger of his AK-47 wondering if he'll ever see heaven
Homework, girls, acne: I don't think I can cope
He has lost his virginity he fights to preserve his hope.
My brother cries out in the next room I come rushing
Yet at home my brothers are dying, from their wounds
a nations's blood is gushing;
Kali stalks the battlefield; not a drop of blood shall pollute the ground
She drinks like a wench, her thirst never ending,
In orange saffron robes she doth dress
head is shaved yet her hair is a mess
Yet here I sit in resplendent splendour
my four bedroom two bath room brick veneer suburban home
I am a Tamil 'tiger' but you will not hear me roar
I have been civilised by the white man
I will try hard not to whimper

Will he come home?
When?
When will my brother come home?

We will fight them on the beaches and fight them on the shores,
a great man did once say
but here they fight in temples and in churches.
For them it is a game, but we do not want to play.
The sky rains down lightening bolts
here lightening does strike the same place twice
They scurry into bunkers like frightened mice.
Like Shiva's cosmic dance their suffering is never ending
but for their pride there will be no bending.
She prays "Oh Lord grant me this boon:
not for me rebirth, I shall live in your matted hair next to the moon."
Where the lightening bolt struck lies a twisted body
It is an infant; she managed to save her teddy
Another mother weeps
She knows
Her child will not come home

Slowly she moves into the crowd
Today she will make her people proud
Around her waist she feels the devil's breath
From whence others bring life she will bring death.
Not for her are brightly coloured sarees and twenty four carat jewellery
In heaven is where she will face her jury.
Once a country without heroes now a nation of martyrs
As she prepares to free her athma her nerve falters
In her mind she can see herself running through paddy fields and rubber plantations
Giggling and laughing, as innocent as a morning flower.
But they came and drained her nectar, condemning her to wither.
She closes her eyes and closes her brain
as angels weep it begins to rain.
Every soldier must die in history
She pushes a button and creates a mystery.
She will not come,
There will be no homecoming.......

- செல்வன் பிரசன்னா சந்திரகுமார்
அவுஸ்திரேலியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனையிறவுச் சமரில் வீர மரணத்தைத் தழுவிக்கொண்ட கப்டன் கஸ்தூரியினால் இறுதியாக எழுதப்பட்ட (எழுதி முடிக்கப்படாத) கவிதை வரிகள் இவை.



# இறப்பற்றோர்...



வெட்டப்பட்ட கரங்கள்
வேகமுடன் வளர்கின்றன.
முறிக்க முறிக்க
முளைவிடும்
மூர்க்கமான செடியைப் போல்,
கத்தரிக்கப்பட்ட கரங்கள்
கணுக்களைப் பிரசவிக்கின்றன.
சிதைக்கப்பட்டவைகள்
சிவப்பாக வெடிக்கின்றன.

நெரிக்கப்பட்ட குரல்வளைகள்
நெருப்பு வரிகளில்
முற்றுகையை எதிர்த்து
முழக்கமிடுகின்றன....

சூடுபட்ட,
சுவாசப் பைகள்
ஆக்கிரமிப்பாளனை
அவிப்பதற்கு
விடுதலை மூச்சை
வெம்மையாக
வெளியேற்றுகின்றன.

இறந்து போனான்
என எதிரியவன்
எக்காளமிடுகையில்,
பிணங்கள் இங்கே
பிறவி எடுக்கின்றன.

எதிரிகளே.....
துடிக்கப் பதைக்க
வதைத்துக் கொல்லுங்கள்:
அதனாலென்ன!
துண்டிக்கத் துண்டிக்கத்
துளிர்ப்பார்கள் வீரர்கள்.

எங்கள் எல்லை நீங்கி
உங்கள் படைகள்
ஓடும் வரை,
எங்கள் வீரர்க்கு
இறப்பே யில்லை.

உரிமை வேண்டி
உயர்ந்த கரங்கள்
ஆக்கிரமிப்புகளுக்கு
அடிபணிந்து போகாது!...

www.tamilarangam.net

# மாவீரர்நாள் மலர் வெளியீடு, மாவீரர்நாள் மண்டப வாடகை ஆகிய செலவீனங்களை ஈடுசெய்ய நிதி உதவி புரிந்த பிரான்ஸிலுள்ள தமிழீழ வர்த்தக நிறுவனங்கள்

| | | | |
|---|---|---|---|
| குமார்ஸ் ரேட்ஸ் சென்ரர் | 42 05 41 36 | அன்ரனி ரெக்ஸ்டைல்ஸ் & வீடியோ | 42 09 28 41 |
| சக்தி எம்போறியம் | 42 09 76 14 | திருப்பதி பஷன் கவுஸ் | 40 37 56 44 |
| கபறினா இன்ரர்நெஷனல் | 42 09 96 96 | தங்க மாளிகை | 46 07 14 97 |
| பொன் கலைக்கூடம் | 42 43 42 65 | தவம் வீடியோ சென்ரர் | 42 09 35 53 |
| மாலா மளிகை | 42 62 01 23 | அகிலன் வீடியோஸ் | 42 65 03 20 |
| மயூரா சலூன் | 40 35 79 33 | எம். ஜி. எஸ். | 42 05 63 89 |
| காயத்திரி | 42 09 22 43 | சசி வீடியோ விஷன் | 42 09 18 88 |
| சபறினா உணவகம் | 42 05 05 68 | ரமணன் வீடியோ பலெஸ் | 42 05 77 75 |
| யாழ்ரா | 48 38 26 26 | லூரன் இன்ரர்நஷனல் | 42 09 21 43 |
| உருத்திராஸ் | 48 35 22 89 | எம். ஜி. பி. N°1 வீடியோ விஷன் | 46 07 22 04 |
| அபிராமி சால் | 44 72 99 69 | லாலா உணவகம் | 42 52 22 02 |
| அகில் ரெக்ஸ்டைல்ஸ் & வீடியோ | 42 09 89 33 | செல்வன் கபே | 42 62 13 55 |
| வனஸ்பதி ரெக்ஸ்ரைல்ஸ் | 40 36 29 38 | சாந்தினி உணவகம் | 42 58 71 19 |
| ஹப்பி ரெக்ஸ்டைல்ஸ் சால் | 40 05 08 09 | சக்தி வீடியோ | 42 52 53 01 |
| வசந் சலூன் | 42 09 72 94 | கிருஷ்ணபிள்ளை மொழிபெயர்ப்பாளர் | 42 54 14 60 |
| சிறீமகால் | 46 07 83 12 | ரூபி நகைமாளிகை | 46 06 94 11 |
| கோல்டன் ஸ்ரார் | 42 09 26 50 | கிருஸ்ணா அச்சகம் | 42 51 29 92 |
| அம்பாள் நகைமாளிகை | 42 09 36 25 | நொயல் வீடியோ பஜார் | 42 52 19 66 |
| அம்பாள் வீடியோ ரெக்ஸ்டைல்ஸ் | 42 09 33 81 | கிருஸ்ணா பலஸ் | 42 51 66 70 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைக்கு வித்திட்ட வீரக்கொழுந்துகளே!
வணங்கி நாம் ஒன்றுரைப்போம் - இனி
எமது பெயர் கார்த்திகைப் பூவல்ல!
இன்று முதல் நாங்கள் மாவீரர் மலரானோம்!



வெளியீடு: தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகம் - 211, Katherine Road, London E6 1BU, United Kingdom.